48

# ஸ்ரீ நாட்டு மருந்துகள்.

௧௯௩௭.

விலை ரூ. 3—50.

N57

01769

# நம் நாட்டு மருந்துகள்.

## (INDIGENOUS REMEDIES)

இதில் நமது தென்னாட்டில் அதிகமாகத் தெரிந்திருக்கும் மருந்துகளின் ஹோமியோபதி உபயோகங்கள் அனுபவ குறிப்புகளுடன் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் அவைகளின் அலோபதி, ஆயுர்வேத உபயோகங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.


ஆசிரியர்:

டாக்டர், S. சீனிவாசன்,

*ஹோமியோ பிசிஷியன் & ஸர்ஜன்.*



ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,

பிரசுர உரிமை பெற்றது. | திருவாரூர். 1957. | விலை ரூ. 3—50.

LL
N57

101769



"யஸ்ச ஆமயோ பூதானும்
யேன ஜாயதே ஸ"வ்ரத
ததேவ ஹி ஆமயம் த்ரவியம்
ந புனுதி சிகித்ஸிதம்!" —'பாகவதம்'
(1—5—33)

**Dr. S. SRINIVASAN,**
ஹோமியோ பிஸிஷியன் & ஸர்ஜன்.
திருவாரூர்.

# அட்டவணை.


| வரிசை எண். | மருந்தின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1. | பொங்கேமியா (Pongamia G) | 6 |
| 2. | அகாலிபா (Acalypha I) | 11 |
| 3. | ஸொலானம் சாந்த் (Solanum X) | 14 |
| 4. | டெர்மினேலியா செ. (Terminalia-C) | 17 |
| 5. | நிக்டான்தஸ் (Nyctanthes-A) | 20 |
| 6. | பைகஸ் ரிலிஜி (Ficus-R) | 24 |
| 7. | பைகஸ் பெங் (Ficus-B) | 27 |
| 8. | ஆன்ட்ரா கிராபிஸ் (Andrographis) | 29 |
| 9. | அப்ரோமா (Abroma A) | 33 |
| 10. | காரிகா பாபயா (Carica P) | 37 |
| 11. | அஜடிராக்டா (Azadirachta) | 41 |
| 12. | போர்ஹேவியா (Boerhavia-D) | 47 |
| 13. | கர்கூமா (Curcuma-L) | 50 |
| 14. | சிராடா (Swertia-C) | 51 |
| 15. | ஹைக்ரோபிலா (Hygrophila-S) | 55 |
| 16. | டிரைகோசாந்திஸ் (Trichosanthes-S) | 57 |
| 17. | ஓல்டென்லாண்டியா (Oldenlandia-H) | 64 |
| 18. | டெர்மினேலியா அ (Terminalia-A) | 65 |
| 19. | ரைட்டியா (Wrightia-T) | 69 |
| 20. | சராகா இண்டிகா (Saraca-I) | 72 |
| 21. | அகிரான்தஸ் (Achyranthes-A) | 76 |
| 22. | ஆன்டெர் சோனியா (Andersonia) | 80 |
| 23. | அடிஸ்டா (Atista-I) | 83 |
| 24. | லுப்பா அமாரா (Luffa-A) | 87 |
| 25. | டாமரிண்டஸ் (Tamarindus-I) | 90 |
| 26. | சர்பண்டிஞ (Serpentina-R) | 91 |
| 27. | சைனோடான் (Cynodon-D) | 95 |

| வரிசை எண். | மருந்தின் பெயர். | பக்கம். |
| --- | --- | --- |
| 28. | பைபர் லாங்கம் (Piper-L) | 98 |
| 29. | ஆடாதொடா (Adhatoda) | 99 |
| 30. | காலோட்ராபிஸ் (Calotropis-I) | 104 |
| 31. | ஹைட்ரோகாடைல் (Hydrocotyle-A) | 109 |
| 32. | காசியா சோ (Cassia-S) | 117 |
| 33. | அர்ஜிமோனா (Argemona-M) | 118 |
| 34. | ப்ளாட்டா ஓ (Blatta-O) | 128 |
| 35. | லூகஸ்-ஆ (Leucas-A) | 128 |
| 36. | டினோஸ்போரியா (Tinosporea-C) | 130 |
| 37. | ஈகில் மார்மலஸ் (Aegle-M) | 132 |
| 38. | சீசல்பினியா (Caesalpinea-B) | 138 |
| 39. | மொரிண்டா (Morinda-T) | 141 |
| 40. | விடெக்ஸ் (Vitex-N) | 143 |
| 41. | டிராகியா இ (Tragia-I) | 144 |
| 42. | சைஜிஜியம் (Syzigium J) | 147 |
| 43. | சான்டாலம் ஆல் (Santalum-A) | 149 |
| 44. | லாசோனியா (Lawsonia-A) | 150 |
| 45. | தெஸ்பெசியா (Thespesia-P) | 152 |
| 46. | அரிஸ்டோலோகியா (Aristolochia-B) | 153 |
| 47. | ஓசிமம் (Ocimum-S) | 158 |
| 48. | சிபலாண்டிரா (Cephalandra-I) | 163 |
| 49. | ஜிம்னெமா (Gymnema-S) | 166 |
| 50. | அசுவகந்தா (Withania-S) | 169 |
| 51. | ப்ளூமியா (Blumea-O) | 170 |
| 52. | எம்பெலியா (Embelia-R) | 171 |
| 53. | காசிபியம் (Gossypium-H) | 173 |
| 54. | மொமார்டிகா (Momordica-O) | 174 |
| 55. | ப்ளம்பாகோ (Plumbago-Z) | 174 |
| 56. | சொரேலியா (Psoralea-C) | 176 |


# முன்னுரை.

நம்நாட்டு மருந்துகளென்றால் என்ன என்று சிலருக்கு ஐயமெழுவது சகஜம். இப்புத்தகத்தில் பெரும்பாலும் தமிழ் அகத்தில் காணப்படும் மருந்து மூலிகைகளின் மெட்டீரியா மெடிகா ஹோமியபதி முறைப்படி விவரிக்கப்பட்டிருக்கிறது.

ருக்வேதகாலத்திலிருந்து பச்சிலை மூலிகைகளின் குணங்கள் ஆயுர்வேத சாஸ்திர மூலமாக இந்தியா முழுவதும் பிரபலமாக இருந்தது. ஆனால் அன்னியர்கள் வந்த பிறகு அலபதிக் வைத்தியமும் புகுத்தப்பட்டது. அதன் பலனாக நமது பழய ஆயுர்வேத வைத்தியம், அதன் பொக்கிஷங்கள் மறந்துபோய்விட்டது.

சுதந்திரம் வந்தபிறகும் அன்னியர்களை பார்த்து காப்பி அடிக்கும் நமது தலைவர்கள் எது நல்லது கெட்டது என்று ஆராயத் திறமையில்லாமல் அலபதிக் வைத்தியம்தான் நிஜமான வைத்தியம் என்று மனப்பிராந்திகொண்டு வீண் சிலவும் ஆடம்பரமும் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

மிக அருமையான நம் நாட்டு மருந்துகள் இதுகாறும் கவனிக்கப்படாமலேயே இருந்துவந்தன. உதாரணமாக பல மருந்துகளைச் சொல்லலாம். அதாவது:- ஆலமரம் அரசமரம், அசோகமரம், வாஸகம், சர்ப்பகந்தி முதலியன. பழையகாலத்தில் அசுவத்த மரத்தை பிரதக்ஷிணம் செய்து

வந்தால் ஸ்திரீகளுக்கு கர்ப்பாஸய வியாதிகள் நிவர்த்திக்கப்படுகின்றன என்று பழங்காலத்திலேயே இருந்துவந்தன. அதற்கு சான்றாக அரசமரத்தை ஹோமியோபதி முறையில் பரீக்ஷை செய்து பார்த்ததில் உதிரப்பெரும்பாடு, நிவர்த்தி ஆகிறது என்று நன்றாகத் தெரிகிறது. ஆகவே அரசமரத்து காற்று படப்பட கர்ப்பாஸய வியாதிகள் நிவர்த்தி ஆகக்கூடும் என்பது கண்கூடாகத் தெரிகிறது. ஆனால் அலபதியர்களுக்கு இன்று வரையில் நிச்சயமாக அரசமரத்தின் உபயோகமே தெரியாது. கர்னல் சோப்ரா அவர்களின் புஸ்தகத்தில் இது ஏதோ தோல்வியாதிகளுக்கு கஷாயமாக ஹிந்துக்கள் உபயோகப்படுத்துகிறார்கள் என்று விட்டுவிட்டார். எவ்வளவோ விஷயங்கள் அலபதியர்களுக்குத் தெரியாது. அவர்கள் தெரிந்துகொள்ளவும் போகிறதில்லை. இன்னும் எவ்வளவோ உதாரணம் சொல்லலாம். ஆனால் அதற்கெல்லாம் இச்சிறு புஸ்தகம் போதாது.

இன்னொரு உதாரணம் சொல்வோம்:— மஹாபாரதத்தில் அவந்தி என்ற நகரில் சாந்தீபனி என்ற ரிஷி என்பவர் இருந்துவந்தார். அவருக்கு உத்தாலகர் என்ற சிஷ்யர் இருந்துவந்தார். ஒரு நாள் குருவின் மாடுகளை மேய்க்கப் போன இடத்தில் பசி தாங்காமல் எருக்கு இலையைத்தின்று கண் இழந்து பிறகு சிகிச்சை செய்து கண் ஒளி பெற்றதாக சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தூண்டப்பட்டு எருக்கு (அர்க்கம்) ஹோமியோபதி முறையில் ப்ரூவ் செய்யப்பட்டு கண்ணுக்கு சிறந்த மருந்தாக கருதப்பட்டு வருகிறது. இம்மாதிரி நமது புராணங்களிலிருந்து அனேக சான்றுகள் எடுத்து உரைக்கலாம். தாமரைப் புஷ்பம் அதுவும் செந்தாமரை ஹிருதயத்துக்கு நல்ல மருந்து என்று நமது முறையில் கண்டுபிடிக்கப்பட்



டிருக்கிறது. அதேமாதிரி வெள்ளைத் தாமரை அல்லி முதலியன சிறு மூளைக்கும் நரம்புகளுக்கும் சிறந்த மருந்து என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்து மதத்தில் வெள்ளைத் தாமரையின்மேல் அறிவிற்கு அதிதேவதையாக ஸரஸ்வதியையும் செந்தாமரையின்மேல் பாக்கியத்திற்கு அதிதேவதையாக லக்ஷ்மியையும் வர்ணித்திருக்கிறார்கள். அறிவிற்கு இருப்பிடம் மூளையும் நரம்புமே. வெண்ணிறமும் பொருந்தியவை. ஆகவே வெண்தாமரை வெண்ணிறமான நரம்புஸ்தான சிறு மூளையிலே வேலை செய்கிறது. பாக்கியம் என்றால் நம்சரீரத்துக்கு ஹிருதயம், இரத்தாசயம் தான். செந்நிறமான இரத்தம் இல்லையேல் சரீரம் ஆரோக்கியமாக வாழமுடியாது.

மேற்சொன்னவைகள் ஹோமியோபதியின் உயர்வை காண்பிக்கின்றன.

அன்னியநாட்டு மோஹம்பிடித்த அலபதியர்கள் வசம் வைத்திய சாஸ்திரம் இருக்கும் வரையில் ஜனங்களுக்கு நற்காலமில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது. தற்காலத்தில் நமது ஏழை இந்தியாவிற்கு உகந்த வைத்தியம் ஹோமியோபதிதான். வைத்தியமும் சிறந்தது. பூர்ண குணமும் அளிக்க வல்லது, சுலபமாக கையாளக்கூடியது, சிக்கனமானது, ஆபத்தும் இல்லாதது. இந்த வருடந்தான் சில ராஜ்ய சர்க்கார்கள் ஹோமியோபதி ஆஸ்பத்திரிகளும் கல்லூரிகளும் நிறுவியிருக்கிறார்கள். ஆகவே ஹோமியோபதிக்கும் நற்காலம் பிறந்துவிட்டது என்று நாம் நம்புகிறோம்.

இச்சிறு புத்தகத்தில் தமிழ் ஹோமியோபதியர்களுக்கு உபயோகமாக இருக்கும்படியாக எம்மால் கூடியவரையில் முக்கிய மருந்துகளை முக்கிய உபயோகங்களுடன் கூடிய அநுபோக பூர்மாக விவரித்திருக்கிறோம்.

சில மருந்துகள் ஆசிரியராலேயே சுயமாக ப்ரூவ் செய்யப்பட்டு ஆசிரியரின் நீண்ட காலத்தின் பயனாக இப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எவ்வளவு சிரமப் பட்டு புதிய மருந்துகளை கண்டு பிடித்து அனுபோகத்தில் கொண்டுவந்தாலும் நம் நாட்டு ஹோமியோபதியர்கள் கண்டுபிடித்தவற்கு ஊக்கம் அளிப்பதற்கோ, மருந்துகளை ஊக்கத்துடன் அனுபவத்தில் கையாளுவதற்கோ முன்வரவில்லை. இச் சிறு புத்தகத்தில் கண்டுள்ள மருந்துகளின் உதவிகளைக்கொண்டு அனேகம் அனேகம் வியாதிகளை சௌகரியம் பண்ணலாம். ஒரு மருந்து அதுவும் நம்நாட்டு மருந்து முழுவதும் ப்ரூவ் செய்யப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு மருந்து பல சரீரங்களிலும் பலதேச காலவர்த்தமான நிலைகளிலும் பலருக்கும் கொடுக்கப்பட்டு ப்ரூவ் செய்யவேணும். இதற்கு பலகாலமாகும். ஆகவே இப்புத்தகத்தின் கண் சில மருந்துகள் பூர்ணமாக ப்ரூவ் செய்யப்படாவிட்டாலும்கூட பல ஹோமியோபதியர்களும் உபயோகித்து அவரவர்களின் உபயோகத்தில் கையாண்டு நோயாளிகளுக்கு சௌஸ்தம் செய்தாலே இப்புத்தகம் எழுதியதின்பலன் நாம் அடைந்துவிட்டோம் என்று கருதுகிறோம். எல்லா ஹோமியோபதியர்களும் இம மருந்துகளை கையாண்டு அவரவர்களின் அனுபோகங்களை ஆசிரியருக்கு தெரிவித்தால் அவைகளை சேகரித்து ஏனையவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு சௌகரியமாய் இருக்கும்.

சில பழைய ஹோமியோபதியர்கள் இந்தியா மருந்துகள் என்றாலே கொடுப்பதற்கு தயங்குகிறார்கள். உதாரணமாக ஒரு இரத்தப் பெரும்பாடு என்றால் ஹிமமலீஸ் கொடுப்போமோ டிரிலியம், மில்லிபோலியம் பல்ஸாடில்லா போன்றவைகளை கொடுக்கலாமே என்று



யோசனை செய்கிறார்களேயொழிய பைகஸ் ரிலிஜியோஸாவோ அசோகாவோ கொடுப்பதற்கு தயங்குகிறார்கள். இது எப்பொழுதும் ஹோமியோபதி முறையில் வளர்ச்சிக்கு சரியானவழி அல்ல. உதாரணமாக ஒரு இரண்டு வயது குழந்தைக்கு பலத்த கக்குவான் இருமல் இருந்தது. மூன்று பிரபல ஹோமியோபதியர்கள் பிரபலமான ஹோமியோபதி மருந்துகளை கொடுத்தும் பயனடையவில்லை. டாக்டர் S. C. கோஷ் என்பவர் அக்குழந்தைக்கு ஜஸ்டீஷியா ஆடாதொடா IX வீரியத்தில் கொடுத்து வெகு அற்புதமாகவும் துரிதமாகவும் சௌகரியப்படுத்தினார். நம் ஆசிரியரின் அனுபோகத்திலிருந்தும் இம் மாதிரி பல உதாரணங்கள் சொல்லலாம். ஆனால் விவரிக்க இடம் போதாது

மருந்துகளை ப்ரூவ் செய்வது என்பது மிகவும் கடினமானதும், இன்பகரமான துறை. பாடுபடப்பட ஊக்கமளிக்கும்.

சில சமயம் ஹோமியோபதி குணங்களும் அலபதி ஆயுர்வேத உபயோகங்களைப் பற்றி கூடிய வரையில் ஆங்காங்கே எழுதி இருக்கிறோம். தென்னிந்தியாவில் அரும்பெரும் மூலிகைகள் ஆராயக்கிடக்கின்றன. ஆராய்ந்து அறிவுலகிற்கு ஈயவேண்டுமென்பதே எமது அவா. இப் பணியில் இச் சிறு புத்தகம் ஓரளவு வெற்றிபெறுமென்று நம்புகிறோம்.

இம் முன்னுரையுடன் சகல ஹோமியோபதியர்களும் மற்ற முறையின் வைத்தியர்களும் நிச்சயமாக பலனடைவார்கள் என்று நம்பி இப்புத்தகத்தை சமர்ப்பிக்கின்றேன்.

திருவாரூர்,<br>அக்டோபர் 1957.

டாக்டர் S சீனுவாசன்.

# நம் நாட்டு மருந்துகள்.

---

## PONGAMIA.

## 1. பொங்கேமியா.

(புங்கைமரம்)

.........

இது இந்தியாவில் சமுத்திரைக்கரையோரமாக ஹிமாலய மலையிலிருந்து கொழும்பு வரையில் வளருகிறது. இது ஒரு அழகிய சிறிய மரம். இதன் விதைகள், இலைகள், விதையிலிருந்து எடுக்கும் எண்ணை முதலியன யாவும். இந்திய வைத்திய சாஸ்திரங்களில் தோல் வியாதிகளுக்கும், வாயு உபத்திரவங்களுக்கும் மருந்தாக உபயோகப்படுத்தி வந்தார்கள். வேர்பட்டையிலிருந்து எடுக்கும் கஷாயத்தை புண்களையும், காயங்களையும் கழுவுவதற்கு உபயோகப் படுத்திவந்தார்கள். இலையிலிருந்து எடுக்கும் வாயுவலி உள்ள பாகங்களை கழுவுவதற்கு உபயோகப்படுத்தி வந்தார்கள். சொரி, சிரங்குக்கும் அக்கிக்கும், மற்ற தோல் வியாதிகளுக்கும் புங்கம் எண்ணெயை சிறந்ததாகக் கருதி வந்தார்கள். சில சமயங்களில் பித்தப்பை சரியாக வேலை செய்வதற்கும், சரியானபடி ஜீர்ணம் ஆகுவதற்கும்கூட



இதை கொடுத்துவந்தார்கள். பவுடர் பண்ணின விதையை இளைப்பிற்கு மருந்தாகவும், ஜுரத்தைத் தணிக்கவும் மருந்தாக உபயோகப்படுத்தி வந்தார்கள். கக்குவான் இருமலுக்கும், தொண்டைச் சளிக்கும் சிறந்த மருந்தாக உபயோகப்படுத்தப்படுகிறது.

புங்கம் விதைகளிலிருந்து சுமார் 27 முதல் 30 சதவீதம் எண்ணை அகப்படுகிறது.

அலபதிக் உபயோகங்கள் :—

இதனுடைய முக்கிய எண்ணையை உபயோகப்படுத்தினதில் ப்ராங்சியல் குழாய்கள் தளர்வடைந்தது தென்பட்டன. ஆகவே ரொம்பவும் தொந்தரவு கொடுக்கும் இருமல்களுக்கு உபயோகப்படுத்தலாம் எனத் தெரிகிறது.

ஹோமியோபதி உபயோகங்கள் :—

கக்குவான் இருமல் ஓயாமல் இருமிக்கொண்டே இருக்கும். கோழையுடன் சாப்பாட்டு ஆகாரமும் வாந்தி எடுத்து விடும்.

இருமலின்போது இரண்டு விலாப்புறங்களிலும் இழுத்துப் பிடித்தார்போல் வலி இருக்கும்

இருமும்போது கண் விழிகள் இரண்டும் சிவந்து கொண்டு கண்களிலிருந்து ஜலம் வழிந்துகொண்டு இருக்கும்.

சாப்பிட்டவுடன் இருமல் அதிகரிக்கும்.

தொண்டைச்சளி கோழை கம்பிபோல் நீளும்.

சளி அதிகமில்லாமல் வறட்டு இருமல் அத்துடன் மூச்சு திணறல் இருக்கும்.

அஜீர்ணம்.

மலம் தளர்ந்து வெளிக்குப் போகுதல்.

சாப்பிட்டவுடன் வயிற்றில் கல் விழுந்ததுபோல் கனம்.

கொழுப்புப்பதார்த்தங்கள் ஜீர்ணமாகாமல் வயிற்றில் ஒப்புசம்.

வாயில் கசப்பான பித்த நீர் அதிகமாக ஓடுதல் :—

ரணங்கள் : ஆறுத ரணங்கள். சீழ் துர்கந்தம் எடுத்துக்கொண்டு ஆறுவதற்கான குறிகளே உண்டாகாமல் இருக்கும். ரணங்கள் ஆழமாகவும் குழிந்து கொண்டும் இருக்கும் எலும்பின் மேல் சதைவரைக்கும் புரை ஓடும் புண்கள். குஷ்டத்தில் ஏற்படும் குழிப்புண்கள்.

இதை தேள் கடிகளுக்குக்கூட உள்ளுக்கும் மேலுக்கும் கொடுப்பதுண்டு.

வாயு வீக்கங்களினுல் ஏற்படும் ஜுரங்கள். ஆனைக்கால் ஜுரங்கள்.

ஆனைக்கால் ஜுரத்திற்கு எங்களால் தயாரிக்கப்படும் 'புங்காமியா' என்ற இன்ஜக்ஷன் சுமார் மூன்று நாளைக்கு ஒருதடவை போட்டுவர ஜுரமே வாராமல் தடுத்துவிடும்.



## சொந்த உபயோகங்கள்:—

## பொங்கேமியா.

கேஸ் 1. ஆண். வயது 75-1948.

இவர் நீரில் 5 சர்க்கரை சத்து இருந்தது. அல்புமனும் நிறைய இருந்தது.

இவர் நம்மிடம் வரும்போது இடதுகால் விரல்களும், உள்ளங்காலும், நடுக்கால் வரை வீக்கம் கண்டிருந்தது. கட்டை விரல் சீழ் பிடித்து கருத்திருந்தது. சுண்டு விரலும் எலும்புவரை அழுகியிருந்தது.

வியாதி:— DIABETIC CELLULITIS.

நம்மிடம் வருவதற்கு முன் ஒருமாதம் வரை அலோபதிக் வைத்தியரிடம் சிகிச்சை பெற்று வந்தார். ஏராளமான இன்ஸுலின் இன்ஜெக்ஷன்களும், வைடமின்கள் முதலியனவும கொடுக்கப்பட்டும் சௌகரியம் ஆகாமல் நம்மிடம் வந்து சேர்ந்தார்.

சிகிச்சை:— சுண்டு விரலும், கட்டை விரலும் எடுக்கப்பட்டு விட்டன. புண்களுக்கு பொங்கேமியா லோஷன் தினம் இரண்டு தடவை போட்டு புண்கள் அலம்பப்பட்டு வந்தன.

உள்ளுக்கு பொங்கேமியா டிஞ்சராகவும், இன்ஜெக்ஷனுகவும் ஹோமியோபதி முறையில் கொடுக்கப்பட்டு வந்தன.

சுமார் இரண்டு மாத காலம் கழித்து இவர் நன்ருக சுகமடைந்து விட்டார்.

நுரையீரலிலிருந்து ரத்தப் பெருக்கு ஏற்பட்டால் இந்த மருந்து சிறந்தது இது க்ஷயரோகத்திலும் நன்ருக வேலைசெய்யும்.

இம்மாதிரி ரத்தப் பெருக்கு காலை நேரத்தில் தான் அதிகரிக்கும். காலையில் பிரகாசமான சிகப்பு நிறமாகவும், மாலையில் கட்டி கட்டியாயும் கருப்பு நிறமாகவும் இருக்கும்.

பொதுவாக காலையில் மிகவும் பலவீனமாயும், பொழுது ஏற ஏற பலம் மிகுந்தும் காணப்படுவர்.

இருமல் இரவில் அதிகமாயும் கடுமையாகவும் இருக்கும். மார்ப்புறத்தில் வலியும் அதிகமிருக்கும் தொண்டைக்குழியில் எரிச்சலும், குடலில் எரிச்சலும் கூடியிருக்கும் படபட வென்று சத்தத்துடன் கூடிய பேதி, ஆசனவாய்க் கடுப்பு வயிற்றில் உப்புசம். வலி, ஆசனவாயிலிருந்து ரத்தப்பெருக்கும் கூடியிருக்கும்.

சுரம் இருக்காது. நாடித்துடிப்பு சாதாரணமாகவும். மிருதுவாகவுமிருக்கும். உடம்பு வர வர இளைக்கும் தோல் மஞ்சள் பூத்து சிலசமயம் அரிப்பு, தோல் தடிப்புகளுடன் கூடியிருக்கும்.

டிஞ்சராகவும், போடன்சியிலும், இன்ஜெக்ஷனுகவும் உபயோகப்படுத்தலாம்.

அனுபவ கேஸ் 1.

R. ஆண் - 52, 1946.

இவர் கடையில் வேலைசெய்து கொண்டிருப்பவர். திடீரென ஒருநாள் மயக்கம் வருகிறதென்று



சொல்லி சுமார் இரண்டுபடி அளவு இரத்தமாக வாந்தி எடுத்தார்.

உடனே நம்மைக் கூப்பிட்டனுப்ப ஒரு க்ளுகோஸ் இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டு அகாலிபா 30 வீரியத்தில் ஒருமணிக்கொரு தரமாக கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு அவருக்கு அது வரையில் வாந்தியில்லை.

கேஸ் 2.

S. Iyer. ஆண் 46 1952.

திடீரென ஒருநாள் மயக்கமாக இருக்கிறதென்று நம்மைக் கூப்பிட்டனுப்பினார். போனதும், அவர் உடனே கருப்பாக, கட்டியாக ரெத்தமாக வாந்தியெடுத்தார். வயிற்றில் சிறு வலியும், பிரட்டலும் இருந்துக்கொண்டிருந்தது. நாம் போவதற்கு இரண்டுமணி நேரம் முந்தி சிவந்த ரெத்தமாக இரண்டுதரம் வாந்தி எடுத்திருந்தார்.

உடனே அகாலிபா இன்ஜெக்ஷனுகவும், 200 வீரியத்தில் 4 டோஸ் உள்ளுக்கும் கொடுக்கப்பட்டதில் அன்றிலிருந்து இன்று வரையில் சுகமாயிருக்கிறுர்.

பெல்லாம் வலி முதலியன ஏற்பட்டது. நடுக்கலும் வலியும் கடுமையாக இருந்தன.

நாம் கூப்பிடப்பட்டபோது தூங்குவதற்கு மருந்து கேட்டார். ஏராளமான வியர்வைஉண்டாகியிருந்தது. ஆகாரத் துவேஷம் — ரத்த சோகை இவருக்கு இரண்டு மூன்று நாளாக இம்மாதிரி இருந்துவந்ததிற்கு ஒரு அலோபதிக் டாக்டர் பென்சிலின்,ஸல்பதயோசால் முதலிய மருந்துகளும் மிக்சர்களும் கொடுத்துவந்தார். குணம் ஒன்றும் ஏற்படவில்லை.

நாலாம்நாள்தான் நாம் கூப்பிடப்பட்டோம். வழக்கப்பிரகாரம் 'பிரியோனியா 10 M.' தினம் 4 வேளையும், ப்ரான்கோலின் இன்ஜெக்ஷன் இரண்டு தடவையும், இரண்டு நாளைக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் பலன் ஒன்றுமில்லை.

இவருக்கு ஏற்கனவே கடும் ஆஸ்த்மா வியாதி உண்டு. அதுவும் இத்துடன் கூடிக்கொண்டது.

இவருக்கு எக்ஸ்ரே படம் எடுத்து பார்த்ததில் ப்ரான்கைடிஸ் என்று தெரியவந்தது. இரத்தப் பரிசோதனையும் செய்யப்பட்டது. ஆனால் ரத்த சோகையைத்தவிர வேறு ஒன்றுமில்லை.

உடனே இவருக்கு நம் லாபரட்டரியில் தயாராகும் 'ஸொலானம் சாந்த்' என்ற மருந்தை 3x வீரியத்தில் தினம் 6 வேளையாக கொடுத்துவந்தோம். அத்துடன் 'பயோடிசின்' இன்ஜெக்ஷனையும் தினம் ஒருவேளை கொடுத்துவந்தோம். இரத்த சோகைக்கு 'வைடமின் பி 12. 6x' இன்ஜெக்ஷனும் கொடுக்கப்பட்டது. 10 நாட்களில் பூர்ண குணமடைந்தார்.

---



## 4. TERMINALIA CHEBULA.

### (கடுக்காய்.)

இது நாம் சாதாரணமாய் உபயோகப்படுத்தும் 'கடுக்காய்'.

கடுக்காவில் 45 சதவிகிதம் டானிக் ஆசிட், காலிக் ஆசிட் இருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகளைத் தவிர இன்னும் சில ஆசிட்டுகளும் இருக்கின்றன.

இதை பேதிக்கு பெரும்பாலும் உபயோகப்படுத்துகிறார்கள். ரத்தப் போக்கை நிறுத்துவதற்கும் உபயோகப்படுத்துவார்கள். சில சமயம் தேள் கடிக்கும் உபயோகிக்கிறார்கள். நாள்பட்ட புண்கள், காயங்கள் இவைகளுக்கு மேலுக்கு அரைத்துப் போட்லாம். வாயில்புண் ஏற்பட்டால் கிளிசரினுடன் கலந்து கொப்பளிக்கலாம்.

ஆயுர்வேதத்திலும், யூனானி வைத்தியத்திலும் இது அதிகமாக பிரயோசனப்படுகிறது.

சரகர் அபிப்ராயப்படி ரத்தமூலமும், வயிற்றுக் கோளாறுகளும் இருமலினால் ஏற்படும் மஞ்சட் காமாலையும், ஜலதோஷமும், வாந்தியும் சௌகர்யமாகுமாம்.

சுக்ருதர் – வாயு வலிகள், யானைக்கால், குருட்டு மூலம், நாட்பட்ட மண்ணீரல் வீக்கம், விக்கல், வயிற்றில் சுரப்பிகளின் வீக்கம் இவைகளை சௌகர்யப்படுமென்று சொல்லுகிறார்.

க்ஷயரோகத்தில் கடுமையான சுரம், வயிற்றி லிருந்தும், நுரையீரலிலிருந்துவரும் ரத்தப்பெருக்கு; சாராயம் கள்விட்டால் ஏற்படும் ஜன்னிப் பிதற்றல்; மகோதரம்; கண் வியாதிகள்; டைபாயிட் சுரம்; விரற்சுத்தி; வயிற்று வலியுடன் கூடிய வயிற்றுப் போக்கு — இவ்வியாதிகளுக்கு ரொம்ப உபயோகப் படுமென்று சொல்லுகிறார்கள்.

ஹோமியோபதி உபயோகங்கள் :

கடுமையான தலை கிறுகிறுப்பு; பின்புறமாக ஆரம்பித்து வலது பக்கம் முழுவதும் பரவி—நாள் முழுவதும் தங்கியிருக்கும். வலி குத்துகிறாப்போ லிருக்கும். வெயிலினால் மயக்கம் அதிகரிக்கும். ஜில்லென்ற தண்ணீரினால் சமனமாகும். மாலை நேரத்தில் குளிர்காற்றுப்பட்டாலும் குறையும். தூக்கத்திலும் குறைவடையும்.

ஏராளமாக வாயில் எச்சில் ஊறல், குளிர்ந்த தண்ணீர் குடிக்க அதிகதாகம், மேல்நாடை வரட்சி, பல்லீரல்கள் வீங்கி கெட்டிப்பட்டுவிடுதல். வாயில் துர்நாற்றம், நாற்றமுடைய ஏப்பம் காலையில் புளிச்ச ஏப்பம். நாக்கு வெந்து புண்ணாகியிருத்தல்.

வயிறு நிரம்பி யிருப்பதுபோல் தோற்றம்; வயிற்றில் அழுக்கியிறுத்தும் வலி; கடகடவென்று சத்தம்.

பின்புறம் இடுப்பில் தாங்காத வலி; உட்காரு வதுகூடமிகச்சிரமம்; படுத்துக்கொண்டால் அல்லது தூங்கிவிட்டால் சமனமாகிவிடும்.

வலது மார்பில் நல்ல வலி — ஹிருதய பாகத் திலும், லிவர் பாகத்திலும் வலி.



அடிக்கடி மலம் பிரிய யத்தனம்; ரொம்ப முக்கி சிறிது மலம் பிரியும். மலம்பிரியும்போது வியர்வை ஆசனக்குழாயில் அரிப்புடன் நிரம்பி யிருப்பது போன்ற உணர்ச்சி. மலச்சிக்கலில், மலம் சிறிய தாகவும், கெட்டியாகவுமிருக்கும்.

பேதியில் மலம் திரவமாகவும், கொஞ்சமாகவும் சிறிது சீதம் கலந்தும் அல்லது மலம் கெட்டியாகவு மிருக்கும். சிறிது நீர் குறைந்தும், இரவில் அடிக் கடி போய்க்கொண்டுமிருக்கும்.

வலது தோள்பட்டை மேல்கைதசையில் வாயு வலி.

நாடி மந்தமாகவும், ஒழுங்கற்ற இல்லாமலுமிருக் கும். சிலசமயம் வேகமாகவும், கனமாகவும், பல ஹீனமாகவும் அடிக்கும். ஹிருதயத்துடிப்பின்சப்த மும் சிறிது குறைவாகவும், மறுபடி துரிதமாகவும் பலமாகவும் மாறி மாறி யிருக்கும்.

எல்லாக் குறிகளும் சூரிய வெப்பத்தினால் அதிகரிக்கும். கடுமையான தேகப் பரிசிரமத்தின லும் அதிகரிக்கும்.

இம்மருந்து ஜனனேந்திரியங்களில் வேலை செய்யாது.

எல்லாக் குறிகளும் குளிர்ந்த நீரில் குளிப்ப தாலும், சாயங்கால ஜில்லென்ற காற்றினாலும், தூக்கத்தினாலும், சாப்பிடும்போதும், கண்களைமூடிக் கொண்டாலும், கவலையற்றிருப்பதினாலும் சமன மாகும்.

முக்கியமாக இம்மருந்து தலைச்சுற்றல், ஏராளமான எச்சில் ஊறல், பெருந்தாகம், வாயில் துர்நாற்றம்; நாக்கு தடித்து, வரட்சியுடன் கூடியிருத்தல், அடிக்கடி மலச்சிக்கல், மலம் பிரிய உணர்ச்சி ஆனால் அதிக முயற்சியினால், ஏராளமான வியர்வை கொட்ட — சிறிது மலம் கழிதல் — இதுகளுடன் கூடிய வியாதிகளுக்கு மிக உகந்தது.

டோஸ் :- பெரும்பாலும் 3x, 6x, 30 வீரியங்களில் உபயோகிக்க வேண்டும்.

★

## 5. NYCTANTHES ARBORTRISTIS.

## (பவழ மல்லிகை.)

இது மிகவும் உபயோகரமான மருந்து. முதல் முதலாக 1901 வருஷம் இதைப்பற்றி டாக்டர் சரத்சந்திரபோஸ் அவர்கள் வெளியிட்டார். இதன் உபயோகத்தை அறிந்துகொண்டு இங்கிருந்து டாக்டர் கிளார்க் தன் 'பிரைஸ் கிரைபர்' 'மெடீரியா மெடிகா டிக்ஷனரி'யிலும் மருந்தாகச் சேர்த்திருக்கிறார். அமெரிக்கன் டாக்டர்களான போரிக், டாக்டர் பிளாக்வுட்; அவர்களும் தங்கள் புத்தகங்களில் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்.

ஆயுர்வேதத்தில் இதை எல்லாவிதமான சுரங்களுக்கும்; சியாடிகா என்ற நரம்பு வியாதிக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள்.



அலோபதி வைத்தியத்தில், இதன் சாறை இஞ்சிச்சாறுடன் கலந்து விடாத முறை சுரங்களுக்கு உபயோகிப்பார்கள். விதையை அரைத்து தலைப்பொடுகை நீக்க உபயோகிப்பார்கள். கடும் சியாடிகாவிற்கும், வாயுவிற்கும் இதன் கஷாயத்தை உபயோகிப்பார்கள். பாக்குடன் பட்டையை கெட்டியான கோழையை வெளிப்படுத்த மெல்லுவார்கள்.

### ஹோமியோ உபயோகங்கள் :

'போரிக்' புத்தகத்தில் கீழ்கண்ட குறிகள் காணப்படுகின்றன.

பித்த சுரம், விடாத ரெமிட்டண்ட் சுரம், சியாடிகா வலி, குழந்தைகளின் மலச்சிக்கல், வாயு.

நாக்கு மாசுபடிந்து, அமைதியின்மையும், கனத்த தலைவலியும்.

வயிற்றில் எரிச்சல்; சில்லென்ற ஒற்றடத்தால் சாதகம், தாக வரட்சை, கசப்பான வாந்தி.

ஈரலில் வலி, குமட்டலுடன் ஏராளமான பித்த மலம்; மலச்சிக்கல்.

சுரத்தின்போதும், குளிரின்போதும், முந்தியும் தாகம், குளிர் நடுக்கலிற்குப் பிறகு கசப்பான வாந்தி; வியர்வை இராது.

கபம் வெளிப்படுத்தும் கசப்பு டானிக், சுரம் கொல்லி, லேசான 'மலமிளக்கி' பித்த சுரங்க

ளுக்கு நல்ல மருந்து, வாயு, குழந்தையின் மலச்சிக்கல், சியாடிகா இவைகளுக்கு சிறந்து.

டோஸ்:—தாய்த் திராவகத்தில் சில துளிகள்.

கீழ்க்கண்டபடி டாக்டர் 'கிளார்க்' எழுதியிருக்கிறார்.

மல்லிகைப்பூ ஜாதியைச் சேர்ந்த இது ஒரு சிறிய மரம். பூக்கள் வாசனையாயும், பளபளென்றும், மஞ்சளும் வெள்ளையும் கலந்தும், சாயங்காலத்தில் பூத்து விடியற்காலையில் விழுந்துவிடும். பகலில் இது தன் பொலிவை இழந்திருப்பதால் இதற்கு சோக மரம் (Arbor-tristis) என்றும் 'நிக்டாந்திஸ்' என்றால் இரவில் பூக்கும் என்றும் பெயரேற்பட்டது.

S. C. கோஷ் என்பவர் பித்த முறை சுரங்களுக்கும், வாயு, சியாடிகாவிற்கும், குழந்தைகளின் மலச்சிக்கலுக்கும் பெருவாரியாக உபயோகித்திருக்கிறார்கள். அதிக வியர்வை கிடையாது. யூபடோரியம் பெர்போலியத்தோடு ஒப்பிட்டிருக்கிறார்.

மேற்சொன்ன குறிகளைக்கொண்டு இதைப் பிரயோகம் செய்தால் பெரும்பாலும் மலேரியா அதிகமாயிருக்கும் இடங்களில் மிக்க உபயோகரமாயிருக்கும்.

## அனுபவ கேஸ் 1.

ராஜாத்தி — வயது 22. — 1953.

மூன்று நாட்களாக விடாத சுரம். காலையில் 101° F முதல், மாலையில் 104° வரையில் — பித்த



குமட்டல் — வியர்வை அதிகம் கிடையாது. ஈரல் புறம் தொட்டால் வலி. நாக்கு மாசுபடர்ந்திருந்தது. அமைதியின்மை; சிறுதலைவலி; வயிற்றில் வெறும் எரிச்சல்.

மூன்றுநாட்கள் தொடர்ந்தாப்போல் 'நிக்டான்தஸ்' 3x வீரியத்தில் கொடுக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு பூர்ண குணம்.

## கேஸ் (2)

மு. முதலியார்—1953. – வயது 35.

இவருக்கு 16 நாட்களாக மலேரியா காய்ச்சல் அடித்தது. இவருக்கு அலோபதி முறையில் சிகிச்சை நடைபெற்றது.

குளிருடன் சுரம் அடித்தது. சுரம் மட்டும் 3 மணிக்கு குறையாமல் நீடித்தது. சுரம் சுமார் 104° 6 F வரை ஏறிற்று. பிறகு இரவு 11 மணிக்கு மேல் விட்டுவிட்டது. வியர்வை அதிகம் இராது. 12 மணிக்கு ஆரம்பிக்கும்.

நாம் பார்க்கும்பொழுது இவருக்கு பித்தமான கசப்பான வாந்தி இருந்துவந்தது. தாக வரட்சை ஆனால் ஜலம் குடித்தால் உடனே வாந்தி, வயிற்றில் எரிச்சல்; ஈரல் புறமும் தொடமுடியாதபடி வலி; சில சமயங்களில் சுரத்தின் போது பித்தமான மலமிளகும்.

இவருக்கும் 'மெபாக்ரின் 6' ஒரு இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டு–நிக்டான்தஸ் 3x – 6 டோஸ் கொடுக்கப்பட்டது.

மறுநாள் சுரம் படிமானம் — வாந்தி இல்லை— மறுபடியும் 4 டோஸ் ஒருமெபாக்ரின் இன்ஜெக்ஷன். மூன்றும் நாளிலிருந்து சுரம் இல்லை.

★

## 6. FICUS RELIGIOSA.

(அரச மரம்.)

இது ஒரு பெரும் மருந்தென்று ஹோமியோபதி முறையில் கண்டுபிடிக்கப்பட்டது, டாக்டர் சரத்சந்திரகோஸ் அவர்களால்தான்.

வரலாறு:- டாக்டர் சரத்சந்திரரின் மைத்துனர், ஸ்ரீ மிட்டர் என்பவருக்கு திடீரென ரத்தமாக வாந்தி எடுத்தது. நிலைமை ரொம்ப கவலைக்கிடமாகயிருந்தது. டாக்டர் மகேந்திரலால் சாக்கார் ஆரம்பம் முதல் வைத்தியம் செய்தார். ஆனால் பிரயோஜனப் படவில்லை. ஒரு நாள் ஒரு சன்னியாசி வந்து அரசமரத்திலையை கஷாயம் போட்டு கொடுக்கச் சொன்னார். இது உடனே சொஸ்தம் செய்துவிட்டது.

இந்த அனுபவத்தினால் சரத்சந்திர கோஸ் அவர்கள் 1899ம் ஆண்டு ஹோமியோபதிமுறையில் அரசமரத்தை தம்மனைவிக்கும், தமக்கும், ஒருநாய்க்கும் கொடுத்து குறி குணங்களை கண்டார். இவர், கண்டுபிடித்த விவரங்கள் இங்கிலாந்து தேசபத்திரிகைகளிலும் கூட பிரசுரமாயிருக்கிறது.



### ஆயுர்வேத உபயோகங்கள்.

எல்லாப் பிரபல ஆயுர்வேத சாஸ்திரங்களும் இதை எந்த அவயவத்திலிருந்து வரும் ரத்தப் பெருக்கிற்கும் உபயோகிக்கலாமென சொல்லுகின்றன.

### ஹோமியோ உபயோகங்கள்.

முக்கிய வியாதிகள்:-

ரத்தமாய் நீர்ப்பிரிதல்.
ரத்தப் பெரும்பாடு.
வலியுடன்கூடிய நீடித்த மாதவிடாய்.
குன்மவலியால் ரத்தவாந்தி.
நுரையீரலிலிருந்து ரத்தவாந்தி.
ரத்தம் அதிகமான சீதபேதி.
ரத்த மூலம்.
மூக்கிலிலிருந்து ரத்த ஒழுக்கு.

குணங் குறிகள்:-

மனதில்சோர்வு; ஆகாரம்கூட விருப்பமின்மை; வருத்தம், துக்கம், மயக்கத்துடன் கிறுகிறுப்பு; சிறிது தலைவலி – உச்சந்தலையில் எரிச்சல்; கண்பார்வை மங்கல்; மூச்சுவிடத் திணறல்; ரொம்பவும் பலவீனம், அமைதியின்மை.

இக்குறிகள் எவ்விதமான ரத்தப்பெருக்குடன் கூட இருக்கும். ரத்தத்தின் கலர் நல்ல சிகப்பு.

### அனுபவ கேஸ் 1.

T. S. S. அய்யர் வயது 50.

திடீரென நல்ல ரத்தமாக ஒருபடிஅளவு வாந்தியெடுத்தார். மயக்கம், ஒரே கிறுகிறுப்பு, அமைதி

யின்மை, வயிற்றில் வலி, கண்பார்வை மங்கல் முதலியன இருந்தது. தான் நிச்சயமாக இறந்து விடுவோமென்று தோற்றம்.

உடனே அவருக்கு ஒரு "க்ளுகோஸ்" இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டு, "பைகஸ் ரிலிஜியோசா" 3x வீரியத்தில் 5 சொட்டு வீதம் ஒருமணிக்கு ஒரு தடவை கொடுக்கப்பட்டது. அன்றே பூரண குணமடைந்தார்.

## அனுபவ கேஸ் 2.

ரத்ன முதலியார். வயது 54.

கடை வியாபாரி. திடீரென நுரையுடன் கூடிய சிவப்பு ரத்தம் இருமலுடன் சுமார் ஒருபடி அளவு வாந்தி யெடுத்தார். இவருக்கு மயக்கம் கண்சுற்றல், பார்வை மங்கல், அமைதியின்மை ஏற்பட்டுவிட்டது. உடனே "பைகஸ் ரிலிஜியோசா" 3x வீரியத்தில் உள்ளுக்கு தினம் 6 டோஸும், இன்ஜெக்ஷனுக (நம் லாபரடரியில் தயாரித்து விற்பனைக்கு இருக்கிறது) இரண்டு முறையும் கொடுக்கப்பட்டது. இரண்டே நாளில் பூர்ண குணம்.

## அனுபவ கேஸ் 3.

ஹோட்டல் அய்யர். வயது 45.

ஹோட்டல் வியாபாரி. திடீரென மார்பில் வலியுடன் ரத்தமாக வாந்தி யெடுத்தார் – ரத்தமாக மலம் கழிந்தது. இது சுமார் 10, 12 தடவை அடிக்கடி ஏற்பட்டுவிட்டது. நல்ல ஆரோக்கியமாக இருந்தவர் திடீரென பலவீனமடைந்து அசையக் கூடமுடியாமல் பேசக்கூட சக்தியற்றுவிட்டார்.



மற்ற க்ளுகோஸ் முதலியவைகளுடன் கூட, மருந்தாக "பைகஸ் ரிலிஜியோசா" 6x வீரியத்தில் தினம் 6 டோஸாக மூன்றுநாள் தொடர்ந்து கொடுக்கப்பட்டது. இன்றுவரை பூர்ண சுகம்.

முக்கிய வீரியம் :- 2x, 3x, 6x, 30 முதலியன.

★

## 7. FICUS BENGALENSIS.

( ஆலமரம். )

இதன் பட்டையில் டானின், மெழுகு, முதலிய சத்துக்கள் இருக்கின்றன.

கர்னல் சோப்ரா அபிப்பிராயப்படி இதின் பாலை புண்களுக்குஉபயோகிக்கலாம்;ரத்தசீதபேதி, பேதி முதலியவற்றிற்கு மொக்குகளின் கஷாயம் நல்லது. பட்டையின் கஷாயம் நீரழிவிற்கு மிக நல்லது என்று சொல்லுகிறார்கள்.

ஆண்தன்மை குறைவிற்கும், பல் வலிக்கும், கால்–கை பித்த வெடிப்பிற்கும்கூட இது நல்லது.

### ஆயுர்வேத உபயோகங்கள்.

இதுவும் அரசமரம் மாதிரி ரத்தப்பெருக்கிற்கெல்லாம் சிறந்தது. சிலசமயம் அரசமரத்தை விடக்கூட ஆலமரம் சிறந்ததாம்.

ரத்தக் கட்டிகளுக்கும், ரத்தத்துடன்கூடிய வெட்டை ஒழுக்கிற்கும், இந்திரிய ஸ்கலிதத்திற்கும் மிகவும் நல்லதென்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

## ஹோமியோபதி உபயோகங்கள்.

சரியானபடி மருந்தை வீரியப்படுத்தி குணம் குறி அறியப்படவில்லை. ஆயினும் அரச மரத்தை விட இது அவ்வியாதிகளில் சிறந்ததென்றும், நீடித்து வேலைசெய்கிறதென்றும் அனுபவ வாயிலாக அறிகிறோம்.

மூலம், சீதபேதி இவைகளுக்கு மிகவும் உபயோககரமானது. இந்த வியாதியில் மெர்குரி கரோசிவஸைவிட இது சிறந்தது.

ரத்தத்தில் எரிச்சலுடன்கூடிய மது மேகம், வெள்ளை இவற்றிற்கு நிகரற்றது.

இந்திரிய ஸ்கலிதத்திற்கும், நரம்புத்தளர்ச்சிக்கும் ஒரு இடில்லா மருந்து. ஒரு சிலர் இதன் பாலில் பழத்தை ஊறவைத்து பொடிசெய்து சாப்பிட்டால் நல்லதென்று சொல்லுகிறார்கள்.

"ஆலும் வேலும் பல்லிற்குறுதி"

(பழைய பழமொழி)

"ஆலும் வேலும் இந்திரியத்திற்குறுதி"

(ஹோமியோ மொழி)



**அனுபவ கேஸ் 1.**

ஒரு M. B. B. S. டாக்டரின் தாயார்.

இவருக்கு நீண்ட வருஷகாலமாக டயபிடிஸ் ரோகம். ஆங்கில வைத்தியம் எல்லாம் செய்தும் பயனில்லை. நம்மிடம் கடைசியாக வைத்தியம் செய்து கொண்டார். இந்த அம்மாளுக்கு வெட்டை உபத்திரவம் அதிகம். ஆகவே, "பைகஸ் பெங்காலென்சிஸ்" 3x வீரியத்தில் 3 மாத காலம் சாப்பிட்டார். தற்போது பூர்ண குணம். சிறுநீரில் சர்க்கரையே இல்லை.

முக்கிய வீரியம் :- 3x, 6x.

★

## 8. ஆண்ட்ராகிராபிஸ் பானிகுலேடா.
## ANDROGRAPHIS PANICULATA.

தமிழ்: நிலவேம்பு. இங்கிலீஷ்: KALMEGH.

இது ஒரு பெரிய மருந்து பச்சிலை. சுமார் 3-அடி உயரம் வரைக்கும் வளரும். லக்னௌ முதல் அஸ்ஸாம் வரையில் சகஜமாக வளர்வது. இது மருந்துக் கஷாயமாக பெரும்பாலோர் வீடுகளில் உபயோகப்படுவது. குழந்தைகளுக்கு வயிற்றுவலி, வயிற்றுப்பொருவல், பசியின்மை முதலியவற்றிற்கு சிறுசிறு உருண்டைகளாக செய்து கொடுப்பார்கள். வேர்களிலிருந்தும், இலையிலிருந்தும் ஜுரத்திற்காகவும், நரம்பு புஷ்டிக்காகவும் கஷாயம் தயாரிப்பது வழக்கம். வயிற்றுக் கிருமிகளுக்கும் இதை உபயோகப் படுத்துவார்கள். வயிற்றுக்கடுப்பு, அடிவயிற்றில் காற்று உப்பிசம், வயிற்றில் அஜீர்ணம், இவைகளும் அசதி, பலவீனமுமிருந்தால் இக் கஷாயம் பலனளிக்கும்.

இம்மாதிரி கர்னல் 'சோப்ரா' எழுதியிருக்கிறார்; மேலும்

இச்செடியில் ஒரு கசப்பான வஸ்துவிருக்கிறது. பெரும்படியாக பொட்டாஸியம் காணப்படுகிறது. அதிக அளவில் உப்பும் காணப்படுகிறது. இரண்டு விதமான கசப்பு பதார்த்தங்களை பிரித்தெடுத்தார்கள்; ஆனால் அதன் சரியான உபயோகமும், கணக்கும் தெரியவில்லை.

இதை இங்கிலாந்தில் கொய்னாவிற்குப் பதிலாக மலேரியா சுரத்திற்கு உபயோகப்படுத்தி பிரயோசனமில்லை என்று கைவிட்டுவிட்டார்கள். பாக்கி கசப்பு பதார்த்தங்களைப்போல உபயோகப்படலாம். ஆகவே சுரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலவீனத்திற்கும், மலச்சிக்கலினாலேற்படும் வயிற்றுப் பொருமல் வலிக்கும் பசிமந்தத்திற்கும், முற்றின சீதபேதிக்கும் — ஏலக்காய், கிராம்பு, வெங்காயம் முதலியவைகளுடன் கலந்து உபயோகிக்கலாம்.

## ஆயுர்வேத முறையில் உபயோகங்கள் :-

குழந்தைகளின் வயிற்றில் ஏற்படும் கிருமிகளுக்கும், தொந்திக்கும், ஈரல்குலைக் கட்டிக்கும். அதனால் ஏற்படும் சுரத்திற்கும், விரைக்கட்டி முதலியவற்றிற்கும் உபயோகப்படுத்துவார்கள்.

## ஹோமியோபதியில் உபயோகங்கள் :-

டாக்டர் பிரமாத பிரசன்ன பிஸ்வாஸும், டாக்டர் N. சின்ஹாவும் இதை 'ப்ரூவ்' செய்தார்கள்.

தலை :- கிறுகிறுப்பு, பின்தலையில் துடிப்புடன் தலைவலி; நெற்றிப்பொட்டு வலி.



மனது :— சோர்வு, ஒருவேலையும் செய்ய ஓடாது; பேசக்கூடப் பிடிக்காது; அமைதியின்மை; சட்டென்று கோபம் வரும்.

கண் :— கண்கள் சிவந்திருக்கும்; மஞ்சள் பூத்த கண்கள்.

மூக்கு :— நாசியிலிருந்து தண்ணீர்போன்ற ஒழுக்கு; ஜலதோஷம்; சிறிது தும்மல்.

வாய் :— வாய் கசப்பு; தொண்டையில் வரட்சி; நாக்கு வெண்மை படர்ந்திருக்கும்.

வயிறு :- எப்போதாவது ஏப்பம்; நெஞ்சிலும் தொண்டையிலும் எரிச்சல்; வயிற்றில் கனம்; பசியின்மை; மலம்கழிக்க பிரயோசனமில்லாத பிரயத்தனம்; வயிற்றில் எரிச்சலுடன் சங்கடம்; ஈரல்கட்டி வீக்கம்; தொடுவதற்குவலி; ஈரலை அமுக்கினால் வலியதிகரிக்கும்; சிறு குழந்தைகளில் ஈரல் கட்டி.

மலம் :— பித்தமாய் இளகின மலம்; மலச்சிக்கல்; அடிக்கடி மலம்போகப் பிரியம்; ஆனால் மலம் பிரியாது; மலம் தீய்ந்து கருகி இருக்கும்; குழந்தைகளுக்கு மஞ்சளான தளர்ந்த மலம்; சில சமயம் மலச்சிக்கல்; சிலசமயம் தாராளமாய்பிரியும்; மலச்சிக்கல் அதிகம்.

சிறுநீர் :— குழந்தைகளின் மஞ்சட்காமாலையில் கடிப்பாகவும், மஞ்சளாகவும் கலர் அதிகம்.

ஜுரம் :— ஒரேநாளைக்கு இரண்டு தடவை ஜுரம்வருவது இதன் முக்கிய குறி. ஜுரத்துடன் சிறிது குளிர்நடுக்கம்; சூடுமாத்திரம் இருக்கும்; உடம்

பில தகிப்பதுபோல சூடு; தலைவலி, தாகம் சில் லென்ற காற்று பட்டாலும், குளிர்ந்த தண்ணீ ராலும் எரிச்சல் கம்மியாகும்; சுரம் காலை மணி 11-க்குப்பிறகு, மறுபடியும் மாலை 7, 8 மணிக்கு வரும்.

பொதுப்படை:- உடம்பில் ஏற்படும் எரிச்சலை குளிர்ந்த தண்ணீர் போக்கும்; வியர்வையும் கம்மிப் படுத்தும்; ஜுரத்தின்போது எல்லாக் குறிகளும் அதிகமாகும்; குறிகளும் ஒன்றுக்கொன்று முரண் பாடுடையதாயிருக்கும்.

மேற்சொன்ன குறிகளிலிருந்து இம் மருந்து உபயோகப்படும் முக்கியமான வியாதிகள்:-

குழந்தை ஈரல் கட்டி, வயிற்றுக் கிருமி, அஜீர் ணம், பலவீனம், முற்றின சீதபோதி, உடம்பில் எரிச்சல், முறை ஜுரத்திற்கும் முக்கியமாக உப யோகமாகும். குழந்தைகளின் மஞ்சட்காமாலைக்கு சிறந்தது. பித்த எரிச்சல்.

நமது ஆசிரியர் அனேகக் தடவை இம்மருந்தை தானே வீரியப்படுத்தி அனேக பித்தஎரிச்சல் கேசு களுக்கு உபயோகப்படுத்தி யிருக்கிறார். அனேகம் தடவையானதினால் வியாதியஸ்தர் விவரம் எழுதப் படவில்லை.

நமது ஆசிரியர் அனுபவத்தில் இம்மருந்தையும் "காரிகா பாபய்யாவை"யும் கொண்டே எல்லாக் குழந்தைகளின் ஈரல்குலைக் கட்டிகளை சௌகரியப் படுத்திவிடலாமென்பது தீர்ந்த அபிப்பிராயம்.

முக்கிய வீரியம்:- 6x, 30 வீரியங்களில் உப யோகிக்கலாம்.

---



## 9. ABROMA AUGUSTA.

(அப்ரோமா அகஸ்டா)

தமிழ்:— சிவப்புத்துத்தி.

இது இந்தியாவில் பெரும்படியாக உத்திரப் பிரதேசத்திலிருந்து சிக்கிம், அஸ்ஸாம், வங்காளம் இங்கு வளர்கின்றது.

அழகான சிகப்பு பூக்களுக்காக இந்த செடியை தோட்டங்களில்கூட வளர்ப்பது உண்டு.

இதன் வேர்ப் பட்டையை மருந்திற்காக உப யோகிப்பார்கள். மாதவிடாய் வெளிப்படுத்து வதற்காகவும், மாதவிடாயின் போது உண்டாகும் வலிக்காகவும், கருப்பையின் டானிக்கு மாதிரியும் உபயோகப்படுகிறது. இதில் மாக்னீஷியம் உப்புக் கள் அதிகமாக இருப்பதால் இக்குணங்கள் இருக் கின்றன வென்பது நம்பிக்கை.

அலோபதி முறையில் வேரின் பட்டைச்சாறை மேற்சொன்ன வியாதிகளுக்கு கொடுக்கிறார்கள். பல்ஸாடில்லா, விபர்னம், ஹைட்ராஸ்டிஸ் முதலிய வைகளுக்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

ஆனால் இம் மருந்து தென்னிந்தியாவிலும், மேற்கு இந்தியாவிலும் உபயோகப் படுத்தப்பட வில்லை.

ஹோமியோபதி முறையில்: கல்கத்தா, டாக்டர் D. N. ராய் தான் முதன் முதலில் இதை ப்ரூவ் செய்தார். 10 வருடகாலம் டயபிடிஸ் இன்ஸிபிடஸுக்கு வெற்றிகரமாகஉபயோகித்தார் கள்.

குணம்குறிகள் :— நீரிழிவு, சிறுநீரில் அல்புமன்; இரவில் தானறியாமல் நீர்பிரிதல்; தளர்ச்சி; தூக்கமின்மை; மயக்கம்; கிறுகிறுப்பு; ராஜப்பிளவை; மாதவிடாய் தங்கிவிடுதல்: மாதவிடாயின் போது வலி இவைகளுக்கு முக்கியமானது.

குணம் :— சிடுசிடுப்பு; மனக்கிலேசம்; கோபம்; மனச்சோர்வு; சட்டென்று கோபப்படுதல்; சுறுசுறுப்பான வேலை பிடிக்காது; மூளைக்கே பலவீனம்; மறுதளித்தால் வெறுப்பு; தூக்கமின்மை; பலவான சமாசாரங்களின் சொப்பனம்; மறதி

தலையில் கனம்; மயக்கம்; கிறுகிறுப்பு; தலையில் அசதி; பின் தலையில் வலி; தலைப்பக்கம் அமுக்கினாற் போன்ற தோற்றம்.

பார்வை மங்கல்; கண்ணிமைகள் வீக்கம்; கண்ணிரண்டின் மேலும்வலி; கனம்; கண்ணை மூடிக்கொண்டே யிருக்கவேண்டும்; கண்ணீர் வடியும்; கண் அசதி; கண் வெறுப்பு.

காது சற்றே செவிடு; காதிரைச்சல்; வலி; சத்தம் கேட்கும்; காதிலிருந்து நீர் வடியும்;

அடிக்கடி தும்மல்; நாசியிலிருந்து நீர் வருதல்; நாசி வரண்டிருக்கும்.

முகம் சுருங்கி, வதங்கி, வயதானமாதிரி, உப்பி, வரண்டு இருக்கும்; நெற்றியிலும், கன்னங்களிலும் சிகப்புப்புள்ளிகள்; முகத்தில் எரிச்சலுடனும் அரிப்புடனும் கூடிய தடிப்புகள்; முகத்தில் பருக்கள்.

வாய் வரட்சி; அடிக்கடி அதிகமாக குளிர்ந்த தண்ணீர் குடிக்க இச்சை; ஆனால் தாகவரட்சை



அடங்காது; நாக்கு சுத்தமாகவும், வரட்சியாகவும் இருக்கும்.

தொண்டையிலும் வரட்சி; கெட்டியான பதார்த்தம் விழுங்குவதில் சிரமம்; எரிச்சல்; வலி; ஆனால் திரவரூபமான பதார்த்தம் சாப்பிட்டால் குறிகள் சமனமாகும்.

பசி அபாரம், அடங்காத பசி, பொய்ப் பசி; நன்றாக சாப்பிட்ட பிறகும் கொஞ்சம் சாப்பிடலாம் தித்திப்பு பிடிக்கும்; அமித தாகவரட்சை; பசியை ஒன்றினாலும் அடக்கமுடியாது; பசியுடன் வயிற்றில் காலியான உணர்ச்சி; எந்த ஆகாரத்தைக் கண்டாலும் பசி; ஆனால் எது சாப்பிட்டாலும் பசி அடங்காது; பித்த எரிச்சல்; ஏப்பம். புளிச்ச ஏப்பம்; வயிற்றில் கனம் ஒன்றும் இராது; எந்த டயத்திலும் சாப்பிடலாம்; திரவபதார்த்தத்தில் அதிக விருப்பம்; பசியிருக்கும்போது பலவீனம்; அடிக்கடி சாப்பிட இச்சை. வயிற்றில் ஆகாரம் அதிகநேரம் தங்காதது மாதிரி உணர்ச்சி.

அடிவயிற்றில் காற்று உப்பிசம்; வாயு அதிகம் பிரியும். மலச்சிக்கல்; முக்கி மலம் கழிக்கவேண்டும்; தினம் பிரியாது; ஆசனவாயில் வரண்ட உணர்ச்சி; கஷ்டமான முடிச்சு மாதிரி மலம்.

பகலும், இரவும் அதிகமாக சிறுநீர் பிரியும்; அளவும் அதிகமாயிருக்கும்; இரண்டு மணிக்கொருதரம் ஏராளமாகப் பிரியும்; சிறுநீர் பிரிந்தவுடன் அதிகதாகம்; வாயும் வரட்சையுடன் தாகம்; சிறுநீரில் சர்க்கரை; ஒவ்வொருதரம் சிறுநீர் பிரிந்த பிறகு ரொம்ப பலவீனம்; இரவிலும் தானாகே நீர் பிரியும்; இரவில் அடிக்கடி எழுந்திருக்கவேண்டும்.

சிலசமயம் சிறுநீர் துவாரத்தில் எரிச்சல்; அதிக சர்க்கரைநீர் பிரிவதினால் ஆண் குறியின் நுனி புண் மாதிரி வெளுப்பாயிருக்கும்; அரிப்பு; சம்போகத்தில் இச்சையின்மை; சம்போகத்திக்கு பிறகு ரொம்ப பலவீனம்.

மாதவிடாய் அடிக்கடி ஏற்பட்டு நீடித்திருக்கும்; இரண்டு நாளுக்கு முந்தியே அடிவயிற்றில் வலி இரத்தம் கருப்பாகவும், கட்டிகட்டியும். வெளுத்தும் இருக்கும்; மயக்கம், குமட்டல்; வாந்தி யெடுத்தல், சிலசமயம் ஹிஸ்டீரியா வலிப்பும் இருக்கும்.

நோஞ்சலான பெண்களுக்கு ஏராளமான வெள்ளைப்படுதல்; ரத்தச் சோகை; இருமல் இரவில் அதிகம். குளிர்ந்த காற்று இருமலை அதிகரித்து விடும்; சளி தாராளமாக வெளிப்படும்; இருமலினால் மார்ப்புறங்களில் வலி; இருமும்போது விலாப்புறங் களைப்பிடித்துக்கொள்ளவேண்டும்; பிரான்கைடிஸ்; கோழை நாற்றமடிக்கும்; பிரான்கோநிமோனியா கோழை வெள்ளையாயும், மஞ்சளாகவும் கட்டியாயு மிருக்கும். மூச்சு துரிதமாகவும் இருக்கும்,

ஹிருதய ஸ்தானத்தில் கவலை; பலவீனம்; படபடப்பு; அசைந்தால் அதிகரிக்கும்; இருதயத்துடிப்பு பலவீனமாய் இருக்கும்

கழுத்தும், பிடரியும் பலவீனப்பட்டுத் தோன்றும்; முதுகுப்புறம் சிறுவலி; கை-கால்களில் வலி; கால் அசதி; மூத்திரக்காய்களில் வலியும்; இடுப்புப் பிடிப்பும் உண்டு.

உடல் முழுவதும் சிறு சுரம்; அதிகத்தாகம்; தூக்கமின்மையுடன் அரைத்தூக்கம்; தூக்கத்தை அடிக்கடி சிறுநீர் கழிப்பது கலைத்துவிடும்.



தோல் வரண்டிருக்கும்; அரிப்பு; எரிச்சல்; சிறு சிறு வேனல் கட்டிகள்; பிளவைகள்.

பொதுவாக நீரழிவில் இதை யூரேனியம்; சைஜீஜியம்; ஆசிட்பாஸ் முதலியவற்றைவிட சிறந்ததென்று சொல்லலாம்.

இருமலுக்கு பிரியோனியாவைவிட சிறந்தது. அல்லது பிரியோனியா உபயோகப்படாவிட்டாலும் இது நல்லது.

பிளவைகளுக்கு மிகச் சிறந்தது. அலோபதிக் பென்சிலினைவிட மிகச் சிறந்தது.

பிளவைகளில் இதிலிருந்து நம் லாபரட்டரியில் தயாரிக்கும் இன்ஜெக்ஷனை நேரடியாகச் செலுத்திவந்தால் ஆபிரேஷன் இல்லாமலேயே எல்லா கேசுகளையும் குணப்படுத்தி விடலாம்.

டிஞ்சராகவும், இன்ஜெக்ஷன்களாகவும் கிடைக்கும்.

---

## 10. CARICA PAPAYA.

### காரிகா பாபயா.

### (பப்பாளி மரம்)

.........

இது ரொம்ப உபயோகமுள்ள மிருதுவான மரம். இந்தியா முழுவதும் வளர்க்கப்படுகிறது. இதனுடைய காய்கள் பெரும்பாலும் மாமிசம் சாப்பிடுகிறவர்களால் கறியுடன் சமைத்து சாப்பிட உபயோகப்படுகிறது. பழம் தித்திப்பாகவும் ருசியாகவும் இருக்கும். முற்றின காய்களிலிருந்து சார் இறக்கப்படுகிறது இதில் டார்டாரிக், சிட்ரிக், மாலிக் அமிலங்களும், ஆல்பினாயிட் சத்துக்களும், பாலைத் தயிராக்கும் சத்தும் இருக்கிறது. விதைகளிலிருந்து ஒரு எண்ணெயும் கிடைக்கிறது. இலைகளில் கார்பெயின் என்ற ஆல்கலாய்ட் சத்தும் கிடைக்கிறது.

அலபதிக் உபயோகங்கள் :—

பழுத்த பழம் அஜீர்ணத்திற்கும் இரத்த மூலத்திற்கும் நாள்பட்ட மலச் சிக்கலையும் நிவர்த்திக்கவல்லது. முற்றின காய் பேதி உண்டாக்கும். சிறு நீரைப் பெரிக்கும். இதன் சாறு மாதவிடாய் உண்டாக்கும். அதிக அளவில் கொடுத்தால் கர்ப்பப் பையை சுருங்கவைக்கும். கருப்பையின் வாயில் சாறைத்தடவ, கருச்சிதைவும் உண்டாக்கும். இந்த சாறு தோல்மேலேபட்டால் வீக்கமும் ரணமும் உண்டாக்குவதால் கடி. படைக்கு இதை மேலேதடவுகிறார்கள். வயிற்றுக்கிருமிகளைப்போக்கவும் இதன்சாறை உட்கொள்ளுகிறார்கள்.

பழங்களை சாப்பிட்டுவந்தால் ஈரல் குலைக்கட்டிகள் வீக்கம் நிச்சயமாக குணம் அடைகின்றது. நரம்புவலிகளில் இலைகளை தணலில் வாட்டி மேலே போட்டால் குணம் அளிக்கிறது.

இதன் சாறிலிருந்து எடுக்கும் 'பெப்பெயின்' என்ற சத்துப் பொருள் இருநூறு பங்கு இரத்தத்தை ஜீர்ணிக்க வல்லது. அதாவது (ஒரு பாட்டில்) இரண்டு சேர் பாலை ஏழு குன்றுமணி எடையுள்ள 'பெப்பெயின்' ஜீர்ணம் செய்துவிடும்.

ஹோமியோபதி உபயோகங்கள் :—

கல்கத்தா Dr. D. M. Ray, S. C. Gosh. முதலிய பெரிய டாக்டர்கள் அதிகம் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.



பசும்பால் மாமிசம்கூட ஜீர்ணம் செய்யமுடியாத பலஹீனம் அடைந்த நோயாளிகளுக்கு இது கொடுத்து வந்தால் ஜீர்ண சக்தி அதி சீக்கிரத்தில் சீர்படும்.

ஈரல் குலைக்கட்டி வீக்கத்துக்கு இது ஓர் சிறந்த மருந்து.

மலம் ஜீர்ணமாகாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நாளைக்கு அநேகதடவை கழியும்.

ஈரல் இருக்குமிடத்தில் வலி :—

கண்களில் மஞ்சள், நாக்கு வெண்மை படர்ந்து இருக்கும். பால்கூட ஜீர்ணமாகாது. சிறிது அளவு பால் சாப்பிட்டாலும் விலாபக்கத்தில் வலி.

1x, 3x வீரியங்கள் சிறந்தது.

அனுபவ கேஸ் :— ஆண் குழந்தை வயது 3, 1954.

*Son of N.*

பசி இல்லாமல் ஈரலும் ஈரலுடைய மேல்பாகம் மூன்று விரல்அளவும் பருத்து இருந்தது. கைகால்கள் சீம்பிப்போய் உடலின் வலு குறைந்து பசியும் மந்தித்துவிட்டது. சிறுநீர் குறைந்து சிறுநீர் பிரிந்த இடம் ஈ மொய்க்க ஆரம்பித்துவிட்டது. சிலசமயம் மாலை வேளைகளில் லேசான ஜுரமும் சிலசமயம் ஆகாரம் வாந்தி எடுக்கவும் செய்தது. மலம் வெண்மையாகவும் களிமண்மாதிரி கொழு, கொழுவென்றும் போக ஆரம்பித்தது.

இதை கட்டி என்று நிர்மானித்தோம்.

இதற்கு நேரிடையாக நமது சிகிச்சையே ஆரம்பிக்கப் பட்டது. ஆகாரம் காலையிலும் மாலையிலும் பால் சிறிது தேன் கலக்கப்பட்டது. தக்காளிப்பழம், ஆரஞ்சுப்பழம் திராக்ஷை இவைகள் சாறு பிழிந்து பச்சையாக கொடுக்கப் பட்டது. எண்ணெய் பண்டங்களான தோசை, பஜ்ஜி, வறுவல், பொரியல் முதலியன ஆகாரத்தில் சேர்க்கப்படவில்லை.

சிகிச்சை :—

காரிகாபெப்பயா ஆசிரியர் அவர்களாலேயே 1x வீர்யத்தில் தயாரிக்கப்பட்டு 3 grs. அளவு தினம் 4-வேளை கொடுக்கப்பட்டது. பதினைந்துநாள் கொடுத்த பிறகு நால் வீக்கம் ஒருவிரல் அளவிற்கு குறைந்துவிட்டது பசி நன்றாக ஏற்பட்டு ஜீர்ணம் சரியாக ஆக ஆரம்பித்தது. பதினைந்து நாளைக்குப் பிறகு காரிகா 3x வீர்யத்தில் தினம் இரண்டு வேளையும் நடுநடுவே கோரோசனை 3x வீர்யத்தில் சில டோஸ்களும் கொடுக்கப்பட்டன.

இரண்டே மாதங்கள் குழந்தை பூர்ண குணம் அடைந்துவிட்டது.

குழந்தைகளின் ஈரல் குலைகட்டிக்கு நிகரற்ற மருந்து "காரிகா"

••• ••• •••

# நம் நாட்டு மருந்துகள்.

## 11. வேப்ப மரம் (அஜடெரக்டா) AZADIRACHTA.

இது பர்மாவிலும் இந்தியா முழுவதும் அதிகமாக விளைகிறது. சுமார் 40, 50 அடி உயரம் பெரிய மரமாக வளர்கிறது. பெரும்பாலும் வீடுகளில் பரவியிருக்கின்ற காற்றை சுத்தப்படுத்துகிறது என்று அபிப்ராயப்படுகிறார்கள். இது சிறிய வாசனையுடைய பூக்களுடன் ஒரு கொட்டையுடைய சிறிய உருண்டை வடிவாக மஞ்சள் கலருடன் பழம் உடையது. இந்த மரத்தின் ஒவ்வொரு பாகமும் மருந்தாக உபயோகப்படுத்தப்படுகிறது. தொன்றுகாலந் தொட்டு ஆயுர்வேத வைத்தியர்கள் இதனுடைய பட்டையையும, இலைகளையும், பழங்களையும் மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள் இதன் பட்டையின் கஷாயத்தை ஆயுர்வேதவைத்தியர்கள் ஜ்வரத்திற்கு மருந்தாகவும், சில தோல் வியாதிகளுககும், தாக வரட்சி, வாந்தி முதலியவற்றிற்கும் உபயோகப் படுத்துவார்கள். இந்த பட்டையிலிருந்து வரும் கோந்தை உற்சாகமூட்டும் மருந்தாக உபயோகப் படுத்துகிறார்கள்.

சரகர் இதை குஷ்ட ரோகத்திற்கு உபயோகப் படுத்தினார். சுஷ்ருதர் சில வெட்டை வியாதிகளுக்கும, குஷ்டம் முதலிய சில தோல் வியாதிகளுக்கும தாக வரட்சியுடன் கூடிய ஜ்வரத்திற்கும், உடம்பில் எரிச்சலுடன் கூடிய ஜ்வரத்திற்கும் கொடுத்து வந்தார். ஹாரிதர், வாக்படர் முதலியவர்கள் வேனல் கட்டிகளுக்கும் தலை வழுக்கைக்கும் உபயோகப் படுத்தினார்கள். பங்க சயனர் அபிப்ராயப்படி ரொம்ப கடுமையான வியாதிகா (நரம்பு வலி) இரும

வினால் ஏற்படும் ஹ்ருதய ரோகங்களுக்கும், குழந்தைகளின் கண் வியாதிகளுக்கும் சிறந்தது; வயிற்றுக் கிருமிகளுக்கு, துர்நாற்றமுடைய புண்களுக்கும் நல்லதென்று பவப்பிரகாஸ் அபிப்ராயப்படுகிறார்.

அலோபதிக் உபயோகங்கள்:—சிறு அளவில் பட்டை முறைக் காய்ச்சலுக்கு மருந்தாகவும், டானிக் மருந்தாகவும், கிருமி நாசனியாகவும் உபயோகப் படுத்தப்படுகிறது. இலை, பூ இவைகளின் கஷாயம் சிறுநீர் வெளிப்படுத்த உபயோகப்படுத்துகிறது. இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கஷாயம் பெரும்பாலும் ஜுரத்திற்கு மருந்தாகவும், அஜீர்ணத்திற்கும், பொதுவாக பலஹீனத்திற்கும், மஞ்சள் காமாலை, வயிற்றுக் கிருமிகள், சிரங்கு, குஷ்டம் முதலியவைகளுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். இதை அதிக அளவில் உட்கொண்டால் கிறுகிறுப்பு உண்டாக்கும் ஒரு பாஷாணம்; இது குடலைத் தாக்கி வாந்தியும் பேதியும் உண்டாக்கிறது.

இதனுடைய விதையிலிருந்து வேப்பெண்ணை தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணையில் "மார்கோஸின்" என்ற ஒரு கசப்பான பொருளும், கந்தகம் ½ சதவிகிதமும் இன்னும் சில வஸ்துக்களும் இருக்கின்றன. கல்கத்தாவில் ஒரு கம்பெனியிலிருந்து ஒரு இன்ஜெக்ஷன் தயார்செய்து குஷ்டம் முதலிய வியாதிகளுக்கு உபயோகப்படுத்தினார்கள். ஆனால் பிரயோசனப்படவில்லை.

ஹோமியோபதி உபயோகங்கள்:— டாக்டர் P. C. மஜும்தார் M. D. கல்கத்தா அவர்களால் இது முதன்முதலில் ப்ருவ் செய்யப்பட்டது. அவருடைய சிஷ்யர் U. C. பாகுசி, பிறகு டாக்டர் சக்ரபர்த்தி முதலியவர்களால் ப்ருவ் செய்யப்பட்டது.



இதனுடைய நாள்பட்ட மரத்தின் பட்டையிலிருந்து ஹோமியோபதி டின்சர்கள் தயார்செய்யப் படுகின்றது.

குறிகள்: மனது:— மனச்சளிப்பு; மறதி; எழுதுவதிலும் உச்சரிப்பதிலும் தப்பு செய்தல், சுறுசுறுப்பின்மை, மனக் கவலை, மனிதனுடைய பெயர் முதலியனகூட மறந்துபோதல், வெளியில் போவதற்கும், நடப்பதற்கும்கூட பிடிக்காமலிருத்தல்.

தலை:— உட்கார்ந்து எழுந்தவுடன் ஏற்படும் மயக்கம், தலையை அசைத்தால் அதிகரிக்கும் தலைவலி, நெற்றிப்பொட்டு நரம்புகள் துடிப்புடன் மயக்கம். வலது பக்கம், வலது கண்களில் அதிகமாக வலிக்கும் தலைவலி, வலி தாங்காது. அசைந்தாலும் வலி அதிகமாகும். திறந்த வெளிகளில் அல்லது ஈரத்துணி சுற்றுவதினால் ஏற்படும் நெற்றிப்பொட்டு தலைவலி; தலையைத் தொடமுடியாது. தலைமயிரைத் தொட்டாலும் வலிக்கும் காலையில் 10 மணிக்கு கடுமையான தலை வலியுடன் கிறுகிறுப்பு மயக்கம். நடந்தால் பின் தலையில் அதிர்ச்சியுடன் வலி.

கண்:— கண்களில் எரிச்சல்–இலேசான வலி. சிறிது தண்ணீருடன் கண்கள் சிவந்து வலியுடன் இருக்கும். கண் சிவந்து உள் அமுங்கியிருக்கும்.

காது:— வாயைத் திறந்தால் காதுக்குள் "பஸ்" என்ற சத்தம்.

மூக்கு:— ஜலம் தண்ணீர்மாதிரி வரும்.

முகம்:— எரிச்சலுண்டு.

வாய்:— தாக வரட்சியிருக்காது – ஆனால் வாய் பிசுபிசுப்புடனிருக்கும் தண்ணீர் ருசிக்கும் ஆனால்

வாய் பிசுபிசுப்புடன் கசப்பாயிருக்கும். நாக்கு ஓரங்களிலும், மேற்புரத்திலும் வலியுடன் கூடி நெருப்பு சுட்டமாதிரி எரிச்சல். நாக்கில் நாற்றத்துடன் வலி; உமிழ்நீர் உப்புகரிக்கும்; விழுங்குவதில் சிறிது சிரமம்.

தொண்டை:— தொண்டையில் கசப்பு.

வயிறு:— தாகம் இருக்காது. அதிகமான தாகம். நெஞ்சு எரிச்சல்-வாயில் எச்சல் ஊறல். ரொம்ப நாழிக்கொரு தடவை பெருந் தாகம்.

அடிவயிறு (Abdomen) வயிற்றுப் பொருமலுடன் கூடிய வலி; அடிவயிற்றில் முறுக்குவது போன்ற வலி; தொப்புளில் பிடுங்கி எடுக்கும் வலி; வலியினால் முன்பக்கம் குனிந்தால் சாதகம். நாற்றத்துடன் அபான வாயு வெளிப்படும். இரண்டு விலாப்புறங்களிலும் வலியுடன் உப்பிசம்.

மலம்:— ரொம்பவும் மலச் சிக்கல் தீய்ந்தும் கட்டிகட்டியும் இருக்கும். கெட்டியாகயிருந்தாலும் சாதாரண நிறமாக இருக்கும். மலம் அதிகமாகவும் குழம்பாகவும் இருக்கும். பேதியானாலும் திருப்தியிருக்காது.

ஜனனேந்திரியங்கள்:— ஆண்களுக்கு அதிக இச்சை. இச்சை குறைவாகயிருக்கும். சிறுநீர் குறைவாகவும், சிவந்தும் எரிச்சலுடனும் பிரியும். வெளுப்பாகவும், ஏராளமாகவும் பிரியும். சிறுநீர் ரொம்ப நாற்றமடிக்கும்.

சுவாசாசயங்கள்:— இருமல், குளித்த பிறகு மத்தியானம் ஒரு மணிக்கு இருமல். கோழை சிறிது சிறிதாக சிறிய உருண்டைகளாக சிரமத்துடன்



வெளிப்படும் நடுநடுவே பெருமூச்சு; சிறிது தொண்டைக் கம்மல்; மூச்சு வெகு வேகமாகவும் சூடாகவும் இருக்கும். இருமல் மத்தியான வேளைகளில் சினுக்குடனும் வெள்ளைக் கோழையுடனும் சிரமத்துடன் வெளிப்படும்.

மார்பு:— வலது மார்பில் வலி. சமயத்தில் சுரீர் சுரீர் என்று குத்தும் பின்புறம் பிடரியில் வலியும் பலஹீனமும் இருக்கும்.

கை கால்:— கை கால்களில் மரப்பு; வாதம் வந்தமாதிரி மரமரப்பு; கால்களில் வாயு வலிகள்.

தூக்கம்:— தூக்கமில்லாமல் படுக்கையில் புரளுவர். ஸ்வப்பனத்தில் சண்டை போடுவதுமாதிரி.

ஜ்வரம்:— சிறிது குளிர் அல்லது குளிரில்லாமல் மாலை 4 மணிக்கு ஆரம்பித்து 7 மணிக்கு விடும். கை, கால், முகம் எல்லா இடங்களிலும் பற்றி எரிவது போன்ற உணர்ச்சி. நெற்றிபுறம், கழுத்துபுறம், மேல் உடம்பு பூராவும் வியர்வை. வயிற்றிற்குக் கீழ்புறம் வியர்வையிருக்காது.

தோல்:— சினைப்புகளில்லாமலேயே வெளிப்புறம் அரிப்பு.

பொதுவாக ஜ்வரம், பசியின்மை, நாட்பட்ட ஜ்வரங்கள், அசதி, தாக வரட்சி, இருமல், ஆறாத புண்கள், விக்கல், வெள்ளை இவைகளுக்குச் சிறந்தது ஞாபக மறதிக்கு — ரொம்ப தெரிந்தவர்களுடைய பெயர்கூட மறந்துவிடல் எழுதுவதற்கும், பேசுவதற்கும்கூட மறதி. தலைவலி-மயக்கம்.

கொயினா அதிகமாக சாப்பிட்டுவரும் வியாதிகளுக்கு சிறந்த மருந்து. கொயினா கொடுப்பதினால்

ஏற்படும் — ஆஸ்த்துமா, மலச்சிக்கல், கர்ப்பப்பை பலஹீனம். இருமல், ஜலதோஷம் இவைகளை குணப்படுத்தும். பொதுவாக இதனுடைய குறிகள் திறந்த காற்றில் வலிகள் அதிகரிக்கும் துணை மருந்துகள்: ஆர்சனிக் ஆல்பம், ஐபிகாக், நேட்ரம் மூர். பல்ஸாடில்லா, ரஸ்டாக்ஸ், ஸல்பர், பிரியோனியா.

## அனுபவ கேஸ் 1.

### வயிற்று வலி.

R. Male. ஆண்-வயது 27. July 1954

### ACUTE GASTRITIS.

மாலை சுமார் 2 மணிக்கு இந்த கேஸ் நம்மிடம் வந்தபொழுது இருந்த நிலைமை: இவருக்கு பிரக்ஞை தவறியிருந்தது. கோபம், சிடுசிடுப்பு, அமைதியின்மை, ஓயாமல் தண்ணீர் தாகம், தாங்கமுடியாத வயிற்று வலியுடன் பிரண்டு பிரண்டு அவஸ்தைப் பட்டார்; தண்ணீர் சாப்பிட சாப்பிட வாந்தி. மூச்சுவிடமுடியாமல் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். தலைகாணிகளால் வயிற்றை அழுத்தி பிடித்துக் கொண்டு புரளுவார்.

சிகிச்சை:— ஆண்டிபாயிசன் 1 c. c. ஊசி ஒன்று போடப்பட்டது டிக்சர் அஜடெரிக்டா 5 துளிகள் ஒரு அவுன்சு ஜலத்தில் கரைத்து 10 நிமிஷத்திற்கொரு முறையாக 2 டோஸ்கள் கொடுக்கப்பட்டது ½ மணி நேரத்திற்குள் 4 முறை குழம்பாக மலம்கழித்தார். தண்ணீர் தவிர ஆகாரம் வேறொன்றும் கொடுக்கப்படவில்லை மணி 4-க்கு மறுபடியும் ஒரு ஆண்டிபாயிசன் ஊசி போட்டு,



அஜடெரிக்டா டிஞ்சர் பவுடருடன் சேர்த்து ஜலத்தில் கரைக்காமல் கொடுக்கப்பட்டது. பக்கத்தில இருப்பவரை அமைதியின்மையின் காரணமாக அடித்தல். பிடி பிடி என்றும் சத்தம் போட்டுக் கொண்டேயிருந்தார் ஒரு மணி நேரத்திற்கு பின்பு எல்லா குறிகளும் மூச்சுத்திணரல் உள்பட சரிப்பட்டு விட்டது. மணி 6-க்கு தாம் 15 நாள் ஆபீசுக்கு லீவ் போட்டு வந்திருப்பதாக நமக்கு தகவல் கொடுத்தார். 8 மணிக்கு அவருக்கு தெரிந்த நண்பர் இல்லத்திற்குச் செல்வதாக கூறிச் சென்றார். மறுநாள் காலையிலிருந்து மருந்து ஒன்றும் வேண்டாமென்று சொல்லி Nuxvomica 2 டோஸ் கொடுத்து அனுப்பப் பட்டது.

★

## 12. BOERHAAVIA DIFFUSA. (PUNARNAVA)

### மூக்கரட்டை.

இந்த செடி இந்தியா முழுவதும் இருக்கிறது. அநேகமாக மழை காலத்தில் காய்ந்து இச்செடிகள் மறுபடியும் வேரிலிருந்து துளிர்த்துவருவதால் இதற்கு புனர்னவா என்ற பெயர் வந்தது. இந்த செடி படர்ந்து மழை காலத்தில் ரொம்பவும் தொந்திரவுகூட கொடுக்கும். இதனுடைய வேர் தடிப்பாகவும், கசப்பாகவும், குமட்டல் கூடினதாகவும் இருக்கும். வேரிலிருந்து பல தண்டுகள் ஏராளமாக சுமார் 2 அடி அல்லது 3 அடிகள் மெல்லியதாய் சிறு சிறு தண்டுகள் உடையதாய் கிளம்பும். இந்த அடி தண்டு நசுக்கினால் கொழகொழப்பாக இருக்கும். இலைகள் தடிப்பாகவும் மேற்பக்கம் பசுமையாகவும் கீழ்பக்கம் வெண்மையாகவும் சிறியதாகவும் உருண்டையாகவுமிருக்கும். பூக்கள் சிறியதாகவும் ஏழெட்டு குடபலாகவும், சிறிது நீலம் கலந்தும்,

வெண்மையாகவுமிருக்கும். பழம் நீண்ட வடிவமுள்ள பழுப்பு பச்சையாகவும் இருக்கும். மற்றொரு விதமான செடியில் சிவப்பு பூக்களும் உண்டு

ஆயுர்வேத உபயோகங்கள் :— தன்வந்திரி இது சிறுநீரைப் பிரிக்கவும், மலமிளக்கியென்றும் கூறுகிறார். ஆகையினால் வீக்கம், ரத்த சோகை, இருமல், குடல் வலி இவைகளுக்கு உபயோகப் படுத்தியதுடன். ரத்தப் பெருக்கு, பித்தாதிக்கத்திற்கும் கொடுத்தார். சரகர் குஷ்டத்திற்கு மேலுக்குப் பூசும் மருந்தாகவும், சில தோல் வியாதிகளுக்கும் உபயோகப்படுத்தினர். நீர்ப்பை கல்லுக்கும், பித்தப்பை கல்லுக்கும், வீக்கத்திற்கும்கூட உபயோகப்படுத்தினர்.

சுஷ்ருதர் மேற்சொன்ன வியாதிகளுக்கெல்லாம் சொல்லிவிட்டு மழை காலத்தால் ஏற்படும் ஜுரங்களுக்கும், எலி, நாய், முயல், பாம்பு முதலிய கடிகளுக்கும் உதவும் என்று சொல்லுகிறார். இது ஆஸ்த்துமாவிற்கு சிறந்த மருந்தென்றும் கூறுகிறார். அதிக அளவில் உட்கொண்டால் வாந்தி உண்டாக்கும். சக்ரதத்தர் அமிதக் குடியினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சிக்கு சிறந்ததென்று சொல்லுகிறார். ப்ருந்தா என்பவர் அமித குடியினால் ஏற்படும் கோளாறுகளுக்கு சிறந்தது — உயர்ந்த டானிக் என்றும் கூறுகிறார். சுமார் மூன்று முதல் ஆறு மாத காலம்வரை இதை உட்கொண்டு பார்த்தால இளைத்திருக்கும் உடம்பு தேறிவிடும்.

இன்னும் சிலர், பங்கசயனர், ஹரிதரர் முதலியவர்களும், தூக்கமின்மை, வாய்வு, கண் வியாதிகள், க்ஷயரோகம் முதலியவைகளுக்கு உபயோகப்படும் என்று சொல்லுகிறார்கள் டிப்டி-பூநூனி வைத்தியர்கள ஆஸ்த்துமா, மஞ்சள்காமாலை, மஹோதரம்,



நீர்ச்சுளுக்கு, ஜுரம் இவைகளுக்கு உபயோகப் படுத்துகிறார்கள்.

அலோபதிக் உபயோகங்கள்:— இது நீர் பிரிக்கும் குணம் உடையதாய் இருப்பதால் பெரும்பாலும் மஹோதரம் பாண்டு முதலியவைகளுக்குதான் உபயோகப்படுத்துகிறார்கள். மஹோதரத்தால் மூத்திரக் காய்கள் அதிகமாக கெடாமலிருந்தாலும், ரத்த சீத பேதிகளால் ஏற்பட்ட மஹோதரமாயிருந்தாலும் இது துரிதமாக வேலைசெய்யும்.

தேள் கடிக்கு இதை மேலுக்கும் உள்ளுக்கும் கொடுப்பதாக கூறப்படுகிறது. ஆஸ்த்மா, வெள்ளை, மஞ்சள்காமாலை, ஈரல் வீக்கம், கட்டி முதலியவைகளுக்கு உபயோகமாகும் மஹோதர வீக்கங்களில் இதை அரைத்து மேலுக்கு பற்று போடுவார்கள். வேரை தூள் செய்து வயிற்றுக் கிருமிகளுக்கும், மலமிளக்கியாகவும் உபயோகப்படுத்துகிறார்கள்

ஆஸ்த்துமாவிற்கும் தேவலை. ஹ்ருதயம், மூத்திரக்காய், ஈரல் இவைகள் அதிகம் கெட்டு ஏற்படும் மஹோதரத்திற்கு உபயோகப்படாது.

இம் மருந்தில் "புனர்னவில்" என்ற ஒரு மருந்து சத்தும் "பொடாஸியம் நைட்ரேட்" இன்னும் சில நைட்ரேட்டுகளும் இருப்பதைக் கண்டாராய்ந்தார்கள் இவைகளால்தான் இதற்கு நீரைப் பிரிக்கும் சக்தியிருக்கிறது.

ஹோமியோபதி உபயோகங்கள் :— ஈரல் கெட்டுப்போய் ஆரம்ப ஸ்திதியிலிருக்கும் பாண்டுவீக்கத்திற்கு ரொம்பவும் உபயோகமானது. பொதுவாக ஆஸ்த்துமா, நாட்பட்ட பலஹீனம் முதலியவை

தென்னிந்தியாவிலும் இன்னும் இதர இடங்களிலும் இதைப்போன்ற தோற்றமுள்ள செடிகள் உள்ளன. இந்தமாதிரி செடிகளை நிலவேம்பென எண்ணங்கொண்டு பெரும்பாலான வைத்தியர்கள் கையாளுகிறார்கள். ஆனால் உண்மையான நிலவேம்பினால் கிடைக்கும் பலன் இதில் கிடைக்காது. ஆகவே உண்மையான நிலவேம்பைப் பார்த்து உபயோகப்படுத்தவேண்டும்.

ஆயுர்வேத உபயோகங்கள்:— சரகர் மஹோதரத்திலும் ரத்த வாந்தியிலும் உபயோகப்படுத்துகிறார். ஹரிதரர், கர்ப்ப காலத்தில் ஏற்படும் ரத்த வாந்திக்கு சிறந்ததென்று கூறுகிறார்.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் டைபாயிட் ஜுரத்திற்கும், முறைக் காய்ச்சலுக்கும், மலேரியா ஜுரத்திற்கும், பித்தக் கோளாறுகளுக்கும், ரத்தக் கோளாறுக்கும் தாகம், குஷ்டம், சிரங்குகள், பூச்சிகள், இவைகளுக்கும் சிறந்ததென்று உபயோகப்படுத்திவந்தார்கள்.

அலோபதி உபயோகங்கள்:— கொயினாமாதிரி இந்த கசப்பு மருந்தை ஜுரத்திற்கும் அஜீர்ணத்திற்கும், வயிற்றில் அமித புளிப்பிற்கும், ஈரல் சம்பந்தமான கோளாறுகளுக்கும், முறைக்காய்ச்சல் முதலியவற்றிற்கும் உபயோகப் படுத்துகிறார்கள். கவுட் Gout உடைய நோயாளிகளுக்கு டானிக்காக உபயோகப்படுத்தப்படுகிறது

ஹோமியோ உபயோகம்:— அஸாம் மாகாணத்தில் கௌரிபூர் ஊரைச்சேர்ந்த டாக்டர் காளிகுமார் பட்டார்ஜீ என்பவரால் முதல்முதலாக இது ப்ரூவ் செய்யப்பட்டது அவர் ப்ரூவ் செய்த



குறிகள் ஹானிமான் என்ற பத்திரிகையில் 1932, பங்குனி மாதம் இதழில் பிரசுரிக்கப்பட்டது.

கீழ்கண்ட முக்கியமான குறிகள் அவர் கண்டறிந்தார்:— மனதில் அசதி, சோம்பேறித்தனம், சதா படுத்துக்கொண்டேயிருத்தல்; இரண்டு நெற்றிப் பொட்டுகளிலும் லேசான வலி ஏற்பட்டு தலை முழுவதும் பரவும். தலையில் ஜில்லுப்பும் இருக்கும் கண்களிலும் நாசிகளிலிருந்தும் எரிச்சல் தென்படும். காதுகளில் உஸ் என்ற சத்தம். வாயில் ருசி இருக்காது துர்நாற்றம் வீசும். தொண்டையில் காலையிலும் மாலையிலும் வலி. சூடான வென்னீர் சாப்பிட்டால் சாதகம். நாக்கு தடிப்பாக இருக்கும் ஆதலால் பேசுவது சிரமம். நல்ல மஞ்சள் கலந்த கனத்த மாசு படிந்திருக்கும். ஜுரத்தின்போது மூச்சு துரிதமாக வெளிப்படும் சில சமயம் வாண்ட இருமலும் வெளிப்படும். ஈரல் குலை இரண்டும்— வீங்கியும வலியும் இருக்கும். அடிவயிற்றில் காற்று உப்பிசமிருக்கும்.

வலது மூத்திரக்காய் பக்கம் வலி. சிறுநீர் கழிக்கும்போது எரிச்சலுடன் கூடியிருக்கும். கை, கால்கள் வலி. ஜுரத்தில் குளிர் அதிகமாக நீடிக்கும். வென்னீர் சாப்பிட தாகம். ஜுரம் சுமார் மூன்று மணி நேரம் நீடிக்கும். பிறகு வியர்வை, மார்பு, அக்குள், தொடை முதலிய பாகங்களில் சிறிது இருக்கும். சில சமயம் குளிர் நிலைமையில் குமட்டலுடன் பித்தமான வாந்தியுமிருக்கலாம். ஜுரம் எந்த நேரத்திலாவதும் வரலாம். ஜுரம் ஆரம்ப முதல் கடைசிவரை கண்கள் எரிச்சலிருக்கும். இது ஒரு முக்கியமான குறி.

பிறகு காலா அஜார் என்ற ஜுரத்திற்கும் இது ஒரு சிறந்த மருந்து. நாள்பட்ட ஜுரத்திற்கு ஈரல்

வீக்கமும் சம்பந்தப்பட்டிருந்ததனால் இதைக் கொடுக்கலாம். இந்த மருந்து மலச்சிக்கல் உண்டாக்குவதில்லை. ஆகவே ஜுரத்திற்கு பிறகு ஏற்படும் பலஹீனம். பசியின்மை, வயிற்றுப்பிசம், வயிற்றுக் கிருமிகள் முதலியவைகளுக்கு வெகு சிறந்தது.

## அனுபவ கேஸ்

வயது 50. முறைக் காய்ச்சல் மலேரியா. Miss J.

3 மாதமாக. 54.

ஜுரக் கட்டி சுமார் நான்கு விரக்கடை அளவு வீங்கியிருந்தது. ஜுரம் கண்டு சுமார் இரண்டு மாதங்கள் கழித்து நம்மிடம் வந்தது. காலம் தவறி ஜுரம் வந்துகொண்டிருந்தது. ஆனால் ஜுரம் ஆரம்பிக்கும்போது ஒவ்வொரு தடவையும் தாங்க முடியாத எரிச்சல் வியர்வை லேசாக இருக்கும்.

இரண்டு மாத காலத்திலும் இவர் நிவாக்வின், பாலுட்ரின், கோமாக்வின் முதலிய மருந்துகளும், கொயினா ஊசியும் போட்டுக்கொண்டார். ஆனால் பலன் ஒன்றுமில்லை.

சிகிச்சை :— Mepacrine 6x ஒரு ஊசியும் உள்ளுக்கு ஆர்சனிக்கும் கொடுக்கப்பட்டது. மூன்றாவது நாள் மாறுதல் ஒன்றுமில்லாததனாலும், கண்ணெரிச்சல் அதிகம் இருந்ததினாலும் Chirata மூன்று வீரியத்தில் தினம் 4 வேளையாக கரைத்து நான்கு நாட்களுக்குக் கொடுக்கப்பட்டது. தினம் ஒவ்வொரு ஊசி வீதம் 6 நாளைக்கு மெபாக்ரின் தான் போடப்பட்டது. ஜுரம் நின்றுவிட்டது; கட்டியும் பாதி குறைந்துவிட்டது. ஒரு வாரத்தில் நோயாளி பூர்ண குணமடைந்தார்.



# 15. HYGROPHILA SPINOSA.

## நீர்முள்ளி.

இது ஒரு முள் நிரம்பிய சிறு புதராக வளரக் கூடிய செடி. இதனுடைய விதையில் ஒருவித எண்ணெய் இருக்கிறது. இதிலிருந்து ஆல்கஹால் வழியாக எடுக்கப்பட்ட திராவகம் சிவப்பு ஸ்படிகத் தூளாகத் தங்கும்.

அலோபதி உபயோகங்கள் :— இதன் வேர் பாண்டு வீக்கங்களில் நீர் பிரிவதற்காகக் கொடுக்கப் படும். ஈரல் வியாதிகளுக்கும், வாயு உபத்ரவங்களுக்கும், கானெரியா என்ற வெள்ளை, வெட்டை வியாதிகளுக்கும் உபயோகப்படும். இதனுடைய விதைகளை தாது புஷ்டிக்காக கொடுப்பார்கள். வாயு முட்டுகள் வீங்கியிருப்பதற்கும் இவ்விதைகளை அரைத்துப் போடுவதுண்டு.

இதனுடைய வேர்களையும், இலைகளையும் அதிகமாக உபயோகிப்பார்கள். இரண்டு பலம் வேரை இரண்டு சேர் ஜலத்தில் அரை மணி நேரம் கொதிக்க வைத்து கஷாயம் இறக்குவார்கள். இதிலிருந்து தினம் மூன்று வேளை சுமார் இரண்டு அவுன்சு வரைக்கும் வேளைக்குக் கொடுப்பார்கள்.

ஆயுர்வேத உபயோகங்கள் :— சரகர் இதை வெட்டையினால் ஏற்படும் மூத்திர அடைப்பு, மூத்திரப்பையில் கல் இவைகளுக்கு சிறந்ததென்று சொல்லுகிறார். சுஷ்ருதர் இதை சிறந்த தாது புஷ்டி டானிக் என்று சொல்லியிருக்கிறார். வாகபடர் ரத்தத்தை சுத்திசெய்வதற்கு இது நல்ல மருந்தென்றும், தோல் வியாதிகளுக்கு சிறந்த

தென்றும் கூறுகிறார். சக்ரதத்தர் பாண்டு வீக்கத்திற்கு கொடுத்துவந்தார். பங்கசயனர் சுகப்பிரசவத்திற்கு நல்ல மருந்து என்கிறார். ஹாரிதரர் தூக்கமின்மைக்குக் கொடுக்க நல்ல தூக்கம் வரும் என்கிறார் வேரைத் தலையில் வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டால் தூக்கம் வருமென்றார்.

ஹோமியோபதி உபயோகங்கள்:— இதை சரியானபடி, சாஸ்திரீய முறைப்படி ப்ரூவ் செய்யப்படவில்லை இருந்தாலும் இதிலிருந்து டிஞ்சர் தயார்செய்து அனுபோக முறைப்படி கீழ்க்கண்ட குறிகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

இதனுடைய முள் உடம்பில் குத்தினால் அதிக எரிச்சலும் வீக்கமும் காணும். சிறுசிறு கொப்பளங்கள் வேர்க்குருமாதிரியும் அல்லது மணல்வாரி போல் கொட்டும் ஆகவே வேர்க்குருவுக்கு முதல் தரமான மருந்து என்று தெரிகிறது. இந்தமாதிரி வியாதிகளில் Apis-Rhustox முதலியவைகளை ஒத்துப் பார்க்கவும் மலேரியா ஜுரத்திற்கு உடம்பு முழுதும் மணல்வாரிக் கொட்டுவதுபோல் வந்தால் இது வேலை செய்யும். இந்த ஜுரங்களில் அதிகமாக குளிரும் தாகமும் இருக்காது. ஆனால் ஜுரம் ஏறஏற உடம்பில் தடிப்பும் அரிப்பும் அதிகமாகும். இது குளிர்ந்த தண்ணீர்பட்டால் குறைந்து சௌகர்யமாயிருக்கும். வெய்யில் காலத்தில் ஏற்படும் சொறி, சிரங்குகளுக்கு, குளிர்ந்த தண்ணீர் பட்டால் சௌகர்யம்போல் தெரிவதற்கு நல்லது:

கானெரியா என்னும் வெள்ளை-வெட்டை, வெட்டை உபத்திரவங்கள், ஈரல் வீக்கம், வலி முதலியவைகளுக்கு உபயோகப்படும். மூத்திரப்பை கல்லுக்கு சிறந்த மருந்து; தூக்கமின்மைக்கு மிகு சிறந்த மருந்து. அலெர்ஜி என்ற ரத்த சம்பந்த



மான வியாதிக்கு ஒரு சிறந்த மருந்து. இந்த வியாதியில் ஏற்படும் சரும வியாதியில் வெந்நீரினாலும், சூட்டினாலும் அதிகம் ஆகும் உடம்பு முழுதும் வீங்கி மூச்சுவிடுவதற்கு சிரமம் ஆகும்.

**அனுபவ கேஸ் நெ 1. M. Age 11. 1954.**

பிரதி தினமும் மாலை 3 மணிக்கு அடிவயிற்று வலியுடன் உடம்பு முழுவதும் தடிக்கும். முகமெல்லாம் தடித்து வீங்கி, அரிப்பு தாங்கமுடியாமலிருக்கும். மூச்சுவிட ரொம்ப சிரமம். தேங்கித்தேங்கி மூச்சுவிடும்படியாயிருக்கும். இம்மாதிரி இந்தப் பெண்ணுக்கு 3 வருஷங்களாக இருந்துகொண்டிருக்கது. மாதத்தில் ஒரு 7, 8 நாட்கள் இந்தமாதிரி தொந்திரவில்லாமலிருக்கும். பலவித நாட்டுமருந்துகளும், Anti Histamine மருந்துகள் அலோபதிக முறையிலும் 3 வருஷ காலமாக கொடுக்கப்பட்டது. இவைகளில் ஒன்றும் சாதகமேற்படாமல் நம்மிடம் வந்தது.

சிகிச்சை :— Antipoison ஊசி போடப்பட்டது. உள்ளுக்கு ஹைக்ரோ பைனோசா 6x வீரியத்தில் தினம் 3 வேளையாக கொடுக்கப்பட்டது. நல்லெண்ணை தேய்த்துக்கொள்ளக்கூடாதென்று சொல்லப்பட்டது. தொடர்ந்தாற்போல் 2 மாத காலம் சாப்பிடக் கொடுக்கப்பட்டது. இன்று வரையில் பூர்ண சுகம்.

*

## 16. TRICHOSANTHES DIOICA.
## குட்டைப் புடல (கொம்புப் புடல்)

இது பெரும்பாலும் வசந்தகாலத்தில் அதிகமாக விளையும். பந்தல் போட்டு இந்தச் செடியை படரச்

செய்வதுண்டு. இதில் கசக்கும் வகையுண்டு; இதற்கு பேய்ப்புடல் என்று பெயர். இதில் மருந்து சத்து அதிகம் இருக்கிறது. ஆகவே மருந்திற்கு இதைத் தான் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுகிறது. வேரில்தான் அதிக விஷமாதலால் வேரைத்தான் உபயோகப்படுத்தப்படுகிறது.

அலோபதி உபயோகங்கள் :— இதனுடைய இலையை டானிக்காகவும், ஜுரத்திற்காகவும் உபயோகப்படுத்துகிறார்கள். தேள் கடிக்கு காயை உபயோகப்படுத்துகிறார்கள், கடுமையான பேதி மருந்து.

ஆயுர்வேத உபயோகங்கள் :— சரகர் இதை பாண்டு வீக்கத்திற்கும், மஹோதரத்திற்கும், பித்த ஜுரங்களுக்கும், சினோவைட்டிஸ், (முழங்கால் மூட்டுகளில் நீர் தங்கிவரும் வீக்கம்) முதலியவற்றிற்கு மிகவும் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. சக்ரதத்தர் பித்த ஜுரத்திற்கும், வாயு ஜுரத்திற்கும், சில சமயம் ரத்த வாந்திக்கும் உபயோகித்தார். சுஷ்ருதர் பித்த ஜுரத்திற்கும், ரத்த வாந்திக்கும் சிறந்ததென்று எழுதியிருக்கிறார். பவப்ரகாசர்; பித்தக் குறிகள் அதிகமாயிருக்கும் அம்மைக்குச் சிறந்ததென்று எழுதியிருக்கிறார். இன்னும் சில ஆயுர்வேத நிபுணர்கள பெரியம்மைக்கும், நீர்க்குளுவான் அம்மைக்கும் சிறந்ததென்று எழுதியிருக்கிறார்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— டாக்டர் பிரமாத பிரசன்ன பிஸ்வாஸ் அவர்களும், டாக்டர் சின்ஹா அவர்களும், 1932-ம் வருஷத்தில் ஹோமியோபதி ரிகார்ட் பத்திரிகையில் ப்ரூவ் செய்தார். 1893 இதைப்பற்றி பத்திரிகையில் வந்துள்ளது.



இதைப்பற்றி அதிகம் ப்ரூவ் செய்யப்படாவிட்டாலும் குறிப்பிட்ட அளவில் இது மிகவும் சிறந்த மருந்து என்று அனுபவத்தால் தெரிகிறது. மனதில் அதைரியம், தலையில் மயக்கம், கிறுகிறுப்பு, தலை படுக்கையில் புரளுவதுமாதிரி தோற்றம், ஜுரத்தால் கடுமையான தலைவலி. தலையில் சிறிது வியர்வை, கண்களில் மஞ்சள், பாப்பா விரிவடைந்திருக்கும். நாட்பட்ட ஜுரங்களில் கல்லீரலும், மண்ணீரலும் வீங்கி கண்கள் மஞ்சள் கலராயிருக்கும். குழந்தைகளுக்கு தினம் கொடுத்துக்கொண்டுவந்தால் கட்டி வராதென்பர்.

தாக வரட்சை, எச்சல் கொழகொழப்பென்றிருத்தல், ருசி நன்றாகயிருக்காது. வாயிலிருந்து சதா எச்சல் ஊறிக்கொண்டேயிருக்கும்.

வாந்தி எடுக்கும்போது வாயெல்லாம் எரிச்சல்; பித்த உடம்பு.

கம்பிமாதிரி கோழை வாந்திஎடுக்கும். குமட்டல், சதா வாயில் எச்சல்ஊறல், வயிற்றில் காற்றுப்பிசம், மருந்தினுடைய வாசனை குமட்டல். சில சமயம் பித்த வாந்தியில் ரத்தம்கூட கலந்திருக்கலாம். ஏப்பம், அகோர பசி — நிறைய சாப்பிடுவோர்— காலையில் ஏதாவது வலுவான ஜில்லென்ற ஆகாரம் சாப்பிடவேண்டும். உடம்பு முழுவதும் எரிச்சல்; தாக வரட்சி.

ஜில்லென்ற தண்ணீர் குடிக்கவேண்டும். வயிறு காலியாயிருப்பதுபோன்ற உணர்ச்சி. வயிற்றில் காற்றுப்பிசத்துடன் சங்கடம். காலையில் 11 மணிக்கு வயிற்றில் ஒரே எரிச்சல்; வலியிருக்கும். சத்தம் இருக்கும். ஈரல் குலைப்பக்கத்தில் வலி. வீக்கத்தினால் வலி. தும்முவதினால் — இருமுவதினால் வலி

பசுமையும் மஞ்சளும் கலந்த இளகிய மலம். பித்தமும் ரத்தமும் கலந்த மலம். ரத்த சீதபேதி; அடிக்கடி மலம் பிரிவதினால் அதிக பலஹீனம். மலத்துடன் வலி, முக்கல், ஆசனவாய்க் கடுப்பு.

சிறுநீர் சிவந்தும், அளவு குறைச்சலாயுமிருக்கும். வாந்தி பேதியுடன் சிறுநீர் பிரியாது மஞ்சள் காமாலையினாலும், ஈரல் கட்டியினாலும், கை கால்கள் வீங்கும் ஜுரம் 11 or 12 மணிக்கு வரும். ஜுரத்தின்போது உடம்பு முழுவதும் வலியுடன் எரிச்சல். தலைவலி; தாகமும் ஏற்படும். ஜுரம் விட்டபிறகும் சிறிது தலைவலியிருக்கும். "காலாஹசார்" ஜுரத்திற்கும், நாட்பட்ட மலேரியா ஜுரத்தாலும் கை, கால்கள் வீங்கி மஞ்சள்காமாலையுடனிருந்தால் இது ஒரு நல்ல மருந்து.

வாயிலிருந்து ஓயாது எச்சல் ஊறலுக்கும் ஜுரத்திற்கும் இது சிறந்தது. இந்த மருந்துடன் Ipecac என்ற மருந்தையும் ஒத்துப்பார்க்கலாம்

ஒரு நாளைக்கு ஜுரம் குறைவாகவும் ஒரு நாளைக்கு அதிகமாகவும இருக்கும். ஜுரம் அதிகம் ஆகஆக தலைவலியும் அதிகம் ஆகும். ஜுரம் குறைய குறைய தலைவலியும் குறையும். ஏராளமான தாகமும், தண்ணீர் குடித்தவுடன் வாந்தியும், வாயிலிருந்து உமிழ்நீர் அதிகமாக ஊறலும், மலம் மஞ்சளாக சத்தத்துடன் போவதும் இதன் முக்கியமான குறிகளாகும். ஜுரத்திற்கு பிறகு பசி.

கை கால்களில் வலியுடன் கொட்டாவி அடிக்கடி வரும். ரொம்ப பலஹீனம், அமைதியின்மை; உடம்பு முழுவதும் எரிச்சல்; தூக்கம். படுக்கையை விட்டு எழுந்தவுடன் உமிழ்நீர் வழியும் நடக்கும் பொழுது முதுகு பக்கத்தில் அசதி, வலி. பேதி,



வாந்தி ஏற்பட்டதும் நாடி காணாமலேயிருக்கும் அல்லது நூல்மாதிரி மெல்லியதாயும், மாலைகளில் அதிகரித்தும் காணும்.

இதனுடைய வேர்ப் பட்டையை அதிகமாக சாப்பிட்டால் மரணம் ஏற்படுவது நிச்சயம். மலம் ஆரம்பத்தில் இளகலாகப்போய், பின் சீதமும்— ரத்தமும் கலந்து மறுபடியும் ரத்தமாக மாறி வாந்தியும் ரத்தமாகப்போகும். மிகவும் பலஹீனமாயிருக்கும். ஆகையினால் இது காலரா, ரத்த சீதபேதி, அதிசார பேதி முதலியவைகளுக்கு சிறந்ததென்று தெரிகிறது. இம்மாதிரி வியாதிகளில் "போடோபிலின்" என்ற மருந்தை ஒத்திட்டு பார்க்கவும். "போடாபிலின்" சில சமயங்களில் உபயோகப்படாவிட்டாலும் இம்மருந்தை உபயோகப்படுத்தவும். மலம் ஏராளமாக பிரிவதுடன் ரொம்பவும் அசதி மலங் கழித்தபின் ஏற்படுவது இதன் முக்கியமான குறி. மலம் போனபிறகும் அதிக நேரம் வரையில் கடுப்பும் முக்கலும் இருக்கும். ஆசனவாய் வெளித்தள்ளுவதுடன் எரிச்சலும இருக்கும். ரத்தத்துடன் கலந்த மலம் தானாகவே சில சமயங்களில் வெளிப்படும். மலம் பிரிந்தபிறகு கடுப்புடன் வலியிருப்பது இதன் முக்கியமான குறி.

ஆகவே காலராவில் ஏராளமான மலம், வாந்தி, தாகம், அமைதியின்மை, எரிச்சல், வியர்வை, கை கால்கள் ஜில்லிப்பு, நாடி பலஹீனம், நாடி காணாதிருத்தல் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

வாந்தி, குமட்டல், வயிற்றில் எரிச்சலிருக்கும், உமிழ்நீர் ஊறுதல், வாந்தியில் கோழை கம்பிமாதிரி வெளிப்படும். ரத்தம்கூட கலந்திருக்கலாம்; பித்தமான வாந்தி; தண்ணீர் குடித்தவுடன் வாந்தி.

பொதுவாக தலைவலி, வாயில் உமிழ்நீர் ஊறுதல், வாந்தி முதலியவைகளுக்கு நல்ல மருந்து.

**அனுபவ கேஸ் 1.**

பெண் வயது 5. DYSENTERY. 1954

3 நாட்களாக ரத்த சீதபேதி. 15 நிமிஷத்திற்கொருமுறை ஓயாமல் பொறுக்கமுடியாத கடுப்புடன், ரத்தமாக சீதபேதி. சிறுநீரிலும் ரத்தம் கலந்திருந்தது. மலம் போனவுடன் மிகவும் பலஹீனம். ஏராளமான தாகம். குமட்டலுடன் வாந்தி இதற்கு வழக்கம்போல Biostyptic Injection, Merc Corr, Colocynth முதலியவை கொடுத்தும் பிரயோசனப்படாமல் போகவே ட்ரைகோசாந்தில் 3x வீரியத்தில் மணிக்கொருதடவையாக கொடுக்கப்பட்டது. காலையிலிருந்து மாலைக்குள் ரத்தமாக வெளிக்குப் போவதும், ரத்தமாக சிறுநீர் கழிவதும் நின்று சீதமாக மலங் கழிந்தது. வரவர குறைந்த டோஸில் கொடுக்கப்பட்டது. 3 நாட்களுக்கு தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டது. பூர்ண சுகம்.

**அனுபவ கேஸ் 2.** 1952

வயது 45. காலரா. பெண்.

காலரா கண்டது—ஏராளமான மலம். ஓயாத வாந்தி தாக வரட்சி. தண்ணீர் சாப்பிட சாப்பிட வாந்தியும் பேதியும் அதிகமாக ஆகிக்கொண்டேயிருந்தது. முதல்நாள் முழுவதும் வழக்கம்போல் ஆர்சனிக்கும். விராட்ரம் ஆல்பமும் கொடுக்கப்பட்டது. ஒருநாள் முழுவதும் கொடுக்கப்பட்டும் குணம் தெரியவில்லை. மறுநாளைக்கு எல்லா குறிகளும் அதிகமாகிவிட்டது. உடல் முழுவதும் வியர்வை கொட்ட ஆரம்பித்துவிட்டது. க்ளுகோஸ்



இன்ஜெக்ஷன்கள், ரிவைவோ, டபாகம் முதலியவைகள் பிரயோசனமில்லாமல் கொடுக்கப்பட்டன. வயிற்றில் கடகட சத்தமும், அடிக்கடி ஏராளமான பேதியாவதும், அளவுக்கு மேற்பட்ட பலஹீனமும் ட்ரைகா சாந்திஸ் கவனத்திற்கு வந்தது. உடனே ட்ரைகா சாந்திஸ் டிஞ்சர் 3x சுமார் 10 சொட்டுவீதம் வேளைக்கு 10 நிமிஷங்களுக்கொருமுறை 10 டோஸ்கள் கொடுக்கப்பட்டது. மறுநாளிலிருந்து ஒன்றும் கொடுக்கப்படவில்லை. நோயாளி பூர்ண சுகம்.

**அனுபவ கேஸ் 3.** 1954

பெண். ரத்த சீதபேதி. வயது 2½

அடிக்கடி 15 நிமிஷங்களுக்கொருமுறை ரத்தமும், சீதமும் கலந்து போய்க்கொண்டேயிருந்தது. உட்கார்ந்த இடம் விட்டு எழுந்திருப்பதுகூட முடியாமல் கடுப்பு மிகுதியால் சிரமப்பட்டுக்கொண்டிருந்தது. ஆசனவாய்க் கடுப்புடன் ரத்தம் மாத்திரம் சொட்டு சொட்டாக போய்க்கொண்டிருந்தது. ஆசனவாய் வெளித் தள்ளிக்கொண்டிருந்தது. வழக்கம்போல் Merc-Corrosiவும் Ipecacவும் கொடுக்கப்பட்டது-பிரயோசனப்படவில்லை. பின்பு ட்ரைகோசாந்திஸ் 3x வீர்யத்தில் சிறிது ஜலத்துடன் 5 சொட்டு விட்டு ஒரு நாளைக்கு 3 வேளை வீதம் கொடுக்கப்பட்டது. ஆசனவாய் அடிக்கடி வெளியில் வருவதும், உள்ளுக்கு போவதுமாகயிருந்து, இரண்டு சொட்டு ரத்தம் வெளிவருவதும், பின்பு குழந்தை க்ரீச்சென்று கத்துவதுமாக இருந்ததும் நின்றுவிட்டது.

*

# 17. OLDENLANDIA HERBACEA-பற்படம்.

இது இந்தியா முழுவதும் மழை காலத்தில் செடிகள் வளர்ந்து வெய்யில் காலத்தில் உலர்ந்து போகிறது.

அலோபதிக் உபயோகங்கள் :— இதிலிருந்து ஆல்கலியோடு சம்பந்தப்பட்ட கலர் உண்டாக்கக் கூடிய ஒரு சத்து கிடைக்கிறது. ஆல்கஹால் தண்ணீர் சம்பந்தப்பட்ட சத்து (Extract) பரிசோதிக்கப்பட்டதில், Sodium, Potasum, Calcium முதலிய சத்துக்கள் அடங்கியதாக தெரிகிறது. இந்த சத்துக்கள் அடங்கியதால் இதை ஒரு குளிர்ச்சி தரும் மருந்து என்று கருதுகிறார்கள். ஈரல் வியாதிகளில் இதன் டிகாக்ஷனை உபயோகிக்கிறார்கள். நாட்பட்ட மலேரியாவிலும் டிகாக்ஷனைக் கொடுக்கிறார்கள். வயிற்று உப்பிசம், நரம்பு தளர்ச்சி, நார்மலுக்குக் குறைந்து மறுபடியும் அதிகமாகும் ரெமிடண்ட் ஜுரத்திலும் உபயோகிக்கிறார்கள்

ஆயுர்வேத உபயோகங்கள் :— பண்டைய காலத்து ஆயுர்வேத வைத்தியர்கள் பொதுவாக பித்த ஜுரங்களிலும், பலவிதமான மற்ற ஜுரங்களுக்கும் கொடுத்துவந்தார்கள். சரகர் இதை ரத்தப் பெருக்கு, அதிசார பேதி, குடியர்களின் ஜன்னியிலும் கொடுத்ததாக கூறப்படுகிறது. சக்ரதத்தர் பித்த ஜுரத்திற்கும், சாதாரண ஜுரங்கள், ஜுரங்களில் வாந்திக்கும் கொடுக்கலாமென்கிறார். சுஷ்ருதர் அதிசாரம், ரத்த சீதபேதி இவைளுக்குக் கொடுத்ததாக கூறப்படுகிறது.

பொதுவாக ஆயுர்வேத வைத்தியர்கள் பித்த சம்மந்தமான கோளாறுகள், ரத்த சுத்தி, ஞாபக மறதி, தாக வரட்சி, இருமல், ஜுரங்கள் முதலியவை



களுக்குக் கொடுத்துவந்தார்களென்று கூறப்படுகிறது இம் மருந்து கசப்பாகவும், துவர்ப்பாகவும் இருக்குமென்றும், தின்றால் எரிச்சலையும் உண்டு பண்ணுமென்று கூறுகிறார்கள்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— டாக்டர் பிரமாத பிரசன்ன பிஸ்வாஸ் அவர்கள் இதைப் ப்ருவ் செய்ததுடன் கீழ்க்கண்ட குறிகளை அறிந்தார்.

அதிகமான ஜுரம், குளிர், தாக வரட்சி, தலை வலி, கண்களிலும் உள்ளங் காலிலும் எரிச்சல், பித்தமான வாந்தி, பித்தங் கலந்த இளகிய மலம், காய்ச்சலில் அதிக வேகம் ஒருநாளும், அடுத்தநாள் ஜுரம் குறைவாகவும் இருக்கும் காய்ச்சல் காலையிலும் அல்லது விடியற்காலையிலும் வரும். பொதுவாக பித்த சம்பந்தமான ஜுரங்களில் அதாவது விட்டு விட்டு வரும் இன்டர்மிடண்ட் ஜுரங்களுக்கும், ரெமிடண்ட் ஜுரங்களுக்கும் மிகவும் சிறந்த மருந்து என்று நிரூபித்திருக்கிறார்.

பொதுவாக ஹோமியோபதியில், பித்தக் கோளாறுகளில் வாந்தி, பேதி, ஜுரம் முதலியவைகளுக்கும், உடம்பு பூராவும் எரிச்சல், மஞ்சள்காமாலை முதலியவைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. நீரை அதிகமாகப் பிரிக்கும்.

*

# 18. TERMINALIA ARJUNA.
## வெண் மருதை மரம்.

இது இந்தியா முழுவதும் இருக்கிறது. சகஜமாக உயரமாக வளரும் மரம். 60 அடி 80 அடி வளரும் உயரிய மரம்.

அலோபதிக் உபயோகங்கள்:— இதனுடைய பட்டை 16 சத விகிதம் டானினும், 25% கால்ஷியமும் சிறிது மாக்னீஷியமும் இன்னும் சில உப்பும் கலந்தது.

உபயோகங்கள்:— ஹ்ருதய வியாதிகளுக்கும், ரத்தப்பெருக்கை தடுப்பதற்காகவும் கொடுப்பார்கள். புண்களுக்கு அலம்புவதற்காகவும், அடிபட்ட புண்களுக்கு கட்டுவதற்காகவும், உடைந்த எலும்பை சரிப்படுத்துவதற்காகவும் உபயோகப் படுத்துகிறார்கள் என்று கர்னல் சோப்ரா I. M. S. சொல்லுகிறார்.

ஹ்ருதயத்தில் வேலை செய்யக்கூடிய டானிக் என்று ஆயுர்வேத வைத்தியத்தில் உபயோகப் படுத்துகிறார்கள். பழைய காலத்து ஆயுர்வேத வைத்தியர்கள் கொடுத்துவந்த பிரகாரம் ஹ்ருதயத்தில் வேலை செய்யக்கூடிய எந்தவிதமான சத்தும் இதில் இல்லை. பெட்ரோலியம், ஈதர், ஆல்கஹால், தண்ணீர் இவைகளினால் இறக்கப்பட்ட சத்து மிகவும் ஜாக்கிரதையாக பரிசோதிக்கப்பட்டு இதில் சுண்ணாம்பைத் தவிற வேறு சத்து ஒன்றுமில்லை என்று தெரிகிறது. இதிலுள்ள வர்ணத்தைப் பரிசோதித்ததிலும், அதிலும் ஒன்றும் சத்து இல்லை என்று சொல்லப்படுகிறது. K. S. மாஸ்கர் ஜாக் அவர்கள் 1930ம் வருஷத்தில் டெர்மினேலியா வகை மரங்களை விரிவாக பரிசோதித்து பார்த்தார்கள். ஒரு ஜாதியிலாவது விசேஷமான மருந்து சத்து ஒன்றுமில்லை என்கிறார். கோமன் 1920-ம் வருஷத்தில் 20 ஹ்ருதய கபாட வியாதியஸ்தர்களுக்கு கொடுத்துப் பார்த்ததில் ஒரு பிரயோசனப்படவில்லை. கல்கத்தாவில் ட்ராபிகல் பிரோஷண நிலையத்தில் ஆல்கஹாலினால் எடுக்கப்பட்ட திராவகத்தை கை, கால் வீங்கினவர்கள், வீங்காதவர்கள்



முதலியவர்களுக்கு ஹ்ருதய வியாதியில் கொடுத்துப் பார்த்தார். டிஜிடாலிஸ், கேபின் முதலிய மருந்துகள் செய்யும் வேலைமாதிரி துளிகூட செய்யவில்லை.

ஹ்ருதயத்தின் அமுக்கு சக்தியோ, துடிப்பிலோ யாதொருவிதமான மாறுதலும் தெரிவில்லை. சிறுநீர் பிரிவதிலும் விசேஷமான மாறுதலும் தெரியவில்லை. ஆகவே இது சௌகர்யப்படுத்தக்கூடிய வியாதிகள் கேல்ஷியம் வேண்டிய நோயாளிகளுக்குத்தான் என தெரிகிறது. K. S., மாஸ்கர், ஜாக் மூவரும் இந்தியாவில் 15 விதமான டெர்மினேலியா மரங்கள் இருக்கிறதென்று கண்டுபிடித்தனர். இம் மரங்களின் பட்டைகள் ஓரேமாதிரியாக இருப்பதால் இவைகளில் வித்யாசம் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். ஆகவே இந்தியா மார்கட்டில் எல்லாவித மரங்களும் சேர்த்து அர்ஜுனா என்று விற்கப்படுகிறது. இப் பட்டைகளை தனித்தனியே கஷாயமாகவும், ஆல்கஹாலினால் இறக்கப்பட்ட மருந்தாகவும் பல பேர்களுக்குக் கொடுத்துப் பார்த்தார்கள். பல ஜாதி மரங்களும் பற்பல விதமான குணங்களை உடைத்தாயிருந்தன. இவர்களின் அனுபவங்கள் டிராபிகல் ஸ்கூல் அனுபவங்களுக்கு மாறுபட்டதாயிருக்கிறது.

கீழ்க் கண்டவாறு டெல்லி விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தார்கள் அபிப்ராயப்படுகிறார். ஹ்ருதயத்தில் சாதகம் செய்வதற்கு விரோதமாக கெடுதல்தான் செய்கிறது. குறைந்த அளவில் கொடுத்தாலும்கூட ஹ்ருதய அமுக்கு சக்தியைக் குறைத்துவிடுகிறது. அதிகமாக கொடுத்தால் ஹ்ருதயத்தை நிறுத்தி மரணம் சம்பவிக்கிறது. ஹ்ருதயத்தை தனியாக எடுத்து அதில் மருந்தை செலுத்தி பரிசோதித்தால் ஹ்ருதயம் வரவர

பலஹீனமாகி கடைசியில் ஹ்ருதயத்தையே நிறுத்தி விடுகிறது.

ஆயுர்வேத உபயோகம்:— சரகர் பட்டையின் கஷாயத்தை ரத்த வாந்திக்குக் கொடுக்கலாம் என்கிறார். சுஷ்ருதர் வெள்ளை சந்தனப் பட்டையோடு, இம் மரத்தையும் சேர்த்துக் கொடுத்தால் தாது நஷ்டத்தை நீக்கும் என்கிறார். வாக்படர் நீரைப் பிரிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார். முகப் பருவுக்கு பட்டையுடன் தேனுடன் சேர்த்து மேலுக்கு பூசிவந்தார். சக்ரதத்தர் ஹ்ருதய வியாதிகளுக்கும், ரத்த சீதபேதிக்கும், எலும்பு முறிவுக்கும் கொடுத்துவந்தார். பவப்பிரகாசர் நுரையீரல் க்ஷயத்திற்கும் சிறுநீர் அடைப்பிற்கும் நல்ல மருந்து என்கிறார்.

ஹரிதரர் வெட்டை, கானெரியாவுக்கு தேவலை என்கிறார் பங்கசயனர் எலும்பு முறிவுக்குக் கொடுத்தார்.

ஹோமியோபதி உபயோகங்கள்:— இதைப் ப்ரூவ் செய்த ஒருவருக்கு கீழ்க்கண்ட குறிகள் கிடைத்தது. தலை மயக்கம் காதுகளில் ஙொய் என்ற சப்தம், தொண்டை வரட்சி, தாகம், கசப்பு, சிறுநீர் அளவு குறைந்தும் தென்பட்டது ஹ்ருதயத்தில் படபடப்பும், துரிதமும், திடீரென்ற வலியும் ஏற்பட்டது.

இது அதிகமாகவும் சரியானபடி ப்ரூவ் செய்யப் படாததில் இதனுடைய குணங்கள் சரிவர தெரியவில்லை. இது நுரையீரல், எலும்பு க்ஷயரோகத்திற்கும் சிறந்துவிளங்கும் என்பது நமது அபிப்ராயம். இதை மிகவும் மீண்டும் பரிசோதித்து உபயோகிக்க வேண்டியது அவசியம்.



# 19. WRIGHTIA TINCTORIA & HOLARRHENA ANTIDYSENTRICA (KURCHI) வெப்பாலை அரிசி.

இதில் இரண்டுவிதமான செடிகள் உண்டு. ஒன்று கருப்பு, மற்றொன்று வெள்ளை. இது இந்தியா முழுவதும் அகப்பட்டாலும் பெரும்பாலும் வளர்ப்பதுதான் வழக்கம். ஒலர்ஹீனு என்பது வெள்ளை ஜாதி. ரைடியா என்பது கருப்பு ஜாதி. ஒலர்ஹீனு ஆண் ஜாதி. ரைடியா பெண் ஜாதி. வெள்ளைதான் அதிகமாக மருந்திற்காக உபயோகப்படுத்துவது. வெள்ளைஜாதிக்கு பட்டை வெண்மை கலந்த மஞ்சள் நிறமாகவும் பூக்கள் வெள்ளை நிறமாகவும் கொட்டை கசப்பாகவும் இருக்கும். கருப்பு ஜாதிக்கு பட்டை கருப்பு நிறமாகவும் பூக்கள் வெள்ளையாய் வாசனையுடையதாயும் கொட்டைகள் தித்திப்பாகவும் இருக்கும். பரீக்ஷை செய்து பார்த்ததில் (அலோபதி வைத்தியக் கல்லூரியில்) ஒலர்ஹீனு ஜாதிதான் வைத்தியத்திற்கு உகந்ததென்று கண்டுபிடித்தார்கள்.

அலோபதி உபயோகங்கள் :— இதனுடைய பட்டையில் அனேகவிதமான ஆல்கலாய்ட் மருந்து சத்து இருக்கிறது. இம்மருந்து சத்து சுமார் $4\frac{1}{2}\%$ இருக்கிறது. சமீபகாலமாக இச்செடியிலிருந்து எடுக்கும் "கொனஸ்ஸின்" என்ற மருந்தை உபயோகப்படுத்திவந்தார்கள். அது அதிகமாக உபயோகப்படவில்லை என்று மொத்த ஆல்கலாய்ட்டையும் சேர்த்து பிஸ்மத் ஐயோடைட்டையும் சேர்த்து உபயோகப்படுத்துகிறார்கள்.

இவைகள் ஜுரம், நாட்பட்ட பேதி, ரத்த சீத பேதி, குடலிலிருந்து ரத்தப் பெருக்குகள், குடற்

பூச்சிகள், சில நாட்பட்ட நுரையீரல் வியாதிகள், மூத்திரக்காயில் கல்லினால் ஏற்படும் வலிக்கும், காலராவில் வாந்தியைத் தடுக்கவும் உபயோகிக்கப் படும். பிரசவத்திற்கு பிறகு கர்ப்பப்பை முதலிய பாகங்களுக்கு டானிக்மாதிரி உபயோகப்படுத்தப் படும்.

லெப்டினனண்ட் கர்னல் சோப்ரா அவர்களின் அபிப்ராயம்:- தேவேந்திரன் தன்னுடைய அமிர்தத்தினால் இறந்துபோன சிரங்களை எழுப்பியபொழுது சிதறிக்கிடந்த அமிர்தமே இந்த செடிகள் என்று கூறப்படுகிறது. இதை ரைடியா டிக்ன்டோரியா என்ற கருப்பு ஜாதியோடு குழப்புகிறார்கள். கருப்பு ஜாதிக்கு மருந்து மதிப்பு கிடையாது.

பெரும்பாலும் ரத்த சீத பேதிக்குதான் இது உபயோகப்படுத்தப்படுகின்றது என்பது அவர் அபிப்ராயம். இவைகளை இண்ட்ராமஸ்குலர் இன்ஜெக்ஷனாக உபயோகப்படுத்துகிறார்கள். இன்ஜெகஷன் கொடுத்தால் வலி அதிகமாயிருக்கும். ஆனால் எமடின் மாதிரி நாட்பட கொடுத்தால் கெடுதல் செய்யாது.

ஆயுர்வேத உபயோகங்கள்:— நாட்பட்ட சீத பேதிகளுக்கு ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகப் படுத்துகிறார்கள். சரகர் இதை குஷ்டரோகத்திற்கும், ரத்த சீத பேதிக்கும், க்ஷயரோகத்துடன் ஏற்படும் ரத்த சீத பேதிக்கும், ரத்த வாந்தி இவைகளுக்கு உபயோகப்படுத்திவந்தார். சுஷ்ருதர். மூலம், ரத்த சீத பேதிக்கும் உபயோகப்படுமென்று கூறியிருக்கிறார். பவப்ரகாசர் இதை மதுமேகத்திற்கு சிறந்த மருந்து என்று கூறியிருக்கிறார்.



ஹோமியோபதி உபயோகங்கள்:— 1873-ம் வருஷம் டாக்டர் மஹேந்திரலால் சர்கார் அவர்கள் இதை ப்ரூவ் செய்திருக்கிறார். கீழ்கண்ட முக்கியமான குறிகளை கண்டுபிடித்தார். ஞாபக மறதி, எந்தவிதமான வேலை செய்வதற்கும் பிடிக்காமை, அடிக்கடி நாக்கை சுரண்டக்கூடிய உணர்ச்சி (ஏதோ மாசு படர்ந்திருப்பதுபோன்ற நினைப்பால்) தொப்புள் பக்கம் கையிட்டு அழுத்தினால் புண்ணுயிருப்பது போன்ற வலி, இளகின மலம் சீதம் கலந்துமிருக்கும். சிறுநீர் குறைந்தும் நிறம் அதிகமாயும், வலியில்லாமலும் பிரியும். பசி சரியாகயிருக்காது. கொஞ்சம் சாப்பிட்டாலும் வயிறு நிரம்பியதுபோன்ற உணர்ச்சி, உடம்பு முழுவதும் அரிப்பு, தடைகளில் அதிகமாயிருக்கும். ஜுரம்; ஜுரத்தின்போது கை கால்களில் அசதி.

ஹோமியோபதி முறைப்படி சீதப்போக்கு அதிகமாயிருந்தாலும், ரத்தம் அதிகமாயிருந்தாலும், மலம் போகும்பொழுது அடிவயிற்றில் வலி அதிகமாயிருந்தாலும். நாட்பட்ட கேஸ்களில் சீதமும ரத்தமும் குறைந்திருந்தாலும் வயிற்றுக் கடுப்பு அதிகமாயிருந்தாலும் கொடுக்கப்படுகிறது. நாட்பட்ட ரத்த சீத பேதிகளில் பலஹீனம், உடம்பு இளைப்பு, பசியின்மை, ஆகாரத்தைக் கண்டால் வெறுப்பு முதலியவைகள் இருக்கும். தொப்புளைச் சுற்றிலும் தான் வலியதிகமாக இருக்கும். வலது பக்கம் படுத்துக்கொண்டால் வலியதிகரிக்கும். இடது பக்கம் படுத்துக்கொண்டால் வலி குறையும். ஆகவே Merc-Corr, Merc-Sol, Acalypha-Indica இவைகளுடன் இதை ஒத்திட்டுப் பார்க்கவும்.

## 20. SARACA INDICA or JONOSIA ASOKA.

## அசோக மரம்.

இந்த மரம் தெற்கு, வடக்கு இந்தியா, அரகான் பிரதேசங்களிலும் அதிகமாக விளையும். ஒரு சிறிய பரவலாக இருக்கக்கூடிய மரம். இந்த மரத்தை இந்தியாவில்வசிப்பவர்கள் ஓர் புனிதமாகக்கருதுகிறார்கள். இதனுடைய அழகான பூக்களுக்காக இதை வளர்க்கப்படுகிறது இதன் பூக்கள் செக்கச்செவேரென்று மிகவும் அழகாக இருக்கும். இதில் டேனின் என்ற சத்துதான் அதிகமாக காணப்படுகிறது. சிறிது அயம் கலந்த சத்தும் கிடைத்தது.

அலோபதி உபயோகப் பிரகாரம் இந்த மருந்திலிருந்து எடுக்கப்பட்ட சத்தானது கர்ப்பப்பையில் கொடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. கர்ப்பப்பையில் வேலைசெய்யக்கூடிய எந்தவிதமான சத்தும் இதில் இல்லை என்று புலனாயிற்று. ஆனால் வேறு சில மருந்துகளுடன் இது உதிரப் பெருக்கிற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. கர்ப்பப்பையில் சுருங்கும் தன்மையை அதிகப்படுத்துகிறது. ஆனால் எர்கட் மாதிரியோ பிட்யூட்ரி மாதிரியோ வலுவாக சுருக்கும் தன்மையை உண்டாக்காது. இது எல்லாவிதமான கர்ப்பப்பை ரத்தப் பெருக்கு, பிரசவத்திற்கு பிறகு ரத்தப்பெருக்கு முதலியவைகளுக்கு உபயோகப்படும்.

ஆயுர்வேத உபயோகங்கள் :— சக்ரதத்தர் இதை ரத்தம் கலந்த வெள்ளை ஒழுக்குக்கும், சிறுநீர் பிரியாமலிருப்பதற்கும் இதைக் கொடுத்துவந்தார். சரகர், சுஷ்ருதர் இவர்களெல்லாம் வெட்டைக்கு இது உபயோகப்படுகிறது என்று சொல்லவில்லை.



சரகர் இது வலியைக் குறைக்கக்கூடிய மருந்து என்று சொல்லியிருக்கிறார்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— டாக்டர் D. N. ரே, கல்கத்தா அவர்கள் இதை ப்ருவ் செய்திருக்கிறார். அவருடைய சொந்த அனுபவங்களிலிருந்தும் இன்னும் சில ஹோமியோபதி டாக்டர்களின் அனுபவத்திலிருந்தும் இது ஒரு முக்கியமான மருந்து என்றும் தெரியவருகிறது ப்ருவிங்கில் கீழ்கண்ட குறிகள் முக்கியமாக தென்பட்டன. மறதி, மனதில் கோழைத்தனம், உணர்ச்சி வசப்பட்டவர், திடீரென்று அழுகை வந்துவிடல், மிகவும பலஹீனம், சிறிது வேலை செய்யவும் சோம்பல், மிகவும் வாத்சல்யமுடையவர், எண்ணங்கள் அடிக்கடி மாறும்; அற்ப வஸ்துக்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும் எந்த விஷயத்தையும் புரிந்துகொள்ள முடியாமை; ஜலதோஷம் உடனே பிடித்தல்; திறந்த வெளியில் சௌகர்யமாகயிருக்கும். பிசாசு பிடித்தல் (ஹிஸ்டிரியா) வியாதியுடையவர்கள்—குறிகளெல்லாம் மிகைப்படுத்தி சொல்லக்கூடியது.

நெற்றிப்பொட்டில் தலைவலி சில சமயம் வலது பக்கம் அதிகமாகவும், சில சமயம் இடது பக்கம் அதிகமாகவும் இருக்கும். கர்ப்பப்பை வியாதிகளினால் ஏற்படும் தலைவலி. தாராளமாக மாதவிடாய் சென்றால் தலைவலி நிற்கும். தலையில் கிறுகிறுப்பு; ஆகாரம் வேண்டாதிருத்தல்; குளித்தால் சௌகரியமாகும் தலைவலி; நெற்றியில வியர்வை—எல்லாம் திறந்த காற்றில் சௌகர்யமாயிருக்கும்.

கண்களில் வலி, அரிப்பு, எரிச்சல், சிவப்பு, மேல் இமைகளில் கிரிக்கட்டிகள் கண்களிலிருந்து ஏராளமாக நீர் வடிதல், கிட்டிய திருஷ்டி, வெளிச்

சத்தைப் பார்க்கமுடியாமை, சிறிது படித்தால் அல்லது உற்றுப்பார்த்தால் கண்களில் வலி. கடுமையான ஜலதோஷத்திற்குப் பிறகு காதுகளில் வலி. நாசியிலிருந்து ஏராளமான தண்ணீர் கொட்டும். தும்மலுக்குப் பிறகு சளி. நாசியெல்லாம் புண்ணாகி, நாசியிலிருந்து ரத்தமும் கொட்டும். முகம் வெளுத்து இருக்கும். முகத்தில் பருக்கள் அதிகம். ஏராளமான தாகம், நாக்கு, வாய் வரட்சி, மாசு படர்ந்த நாக்கு, பல் வலி, ஈரலிலிருந்து ரத்தம் கசிதல், தொண்டை சிவந்து வரட்சியான இருமல். ஜலதோஷத்தினால் தொண்டை பாதிக்கப்படும். தித்திப்பு சாப்பிட பிரியம். பால் சாப்பிட பிடிக்காது. ஆனால் சாப்பிட்டால் ஒத்துக்கொள்ளும். புளிப்பான வஸ்துக்கள் சாப்பிட பிடிக்கும். நிறைய தண்ணீர் குடிப்பர்.

ஓயாமல் குமட்டல்: அடி வயிற்றில் வலி. பித்தமான வாந்தி. வயிற்றுப்பிசம். துர்நாற்றமடிக்கும் வாயு பிரியும் காற்றுப்பிசத்துடன் கூடிய வயிற்று வலி. கடுமையான மலச் சிக்கல். மலம் தீய்ந்தும், கருப்பாகவும், பெரியதாய் உருண்டையாயிருக்கும். மூன்று, நான்கு நாட்களுக்கொரு முறைதான் போகும். மலம் பிரிவதற்கு முன் வலி—மலத்தில் சீதம் இருக்கும். இடுப்பு வலி; ஆசனவாய்க் கடுப்பு; ரத்தம் போகும் மூலம். மூலம் வெளித் தள்ளிக் கொண்டு, அரிப்பு, கடுப்பு, வலியுடனிருக்கும் சிறுநீர் அடிக்கடி போகும்—இரவில் தானாகவே தெரியாமல் சிறுநீர் பிரிந்துவிடும். ஏராளமாக பிரியும் சிறுநீர்; விதைகள் வீங்கியிருக்கும். நரம்புகளில் இழுத்தாற்போல் வலி. இரவில் இந்திரிய ஸ்கலிதம்.

மாதவிடாய் தங்குதல், தங்குவதினால் ஏற்படும் தலை வலி. அடிவயிறு முழுவதும் தாங்கமுடியாத வலி. இடுப்பு துடைகளில் வலி—நாள் பிந்திப்பட்டு



ஏற்படும் மாதவிடாய், மாதவிடாய் குறைவாகவும், வெளுத்தும் தண்ணீர்மாதிரியும் சில சமயம் கருப்பாகவும், துர்நாற்றத்துடன், கட்டிகட்டியும் வலியுடனிருக்கும். கற்பவதியாகும்போது (முதல் மாதவிடாயின்போது) மாதவிடாய் நாட்களுக்குப் பிறகு; பசியின்மை, கிறுகிறுப்பு, சினைப்பையில் வலியுடனிருக்கும். இடுப்புப்புறம் வலி, அடிக்கடி சிறுநீர் பிரிய இச்சை மாதவிடாய் ஏற்பட்டவுடன் எல்லாம் சமனம். சிறு பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை. மூச்சு விடுவதற்கு சமம்—நடந்தால் மூச்சுவிடுவதற்கு சிரமம்—மூச்சு வேகமாக வரும்;

ஹ்ருதய பக்கத்தில் வலி நாடி துரிதமாகவும் அழுத்தமாகவும், முதல் துடிப்பு அமுக்கமாகவும், நடந்தாலும், முன்பக்கம் குனிந்தாலும், படபடப்பு அதிகமாகவும் இருக்கும். கழுத்தின் பின்புறம முள்ளந்தண்டு வழியாக வலியும், இடுப்புப் பக்கம் இரண்டு துடைப் பக்கங்களிலும் பரவியும் வலிக்கும் கை கால்களில் அசதி, முட்டுக்கு முட்டு நகரும் வலிகள், சிறிய முட்டுகளில் வலிகள். தூக்கமின்மை, ஸ்வப்பனம், பிரயாணம் செய்வதுபோன்ற ஸ்வப்பனம் முதலியவை

முக்கியமான உபயோகங்கள்:— நாட்பட்ட மலச் சிக்கல், தலைவலி. கிறுகிறுப்பு. இடுப்பு வலி. இவைகளுடன் கூடிய மாதவிடாய்க் கோளாறுகளுக்குச் சிறந்தது ரத்த சம்பந்தப்பட்ட வெட்டைக்கு இது ஒரு நிகரற்ற மருந்து. வலியுடன் கூடிய மாதவிடாய்க்கு முக்கியமான மருந்து.

மாதவிடாய் நிற்கும் காலங்களில் ஏற்படும் கோளாறுகளுக்கும், மலட்டுத் தன்மைக்கும் நல்லது.

ரத்த மூலத்திற்கு சிறந்த மருந்து இடுப்புப் பக்கம் பிடிப்பு வலி. மலச்சிக்கல், சிறுநீர் பிரியும் பொழுது எரிச்சல், கை கால்களில் எரிச்சல்.

அனுபவ கேஸ் 1.    G பெண்    வயது 30

1945.

முதல் குழந்தை பிறந்த பிறகு 10 வருஷமாக வெள்ளை; ரத்தம் கலந்த வெள்ளை; உடம்பு துரும்பு போல் இளைத்து பசியும் குறைந்து, மாதவிடாயும் மிகவும் நாள்பட்டு நாள்பட்டு வந்துகொண்டிருந்தது. இடுப்புவலி மலச்சிக்கல், தீய்ந்த மலமாக 4, 5 நாளுக்கொருமுறை கருப்பான கெட்டியான மலம் போகும். வேலையில் இஷ்டமில்லாமை; வேலையே செய்யமுடியாது. முதல் பிரசவம் ஆனபிறகு கர்ப்பமே தரிக்கவில்லை.

சிகிச்சை:— Leucure ஊசிகள் வாரத்திற்கு இரண்டு தடவையாகக் கொடுக்கப்பட்டு Pulsatilla 10.M. 2, 3 டோஸ்கள் கொடுக்கப்பட்டது. சுமார் ஒரு மாத காலம் வைத்தியம் செய்து, Lyco, Sepia, Arsenic, Cal Carb முதலிய வைத்தியம் செய்தும் பிரயோசனப்படவில்லை. பின்பு Tr. Saraca Indica தாய் திராவகமாக 10 சொட்டு வீதம் தினம் 3 வேளையாக ஒரு மாதம் கொடுக்கப்பட்டது. பிறகு நன்றாக சுகமடைந்தார் என்றாலும் பின்னும் இரண்டு மாத காலம் தொடர்ந்து கொடுக்கப்பட்டதில் பூர்ண சுகம்.

*

## 21. ACHYRANTHES ASPERA LINN.

## நாயுருவி.

இந்த சிறிய செடி இந்தியா முழுவதிலும் வளர்கிறது. இந்த செடியின் விதைகளை அரைத்து தண்ணீருடன் கலந்து விஷக் கடிகளுக்கும் பாம்புக் கடிக்கும் மேற்பூச்சாக உபயோகப்படுத்துகிறார்கள்.



அலோபதி உபயோகங்கள்:— இச்செடியின் கஷாயத்தை மூத்திரக்காய் மேல் ஏற்படும் வீக்கத்திற்கும், பொதுவான வீக்கத்திற்கும் கொடுக்கப்படுகிறது. கஷாயம் செய்யப்படுவதற்கு இரண்டு அவுன்சு செடியுடன் ஒன்றரை பைண்டு ஜலத்தில் கரைத்து 20 நிமிஷங்களிலிருந்து ½ நேரம் வரை கொதிக்கவிட்டு வடிகட்டி எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதில் துவர்ப்பு சத்திருப்பதால், இளகிய மலம்போவதை நிறுத்துவதற்கு இதன் கஷாயத்தை அரை அவுன்சிலிருந்து ஒரு அவுன்சு வரை தேனுடனாவது, பனங் கல்கண்டுடனாவது கலந்து கொடுப்பது வழக்கம். நாட்பட்ட பெரும்பாடு பேதி, ரத்த சீதபேதிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. மேலும் வீக்கங்களில் எல்லாவற்றிற்குமே கொடுக்கப்படுகிறது. இளகிய கோழையுடன் கூடிய இருமல், கிளாண்டு வீக்கங்கள் முதலியவற்றிற்கும் கொடுக்கப்படுகிறது. விஷக் கடிகளில்—நாய்க்கடி, பாம்புக்கடி, மற்ற விஷமுள்ள ஜந்துக்களின் கடிகளிலும் இதை உள்ளுக்கும் மேலுக்கும் கொடுப்பதுண்டு. இதன் சாறு சில சமயங்களில் பல் வலிகளிலும், மருந்து எண்ணெயை காது செவிடுபடுதலிலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

ஆயுர்வேத உபயோகங்கள்:— சரகர் மூக்கில் அதிகமாக ஏற்படும் சளியை வெளிப்படுத்த இதை மூக்குத் தூளாக உபயோகப்படுத்தினர்.

சுஷ்ருதர் இதனுடைய வேரின் மேலிருக்கும் பட்டையை மூலத்திற்கும், பூச்சித் தொந்தரவிற்கும் உபயோகித்தார்.

சக்ரதத்தர் கட்டிகளிலிருந்து வரும் ரத்தப் பெருக்கிற்கும், காதில் ஏற்படும் இரைச்சலுக்கும்,

சிகிச்சை:— எல்லா கேஸ்களுக்கும் ஒரேமாதிரியான சிகிச்சைதான் அளிக்கப்பட்டது. Pencillin 30 ம. தினம் இரண்டு ஊசி போடப்பட்டது. அகிரான்தெஸ் ஆஸ்பெராவின் 3x வீரியத்தில் உள்ளுக்குக் கொடுக்கப்பட்டது. தினம் 4 டோஸ்கள் வீதம் கொடுக்கப்பட்டது. மூன்றே நாட்களில் புண்கள் ஓரங்களிலிருந்த தடிப்பும், எரிச்சல், வலி முதலியவை குணமாயிற்று. கழுவுவதற்கு 3, 4 கேஸ்களில் எக்கினேஷியா லோஷன் உபயோகப்படுத்தப்பட்டது. பாக்கி கேஸ்களில் அகிரான்தஸ் தான் உபயோகப்படுத்தப்பட்டது. அகிரான்தஸ் உபயோகப்படுத்தப்பட்ட கேஸ்கள் சீக்கிரமாக குணப்பட்டது. ஆகையால் அகிரான்தஸ்தான் எக்கினேஷியாவைவிட சிறந்ததென்றும் செப்டிக் புண்களில் உபயோகப்படுகிறதென்றும் நம்பப்படுகிறது.

*

## 22. ANDERSONIA or AMOORA ROHITAKA. (ROHITAKA)

இது பெங்கால், அஸ்ஸாம், பர்மா முதலிய இடங்களிலும் இந்தியாவின் மேற்குப் பகுதிகளிலும் இருக்கின்றது. இது பெரிய மரங்களாக வளரும்.

அலோபதியர் அபிப்ராயமும், உபயோகங்களும் :— இரண்டு விதமான மஞ்சள் எண்ணெய்கள், மாவுப் பொருள், கலர் கொடுக்கக்கூடிய பொருள்கள், டானின், உப்புகள் முதலியன இதிலிருந்து கிடைக்கிறது. இதை டானிக்காகவும், கிளாண்டு வீக்கம், மண்ணீரல், கல்லீரல் தொந்திரவுகள், அதிகமான சக்தியின்மை முதலியவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.



டாக்டர் சோப்ரா அவர்கள் மேற்சொன்ன தொந்திரவுகளுக்குக் கொடுக்கலாமென்று சொல்லுகிறார்.

ஆயுர்வேத உபயோகங்கள் :— சக்ரதத்தர், சரகர் மற்றும் பல ஆயுர்வேத நிபுணர்கள் ஈரல் தொந்திரவுகளுக்கும், ஒழுக்குடன் கூடிய வெள்ளைக்கும், ஸ்திரீகளுக்கு காணும் வெள்ளைக்கும், பித்தத் தொந்திரவுகளுக்கும் மிகவும் நல்லது என்று கூறுகிறார்கள். பித்த மஞ்சள் காமாலை, வீக்கங்களுக்கும், நாட்பட்ட ஜுரங்களுக்கும் கொடுக்கலாமென்கிறார்கள்.

பொதுவாக ஆயுர்வேத வைத்தியர்கள் — பித்த சம்மந்தமான தொந்திரவுகள், கல்லீரல், மண்ணீரல் தொந்திரவுகள், கிளாண்டு பெருத்தல், பொதுவான நிசக்தி, வெள்ளை இவற்றிற்கும் கொடுக்கலாமென்று சிபார்சு செய்கிறார்கள்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— டாக்டர் பிரமாத பிரசன்ன பிஸ்வாஸ் இந்த மருந்தை ப்ரூவ் செய்தார். கீழ்க்கண்ட குறிகள் தென்பட்டன :— வெகு சீக்கிரம் கோபம் வந்துவிடும். எழுதும் எழுத்துக்களில் தப்புகள் ஏற்படும் ஞாபக சக்தி, குறைவும் தவறும. எந்த விஷயத்திலும் மனதை செலுத்தமுடியாத தன்மை.

தலை சுடுவதுபோன்ற உணர்ச்சி தலை மயக்கம்; நெற்றிப் பொட்டுகள் மிகவும் உணர்ச்சியுடன் உஷ்ணம் கூடியிருக்கும். குளிர்ந்த ஜலத்தினால் சாதகம்—கண்களும், முகத்திலும் எரிச்சல் தோன்றும். முகத்திலும், கண்களிலும், கை கால்களிலும் உஷ்ணம் வெளிப்படும். உடலுக்கு அணிந்திருக்கும்

ஆடையை கழற்றி எறிந்துவிட்டால் சாதகமாய் தோன்றும்.

வாயில் காலை வேளைகளில் கெடுதலான, கசப்பான ருசி.

வாந்தி எடுப்பதுபோன்ற உணர்ச்சியில் வயிற்றில் எரிச்சல். அஜீர்ணத்தால், வயிற்றுப்பிசத்தால் வலி. வயிற்றிலும், வலது இடதுபுற விலாக்களிலும் வலி. கல்லீரல் மண்ணீரல் பெருக்கமும் வலியுடன் கூடியுமிருக்கும்.

குமட்டலுடன் வாந்தியுமிருக்கும். தண்ணீர் போன்ற வாந்தி.

நெற்றிப்பொட்டு வலியுடன்கூடிய காய்ச்சல். காய்ச்சலில் அதிகமான வலி. உடம்பு உஷ்ணமாக தெரியும். வாயிலிருந்து உஷ்ணம் வெளிப்படும். முகம், கண்கள், கைகள், கால்கள் எல்லாம் எரிச்சல்.

நாடி துரிதமாகவும், அதிகமாகவுமிருக்கும்.

பொதுவாக மண்ணீரல் பெருத்திருந்தாலும் சரி, வலியுடன் கூடியிருந்தாலும் சரி இது உபயோகப்படும். பித்தக் கோளாறுகளில் கொடுக்கலாம. நாட்பட்ட மலேரியா ஜுரங்களில், மண்ணீரல் பெருக்கம், வலியுடனிருந்தால் இது சிறந்தது. கண், முகமெல்லாம் எரிச்சலோடு தலை வலியுடன் கூடிய பித்தக் கோளாறுகளுடன் கூடிய பித்த சுரங்களிலும் கொடுக்கலாம் இதன் முக்கியமான குறி மலச் சிக்கலுடன் கூடியிருக்கும். காலை வேளைகளில் எழுந்திருக்கும்பொழுதே சோம்பேறித்தனம், ஆகார இச்சையில்லாமை, வாயில் கசப்புடன் கூடி



யிருக்கும். திறந்த வெளி—குளிர்ச்சியான காற்று அல்லது குளிர்ச்சியான முறைகளால் எல்லா வலிகளும் சாதகம்.

இந்த மருந்தை Cephalandra Indica, (கோவை) Kalmegh, Azadiracta (வேம்பு) Nyctanthus (பவளமல்லி) Khetpapra முதலிய மருந்துகளோடு ஒத்திட்டுப் பார்க்கவும்.

*

## 23. ATISTA INDICA.
## GLYCOSMIS PENTAPHYLLA.

இது இந்தியாவில் மானாவாரியாக வளரும் ஒரு சிறிய செடி.

அலோபதி உபயோகங்கள் :— இது பாம்புக் கடிக்கு தேவலை என்று லெப்டினண்ட் கர்னல் சோப்ரா கூறியிருக்கிறார்.

ஆயுர்வேத உபயோகங்கள் :— இருமல், மஞ்சள் காமாலை, பித்தம், வாய்வு இதற்கெல்லாம் சிறந்ததென்று ஆயுர்வேத வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— இந்த செடியைப்பற்றி ஒரு விசேஷமான வரலாறு உண்டு. 1914-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் அசாம மாஹாணத்தில் கௌரிபூர் என்ற இடத்தில், 2 நாளைக்கு அல்லது மூன்று நாளைக்கொருமுறை ஒரு ஜுரம் தோன்றலாயிற்று. இது மலேரியாவில் ஒரு விதம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அச் சமயத்தில் காளிகுமார் பட்டாச்சாரி என்னும் ஹோமியோ

பதியர் வைத்தியம் செய்துகொண்டிருந்தார். அவர் ஒரு நாளைக்கு வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்த பொழுது ஒரு நோயாளியின் வேலைக்காரன் டாக்டரை அழைத்துக்கொண்டு போக வந்தான். அவன் வரும்பொழுது பல் குச்சியாக இந்த செடியின் குச்சியை உபயோகித்துவந்தான். என்ன விஷயம் என்று டாக்டர் அந்த ஆளை வினவியதில் அந்த ஆள் தம் எஜமானர் வீட்டில் அனைவரும் காய்ச்சலால் படுத்திருக்கிறார்களென்றும் கூறினர். அதேமாதிரி தன்னைத் தவிற தன் வீட்டிலும் அந்த ஜுரம் பாதித்திருக்கிறதென்றும் கூறினன். பின்னும் தீர விசாரித்ததில் தனக்கும் அந்த ஜுரம் வந்திருந்ததாகவும், ஆனல் வழக்கமாக தேய்க்கும் பல் குச்சியாலேயே விடாமல் ஜுரத்தின்பொழுது பல் தேய்த்ததாகவும் அவருக்கு தெரியவந்தது. உடனே அவருக்கு இந்த குச்சியினலேயே இந்த ஜுரம் நின்றிருக்கலாம் என்ற அபிப்ராயம் தோன்றிற்று. உடனே அந்த செடியிலிருந்து டின்சர் தயார் செய்தார். இதை ப்ரூவ் செய்யவும் செய்தார். ப்ரூவ் செய்ததில் அவர் நினைத்தது சரியென்று தெரிந்தது.

## இதன் குணங்கள்.

மனது:— ஞாபக சக்திக் குறைவு. அலட்சிய பாவம். காலையில் மயக்கம், கிறுகிறுப்பு. தன்னைச் சுற்றியிருக்கும் வஸ்துக்களெல்லாம் சுற்றிவருவது போன்ற பிரமை, ஜுரமில்லாதபொழுதே உடம்பு முழுவதும் குளிர், ஒரு பக்கம் மாத்திரம் மெல்லுவது போன்ற வலியில் மற்றொரு பக்கம் சௌகரியம். ஆனல் பக்கம் மாறலாம். கண்களில் எரிச்சல், கூச்சம், கண்ணைத் திறந்தால் வெளிச்சம் மின்னல் போன்றிருக்கும். ஆதலால் உடனே கண்களை மூடிக்கொள்ளவேண்டும்.



காது:— கூர்மையாகக் கேட்கும். காதுகளில் இரண்டிலும் சத்தம்.

மூக்கிலிருந்து ஜலம் கொட்டும் ரத்த சோகை; ஆதலால் மூக்கிலிருந்து ரத்தம் வரும்.

முகம் வெளுத்துப்போய் மஞ்சளாக இருக்கும். பல்களின் ஈரல்களில் இலேசான வலி தென்படும். ஈரலிலிருந்து ரத்தம் வெளிப்படும். ஜுரம் முடிந்த பிறகு வாயில் கசப்பு. துர்நாற்றம், தொண்டை வரட்சி, டான்சில்ஸ் வீங்கியிருக்கும். ஜுரம் நின்ற பிறகும் சில வாரங்கள் நீடிக்கும்.

அபாரமான பசி. புளிப்பு பதார்த்தங்களில் ஆசை. திரவ பதார்த்தங்கள் பிடிக்காது.

வாயிலிருந்து உமிழ்நீர் அதிகம் வரும். சாப்பிட்ட பிறகு நெஞ்செரிச்சல் — வயிற்றிலிருந்து புளிப்பான ஏப்பம்.

அடி வயிற்றில் துடிக்கும் வலி. சாப்பிட்டவுடன் வயிற்றில் கனம். வயிற்றில் காற்றுப்பிசம், ஏப்பம் விட்டால் சற்று குறையும் ஈரல் குலைப் பக்கங்களில் எரிச்சல். மாலை வேளைகளில் அதிகமாகும்—வயிற்றில் வலி. தொப்புளைச்சுற்றி அசைவது போன்றிருக்கும். தொப்புளைச்சுற்றி இருக்கும் வலியினல் நினைவுகூட இழக்கும்படியாயிருககும்.

மலச்சிக்கல்; மலம் வெளுப்பாகயிருக்கும். சில சமயம் ரத்தம் கலந்தும் இருக்கலாம். பின்புறம் இடுப்பு பக்கத்தில் கடுப்பு.

இரவில் ஆண் குறி விறைக்கும். இச்சை முழுவதும் இருக்காது. பின்புற கழுத்திலும் தோள

அவர் புஸ்தகத்தில், இரண்டு மூன்று கேஸ்கள் இந்த மருந்தை தெரியாத்தனமாய் சாப்பிட்டு அதனால் ஏற்படும் விஷக் குறிகளையும் கண்டிருக்கிறார். அது ஏதோ சில நாட்டு வைத்தியர்கள் நாட்பட்ட ஜுரத்திற்காக கொடுத்திருந்தார்கள். மூன்று பேர்களுக்கும் வாந்தியும் காலராமாதிரி போக்கும், உடம்பு ஜில்லிட்டு குளிருடன் கூடியும், ஜில்லென்ற வியர்வையும் கூடியவர்களாய் இருந்தார்கள். இதற்கு மாற்று ரிசினஸ் கம்யூனிஸ் என்ற விளக்கெண்ணையை வீரியப்படுத்தி கொடுத்தால் சமனப்படுத்தும்.

முடிவுரை:— இம்மாதிரி கேஸ்களிலிருந்து நாம் கீழ்க்கண்ட குறிகளை அறிந்துகொள்கிறோம். கீழ்க்கண்ட குறிகளுக்கு மிகவும் உபயோகமுள்ளது என்று அறிந்துகொள்கிறோம. திடீரென்று பேதி மாதிரி ஆரம்பித்து, பிறகு காலராமாதிரி மாறிவிடும். அல்லது திடீரென்று வாந்தி பேதியாக கடுமையாக ஆரம்பித்துவிடும். வயிற்று வலி, கண்ட எரிவு முதலியன இருக்காது. (ரிசினஸ் கம்யூனிஸ்) என்ற மருந்தையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். சில சமயம் மலத்துடன்கூட சீதமும் கலந்திருக்கலாம். சிறுநீர் பிரிந்தும் அல்லது பிரியாமலும் இருக்கலாம்; ஏராளமான தாகம். அடிக்கடி தண்ணீராகவோ, பித்தமாகவோ, கோழையாகவோ வாந்தி எடுக்கும். வாந்தியும், பேதியும் சேர்ந்தாற்போல் ஏற்படலாம். முன் நெற்றி ஏராளமான வியர்வையினால் நனைந்திருக்கும். நாடி ரொம்பவும் பலஹீனமாகவும் அல்லது தெரியாமலும் இருக்கலாம். உடல் முழுவதும், கை கால்களும் ஜில்லென்று தென்படும்.



## அனுபவ கேஸ். 1951

### ஒரே வீட்டில் மூன்று பேர்கள் — ஹரிஜன்.

ப. மங்களம்.

மேற்படி மூன்று கேஸ்களும் ஒரு கற்றுக்குட்டி ஹோமியோபதி டாக்டரால் பார்க்கப்பட்டது. விராட்ரம் ஆல்பம், காம்பர், ஆர்ஸனிக், டெபாக்கம் இந்நான்கும் தாராளமாக கொடுக்கப்பட்டும் பிரயோசனமில்லாமல் இருந்தது. நாம் சென்ற பொழுது கீழ்க்கண்ட குறிகள் இருந்தன. உடலெல்லாம் வியர்த்து ஜில்லென்று இருந்தது; வயிற்று வலி இல்லை. ஓயாமல் வாந்தியும், பேதியும். நாடி தெரியவில்லை. பிரக்ஞையற்று புரண்டுக் கொண்டே இருந்தார்கள்.

வியாதி காலரா:— சரீர உஷ்ணம், 95°F ரிஸினேஸ் கம்யூனிஸ் என்ற மருந்து 10-M வீரியத்தில் 15 நிமிஷத்திற்கு ஒருதரமாக ஐந்தாறுவேளை கொடுக்கப்பட்டது. நரம்பு மூலமாக குளுகோஸும், அக்கேஷியாவும் கொடுக்கப்பட்டது. ஒரு மணி நேரம் கழித்தும் பலன் ஏற்படவில்லை. ஒரு மணி நேரத்திறகு பிறகு ஹப்பா அமரா 6x வீரியத்தில் 20 சொட்டு 4 அவுன்ஸ் வெந்நீரில் கரைத்து வேளைக்கு ½ அவுன்சாக எட்டு வேளை கொடுக்கப்பட்டது. இது கொடுத்த ஒரு மணி நேரத்திற்கு பிறகு வயிற்றுப்போக்கு நின்று உடம்பு சூடு 97°F ஆக வந்தது. இரண்டு மணி நேரம் கழித்து சூடு நார்மலுக்கு வந்துவிட்டது. படிப்படியாக இரண்டு நாளில் பூரண குணம்.

## ( டாமெரண்டஸ் இண்டிகா )
## 25. TAMARINDUS INDICA – புளி.

இது நீண்டகாலமாக நம் நாட்டில் சீதளம் கொடுக்கக்கூடியதாகவும் மலம் இளக்கக்கூடியதாகவும், ஜீரணம் கொடுக்கக்கூடியதாகவும் உபயோகப் பட்டு வந்துள்ளது. கொட்டையின் மேல் சிவப்புத் தோல் பேதி, ரத்த சீதபேதி இவைகளில் மலபந்தம் செய்யக்கூடியதாக கருதப்பட்டு வந்திருக்கிறது. இந்த மருந்து அதிகமாக ஹோமியோபதியர்களால் கையாளப்படாவிட்டாலும் முக்கியமாக கீழ்க்கண்ட வியாதிகளில் தனியாகவே கொடுக்க சிறந்ததாக கருதப்பட்டு வந்துள்ளது.

ஈரலிலிருந்து இரத்தம் வருவது, உடம்பு இளைப்பது, எலும்புகள் வளர்ச்சியின்மை, இரத்த சோகை, பசி மந்தம் இவைகளை இதனுடைய பழச் சாற்றை வீரியப்படுத்தாமல் உபயோகப்படுத்த நல்ல குணம் தரும்.

பழைய காலத்து நாட்டு வைத்தியர்கள் இதை மலம் இளக்குவதற்காக தனியாகவோ, மற்ற மருந்துகளோடோ கொடுத்திருக்கிறார்கள்.

அடிபட்ட காயங்களுக்கும், வாயுவினால் ஏற்பட்ட வீக்கங்களுக்கும், இதன் இலைகளிலிருந்து பண்ணிய டிங்சரை பஞ்சில் நனைத்து கட்டிவர வீக்கம் தணியும்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— இதன் பழச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் டிங்சரை, உடல் வளர்ச்சி குறைவு, பித்த வாயுவினால் நெஞ்சு எரிச்சல், பித்த படபடப்பு ஜீரணமாகாமல் தினம் காலையில் பேதியாகுதல், கை கால்கள் குடைச்சல் முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம்.



பல்லிலிருந்து இரத்தம் கசிதல், பல் சொத்தை விழுதல், அதிகமாக படிக்கும் பள்ளி மாணவர்களின் தலை வலி, சோம்பல், ஞாபக மறதி, பசியின்மை, பசி மந்தம், அடிபட்டதினால் ஏற்படும் தசையின் சுளுக்கும், வலிகளும். 6x வீரியத்தில் உபயோகப் படுத்திவர மேற்சொன்ன குறிகளெல்லாம் குணப்படும்.

★

## 26. RAUWOLFIA SERPENTINA – சர்ப்பகந்தி.
### (ராவுல்பியா செர்பண்டினா)

ஹிமாலய மலைத் தொடரின் அடிப்பாகத்தில் இது ஒரு பெரிய படரும் செடியாக வளருகிறது. 4000 அடி உயரத்திற்குமேல் இது அஸ்ஸாம், தக்காண பீடபூமி, மேற்குமலைத்தொடர், சிலோன் முதலிய இடங்களில் காணப்படுகிறது. இது அப்போனஸனஸி என்ற சணல் வகையைச் சேர்ந்தது. பாட்னா, வடக்கு பீஹார் முதலிய மாகாணங்களிலும், ஜாவா, மலேயா முதலிய இடங்களிலும் கிடைக்கிறது. இது வெகு காலமாக நமது நாட்டில் விஷக் கடிகளுக்கும், பூச்சிக் கடிகளுக்கும் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. ஜுரத்திற்கு சிறந்த மருந்தென்றும் கருதுகிறார்கள். கருப்பையில் சுருங்கி விரியும் தன்மையை அதிகப்படுத்தி சிசுவை வெளிப்படுத்தி வந்ததென்றும் சொல்லிவந்தார்கள். ஆனால் சமீபகாலமாக இது தூக்கமின்மைக்கும், மனக் கவலைக்கும், மூளைக் கோளாறுகளுக்கும் சிறந்ததென அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் இம் மாதிரி உபயோகப்படுமென்று பழைய இந்திய

புஸ்தகத்தில் இல்லை ஆனல் பீஹார் மாகாணத்தில் கிராமத்து ஜனங்கள் குழந்தைகளை தூங்கவைப்ப தற்காக இதை உபயோகப்படுத்திவந்தார்களென்று தெரிகிறது.

இப்போது பீஹார், உத்தர பிரதேசங்களில் பைத்தியத்திற்கு மருந்தென்று விற்றுவருகிறார்கள்.

ஸென், போஸ் முதலியவர்கள் 1931-ம் வருஷம் இந்தச் செடியின் வேரில் சுமார் ஒரு சத விகிதம் ஆல்கலாயிடு சத்துக்கள் இருப்பதாக கண்டுபிடித்தார்கள். மற்றும் சிலர் இன்னும் சில விசேஷ சத்துக்கள் இருப்பதாக கண்டுபிடித்தார்கள்.

இப்பொழுது அதிகமான (விரிவான) ஆராய்ச்சி செய்ததன் பலனாக இந்த வேரை அப்படியே பௌடராகவோ, அல்லது அதிலிருந்து விசேஷ சத்துக்களாகவோ பிரித்து உபயோகப்படுத்தினல் சில முக்கியமான வியாதிகளுக்கு சிறந்ததாக கருதப்படுகிறது ஆல்கலாயிடு என்ற விசேஷ சத்துக்களை மட்டும் பிரித்து உபயோகப்படுத்தினல் விசேஷமான குணம் தருவதில்லை என்று பரிசோதனையில் தெரிந்தது.

முக்கியமான குணங்கள் :— இதிலிருந்து விசேஷமான சத்துக்களை அதிக ரத்தக்கொதிப்பை குறைத்து அதனுடன் ஏற்படும் மற்ற குறிகளையும் சமனப்படுத்துகிறது என்று தெரிகிறது. ரத்தக் கொதிப்புள்ள நோயாளிகளுக்கு ஏற்படும் தலை வலி, மூச்சுத் திணரல், காது இரைச்சல், நரம்பு அதிர்ச்சிகள் இவைகளெல்லாம் நாளடைவில் மறைந்துவிடுகின்றன. சில சமயம் ரத்தக் கொதிப்பில் ஏற்படும் தூக்கமின்மையும் வரவரக் குறைந்து விடும்.



ஆகவே இதிலிருந்து தயார் செய்யப்படும் டிஞ்சர் அதனுடைய ஆல்கலாய்ட் சத்துக்களை மாத்திரம் கொடுப்பதைவிட சிறந்த விதமாய் வேலை செய்கிறது.

முக்கியமான உபயோகங்கள் :—

உன்மத்தம், மூளை கோளாறுகள், ரத்தக்கொதிப்பினல் ஏற்படும் தூக்கமின்மை, அசதி, உடம்பு எரிச்சல், வைத்தியம், சிலசமயம் ஹிஸ்டிரியா முதலியவைகள் குணமாகும். இந்த மருந்து இன்னும் பரிபூர்ணமாக (Prove) செய்யப்படவில்லை.

நமது டாக்டரின் அனுபவத்திலும், மற்றும் சில டாக்டர்களின் அனுபவத்திலும், மேற்சொன்ன வியாதிகளும், வியாதிக் குறிகளும் சமனம் அடைந்து இருக்கின்றன.

அனுபவ கேஸ் :— 1956.

Mrs ராஜகோபால்—வயது 45

திடீரென்று வேலையே செய்யாமல் ஒரு மூலையில்போய் உட்கார்ந்துகொண்டு விடுவாள்.

ஒரு வேலையும் செய்யமுடியாது. யாரைக்கண்டாலும் முக்கியமாக தன் புருஷனைக் கண்டால் ஆத்திரம், கோபம், ஏற்பட்டுவிடும்.

சில நாட்கள் இந்த நிலைமை நீடிக்கும். பிறகு சுய நிலைமை வந்துவிடும்.

நான் பார்க்கும்போது ஷை அம்மாளுக்கு 10 வருஷ காலமாக இவ்வியாதி அம்மாதிரிநிலைமை நீடித்து இருந்தது.

இம்மாதிரி சித்தபிரமை ஏற்பட்ட காலங்களில் தூக்கமின்மையும் பசியின்மையும் உண்டாகின்றன.

சிகிச்சை :— டிஞ்சர் சர்ப்பண்டினு 3x வீரியத்தில் (நமது லாபரிட்டிரியின் தயாரிப்பு) வேளைக்கு 1 அவுன்ஸ் தண்ணீரில் 10 சொட்டு கலந்து தினம் 4 வேளை கொடுக்கப் பட்டது.

தினம் சதைக்கடியில் எம்மால் தயாரிக்கப்படும் சர்பெண்டினு ஊசியும் கொடுக்கப்பட்டது. இம்மாதிரி 6 நாட்கள் கொடுக்கப்பட்டுவிட்டு பிறகு தினம் 2 வேளை மட்டிலும் டிஞ்சர் செர்பண்டினு கொடுக்கப்பட்டது.

இன்ஜெக்ஷன் 3 நாளைக்கு ஒரு தடவையாக இன்னும் ஆறு கொடுக்கப்பட்டது.

இதற்குப் பிறகு 15 நாட்கள் வரையில் வேறு யாதொரு மருந்தும் கொடுக்கப்படவில்லை.

மறுபடியும் 15 நாட்கள் தினம் ஒருவேளை டிஞ்சர் சர்பெண்டினு உள்ளுக்கும் மூன்று நாட்களுக்கு ஒருதடவை இன்ஜெக்ஷனும் கொடுக்கப்பட்டுவந்தது.

பிறகு இன்று வரையில் வேறு எந்தமருந்தும் கொடுக்கப்படவில்லை.

இன்றுவரையில் அந்த அம்மை பூர்ண சுகத்துடன் இருக்கிறார்.



# 27. CYNODON DACTYLON.

## (சைனோடான் டாக்டிலான்)

தமிழ் பெயர்:- [அருகம்புல்]

இது ஒரு தரையில் படரும் புல். இந்தியா முழுவதும் கிடைக்கும்.

இது வருஷம் முழுவதும் எங்கும் வளருகிறது. ரோட் பக்கங்களிலும் மணல் செல்லிப்பாங்கான இடங்களிலும் தாராளமாக பயிராகிறது. இதனுடைய கொடியை வெட்டி வைத்தோமானால் உடனே முளைத்துவிடும். சில மலைப்பிரதேசங்களில் சுமார் 8000 அடி உயரம் வரையில் காணப்படுகிறது.

இதில் வெள்ளை அருகு என்றும், பச்சை அருகு என்றும் இருவகை உண்டு. இரண்டிற்கும் உபயோகங்களும் குணங்களும் ஒன்றுதான்.

அலபதிக் உபயோகியுங்கள்:—

கர்னல் சோப்ரா அவர்கள் இதை உஷ்ண சமனி என்றும், வாந்தியை நிறுத்துவதற்கு உபயோகப்படுத்துவது என்றும், நீர் பிரிவதற்காக உபயோகப்படுத்துவது என்றும், ரத்தப் பெருக்கை தடுக்கக்கூடியது என்றும் மலமிளக்கக்கூடியது என்றும், தேள் கடிக்கு மருந்து என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் பல அலபதிக் டாக்டர்கள் கீழ்கண்டவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள்;

மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகினால் அதற்கு இதை பொடிபண்ணி வைக்க இரத்தப்பெருக்கு நிற்கும்.

கால்களுக்கு இடுக்கில் ஏற்படும் புண்களுக்கு இதை அரைத்துத் தடவலாம்.

வெட்டுக்காயங்களுக்கு இதை அரைத்துக்கட்ட ரத்தம் நிற்கும்.

மகோதரம் வியாதிகளில் இதை நீர் பிரிவதற்காக கொடுக்கலாம்.

வேறு சிலர் இதை சொறி சிரங்கிற்கும் உபயோகப் படுத்தலாம் என்கிறார்கள்.

டாக்டர் R. டத் என்பவர் இதை டிகாக்ஷனாக எடுத்து பாலுடன் கலந்து ரத்தம் ஒழுகும் மூலங்களுக்கு கொடுத்து குணம் கண்டிருக்கிறார்.

ஆயுர்வேதிக் உபயோகங்கள் :—

சுச்ருதர் ரத்தமாக (வாந்தி எடுப்பதற்கு) சிறந்தது என்கிறார்.

சரகர் : நாசியிலிருந்து ரத்தம் ஒழுகுவதற்கும், ராஜப் பிளவைகளுக்கும் சிறந்தது என்று அபிப்பிராயப்படுகிறார்.

பவப்பிரகாசர் என்பவர் :— நீர்கட்டிற்கு நிகரற்ற மருந்து என்று அபிப்பிராயப்படுகிறார்.

சக்கரதத்தர் என்பவர் சொறி சிரங்குக்கும் மாத விடாய் தடைபட்டிருக்கிறதற்கும் நிவாரணம் செய்ய வல்லது என்கிறார். இந்த செடியை சிகிச்சை மூலமாக கொடுத்து அதிலிருந்து தயார்செய்து இந்திய பலவகை களிலும் பல வியாதிகளில் உபயோகப்படுத்தி வருகிறார்கள்.



இந்த செடி ரொம்ப அல்பமானதாக இருந்தாலும் ரொம்பவும் சிறந்த மருந்தாக பலர் கண்டிருக்கிறார்கள்.

பித்தமாக வாந்தி எடுப்பதை இது உடனே நிறுத்தும்.

நாள்பட்ட பேதி, பொதுவாக உடம்பில் நீர் அரிப்பு, மகோதரம் முதலியவற்றிற்கும், சிறுநீரை பிரிப்பதற்கும் உபயோகமாகும்.

அதேமாதிரி அழுக்கப்பட்ட கிரந்தி ரோகங்களிலும், நாள்பட்ட வெட்டையினால் ஏற்படும் நீர் அடைப்பு, மூத்திரப்பையின் கல் அடைப்புகளிலும் இது மிகவும் சிறந்த தாக கருதப்படுகிறது.

சிறுநீர் சொட்டு சொட்டாக இறங்குவதற்கும், நாள்பட்ட வெள்ளை ஒழுங்கிற்கும் குணம் அளிக்கும்.

இரத்தமாக வாந்தி எடுப்பதற்கும், இரத்தமாக நுரை ஈரலிலிருந்து வெளிவருவதற்கும், மூக்கிலிருந்து ரத்த ஒழுக்கிற்கும் உதிரப் பெரும்பாட்டிற்கும், ரத்தத்துடன் கூடிய வெள்ளைக்கும் ரத்தசீத பேதிக்கும் வெட்டுக்காயங் களிலிருந்து ஏற்படும் ரத்தப்பெருக்கிற்கும், ரத்தமூலத்திற் கும் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

எமது சொந்த அனுபவத்தில் எந்த வெட்டுக்காயங் களுக்கும் சைனேடான் என்ற இம் மருந்தையும் (காலண்டுலா) என்ற திராவகத்தையும் உபயோகப் படுத்தலாம்.

ஆயுர்வேத உபயோகங்கள் :- சமஸ்கிருதத்தில் இதை வைத்திய மாதா என்று சொல்லுவார்கள். பலருடைய அபிப்பிராயங்களை சேர்த்து ஒன்றாகச் சொன்னால் இது ரத்தமாக துப்புவதற்கும், மஞ்சட்காமாலைக்கும் உடம்பில் துர்நாற்றம் எடுப்பதற்கும், கப பித்த சம்பந்தமான ஜுரங்களுக்கும், குஷ்டரோகத்திற்கும், மூலத்திற்கும் சுகப் பிரஸவம் உண்டாவதற்கும்கூட உபயோகப்படுத்திவந்தார்கள்.

ஹோமியோபதி உபயோகங்கள் :—

இது டாக்டர் S. C கோஷ் அவர்களால் ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. 1905-ல் அமெரிக்காவில் ஹோமியோ பத்திரிகைகளிலும், இங்கிலாந்து, பிரான்சு முதலிய தேச பத்திரிக்கைகளிலும் வெளிவந்திருக்கிறது.

போரிக், ப்ளாக்வுட் இவர்களின் மெட்டிரியா மெடிகாவில் இதைப்பற்றி அச்சிடப்பட்டிருக்கிறது.

குறிகள் :—

மனது :— நோயாளி கவலையும், அசிரத்தையும் உள்ளவராக இருப்பர். பேசுவதற்கும் பிடிக்காது. கோபம் ஆத்திரம் அதிகமாக இருக்கும்.

தலை :— தலை சூடாகவும், கனமாகவும், பாரமாகவுமிருக்கும். தலையில் உஷ்ணமாகத் தெரியும். இரண்டு பொட்டுகளிலும் நரம்பு துடிப்புடன் வலி இருக்கும்.

கண்கள் :- கண்களில் நீர்வடியும். ஜலதோஷம், அடிக்கடி தும்மல், கண்களில் எரிச்சல், பார்வை மங்கல்.



காதுகள் :— சத்தம் பொறுக்காது

மூக்கு :— தும்மலுடன் அதிகம் ஜலதோஷம், மூக்கு அடைப்புடன் வலியும், வீக்கமும், நெற்றியில் கடுமையான வலி, மூக்கிலிருந்து ஏராளமாக ஜலம் ஒழுகும். நாசித் துவாரங்கள் வெந்து இருக்கும். சில சமயங்களில் நாக்கு வரண்டும் இருக்கும். சிலசமயம் அடைப்பும் இருக்கும். ருசியும் வாசனையும் தெரியாது.

வாய் :— பற்களில் குத்துவதுபோல் தோற்றம். வாய் முழுவதும் தென்படும். வாய் வறண்டு தாகவறட்சையும் இருக்கும். நாக்கு வறண்டு வெண்மை படர்ந்து இருக்கும்.

தொண்டை :— தொண்டை வறண்டு இருக்கும். சாதாரணமாக விழுங்கும்போது வலி. தொண்டையில் பிசுக் என்று ஒட்டிக்கொண்டு இருக்கும் கோழை

பசி :— பசியே இராது. வாயில் கெட்ட ருசி. துர்நாற்றம் அடிக்கும். சாப்பிடப்பிடிக்காது.

வாந்தி :— குமட்டல் இருக்கும். இருமும்போது வாந்தி, சளியாக வாந்தி, முகம் வெளுத்து வாந்தி எடுத்தவுடன் பலஹீனம்.

வயிறு :— ஈரல் பாகத்தில் பிதுங்குவதுபோல் வலி, வயிற்றுப் பொருமல், சத்தத்துடன் வாயு பிரியும். வயிற்று ஒப்புஸம்.

மலம் :— சீதகத்துடன் கூடிய இளகிய மலம். வயிற்றில் சிறிய வலி. சாப்பிட்டவுடன் சாதகம்.

LL
N57

# 30. CALOTROPIS GIGANTEA.

## (காலோட்ராபிஸ் ஜைஜாண்டியா)

*தமிழ் பெயர் :—* [எருக்கஞ்செடி]

இது திறந்த வெளிகளிலும், பாறைப் பிரதேசங்களிலும் வளரக்கூடிய செடி. சுமார் 3000 அடி மலைப்பிரதேசங்களிலும் வளரும். இந்தியா, சிலோன், சிங்கப்பூர், தென்சைனா முதலிய இடங்களிலும் வளருகிறது.

## அலோபதிக் உபயோகங்கள்.

பூரம், அண்டிமணி முதலியவற்றுடன் சேர்த்து இந்த செடியின் வேரை அரைத்து யானைக்கால் வீக்கத்தில் பூசுவார்கள். குஷ்டப் புண்கள், வெண் குஷ்டம், மற்றும் சில தோல் வியாதிகளிலும் இம்மாதிரியே தடவுவார்கள். ஆஸ்த்மா இழுப்பிற்கு இதை சிகரெட்டாகச்செய்து புகை பிடிப்பார்கள். ஐபிகாக்கிற்குப் பதிலாக இதை சீதபேதியில் உபயோகிக்கலாம். வயிற்றுவலி, முதலியவற்றிற்கு இலைகளை வாட்டி எண்ணெ தடவி மேலுக்கு ஒற்றடம் கொடுக்கலாம். பூக்கள், இருமல், ஆஸ்த்மா வியாதிகளில் டானிக்கு மாதிரி உபயோகப்படும். எருக்கம்பால் கடுமையாக பேதி உண்டாக்கும். சொத்தை பல்லிற்கும், காதுவலிக்கும் இதை உபயோகப்படுத்துவதுண்டு. அதிகமாக உபயோகப்படுத்தினால் தோலைப் புண்ணாக்கிவிடும். பெரும்பாலும் இதை ஸிபிலிஸ் வியாதிகளில் உபயோகப்படுத்துகிறார்கள். வாயு, விடாத நாள்பட்ட சுரங்களிலும் பிரயோசனப்படும். பூச்சி, தேள்கடியில் கடிவாயில் அரைத்துத்தடவ எரிச்சல் தீரும். தோலிலிருந்து மயிரை விழச்செய்வதால், தோல் பதனிடுவதற்கும் இதை உபயோகப்படுத்துகிறார்கள்.



அதிக அளவில் உட்கொண்டால் கடுமையான வாந்தியுடன் பேதி உண்டாக்கும்.

டாக்டர் சோப்ரா தமது புத்தகம் 311-வது பக்கத்தில் எழுதுகிறார்:—

"மேற்சொன்ன குணங்களெல்லாம் ஒன்றும் உபயோகமில்லை என்பது தற்போதைய ரிசர்ச்சுகளின் மூலம் தெரியவருகிறது."

ஆயுர்வேதிக் உபயோகங்கள் :— இதில் இரண்டு விதம் உண்டு. வெள்ளை, சிகப்பு. இரண்டிற்கும ஒரே மாதிரியான குணங்கள்தான். சிரங்குகள், வயிற்று ஒப்புஸம், குஷ்டம், ஸ்ப்ளீன் வியாதிகள், மூலம், இருமல் வயிற்றுக் கோளாறுகள், வயிற்றில் கிருமிகள், வாந்தி, காதுவலி, பல்வலி, யானைக்கால் வீக்கங்கள், தேள்கடி முதலிய வியாதிகளுக்கு உபயோகப்படுகிறது என்று ஆயுர்வேத டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஹோமியோபதிக் உபயோகங்கள் :—

டாக்டர் E. B ஈவாட்ஸ் (டப்ளின்) அவர்களால் 1872-ஹு ப்ரூவ் செய்யப்பட்டு டாக்டர் ஜான் கிளார்க் அவர்களின் மெட்டீரியா மெடிகாவிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது

மெட்டீரியா மெடிகா.

(1) மனது :— அசதி, அலுப்பு.

(2) தலை :— தலைச் சுற்றல், பின் தலையில் லேசான வலி, காலை 11 மணியிலிருந்து நடு ராத்திரி வரையில்; சில சமயங்களில் மாலை அதிகமாக இருக்கும். தலை கனத்து வலிக்கும். முகம், தலை உஷ்ணமாக இருக்கும்.

(3) முகம் :— கன்னங்கள் நெருப்புமாதிரி எரியும். தொண்டை, உதடுகள் வரண்டிருக்கும்.

வாய் :— தாடைகளை அசைக்கும்போது வலி. வலது மேல் அண்ணம் சிறிது வீக்கம்.

வயிறு :— அடிக்கடி ஏப்பம், மயக்கம், கிறுகிறுப்புடன் வாந்தி எடுக்கும்போல் தோற்றம். நல்ல ஸ்டிராங் காப்பி சாப்பிட்டால் மஞ்சள் பித்தமாக வாந்தி.

சிறுநீர் அவயவம் :— அடிக்கடி நீர் பிரியும். நீர் கருஞ் சிவப்பாகவும், துர்கந்தத்துடனும் இருக்கும்.

சுவாசாசயம் :— மார்பில் அழுத்தினாற்போல் மூச்சு விட சிரமம்.

சூடு :— நாடி துரிதமாக இருக்கும்.

முதுகு :— முள்ளந்தண்டுபுறம் அடிக்கடி குளிர்.

கைகள் :— எதாவது சாமானை பிடிக்கும்போது வலது உள்ளன்கையின் நடுவில் இழுத்தாற்போல் வலி, பல நாட்கள்கூட நீடிக்கும்.

கால்கள் :— வலது அடித்துடையின் இடுக்கில் சிறு வலி, இரண்டுநாள் கழித்து துடையின் பின்பக்கத்தில் கனமாகவும் வலியுடனும் இருக்கும். திரும்புவது வலிக்கும். மறுநாள் காலை துடை வீங்கி வலியுடன் இருக்கும். காலை மடக்கமுடியாது. ஒவ்வொரு அடி நடக்கும்போது வலி. இடது காலில் நரம்புக்குள் சிறிது வலி. காலில் விட்டு விட்டு நரம்பை சுருட்டும் வலி. படுக்கையில் காலை அசைத்துக்கொண்டே இருக்கவேண்டும். கால்வலி தாங்காமல்



கண்களில் ஜலம் ததும்பும். காப்பி சாப்பிட்டால் சற்று சமனம். பிறகு உள்ளங்கால் சிவந்து வீங்கும். காலை கீழே வைக்கமுடியாது. அழுத்திவைத்த பிறகு வலி சிறிது சாதகம். காலை எடுத்து திரும்பவைக்கும்போது வலி, சிலநாள் கழித்து வலதுகால் வீங்கி வலிக்கும். அதிக தொந்தரவு கொடுக்கும்.

தூக்கம் :— தூக்கமின்மையால் திரும்பித் திரும்பி படுக்கவேண்டி இருக்கும்.

ஜுரம் :— முள்ளந்தண்டுப்புறம் அடிக்கடி சில்லிப்பு இருக்கும். தலை பொட்டுகள் சுடும். கன்னங்கள் பத்தி எரியும். நெருப்படியில் இருந்தாலும்கூட படுக்கப்போகும்போது குளிர்வந்துவிடும். காலிலிருந்து முள்ளந்தண்டு வழியாக சில்லிப்பு ஓடும். கால்களை அசக்கினால் சில்லிப்பு அதிகரிக்கும். குளிருடன்கூட வேர்வையும் இருக்கும்.

அனுபவக் குறிகள் :—

யானைக்கால் வீக்கம், க்ஷயரோகத்துடன் கூடிய குஷ்டம். கிரந்தியினால் மூக்கு அரிப்பு, ஜுரம், அதிக பாதரஸம் சம்பந்தமான இரத்தசோகை, கிரந்தி, கிரந்திப் புண்கள், கைகால்களில் வலி, நாள்பட்ட வாயு இவைகளுக்குச் சிறந்தது.

பேதி, வாந்தி இவைகளை உண்டாக்கும். தோல் வியாதிகளுக்கு சிறந்தது.

அதிகம் கிரந்தியினால் நகங்கள் தடித்து இருக்கும் வியாதிகளில் ரொம்பவும் நன்றாக வேலை செய்யும். வயிற்றுக் குழியில் சூடு தென்படுவது இதன் முக்கியமான குறிகள். ஊளைச்சதையை இது குறைக்கவல்லது. ஆனால் சரீரம் குறையக் குறைய தசைகள் இறுகி கெட்டிப்படும்.

கண் வியாதிகளிலும், உடம்பு இளைப்பிற்கும் நல்ல மருந்து. துர்நாற்றம் வீசும் புண்களிலும், குழிப்புண்களிலும் ரொம்பவும் உபயோககரமாயிருக்கிறது.

சீழ் கோத்துக்கொள்வதால் ஏற்படும் ஜுரம், பித்த ஜுரம், வயிற்றுப்போக்குடன் கூடிய ஜுரம், கிரந்தியினால் ஏற்படும் ஜுரம் இவைகளுக்கு ரொம்பவும் உபயோகமாக இருக்கிறது.

இரவில் கண் தெரியாததற்கு இது ரொம்ப சிறந்த மருந்து.

முக்கிய வீரியம் :— 3x, 6, 30 — ஒன்றிலிருந்து ஐந்து சொட்டு வேளை ஒன்றுக்கு சாப்பிடவேண்டும்.

### அனுபவ கேஸ். :-

பெண் — 14 — 1957 — நாகை.

இதற்கு இடது பிரான்கியல் குழாயில் சளி பிடித்துக் கொண்டு 4 மாத காலமாக லேசான இருமல், மாலையில் குளிருடன் ஜுரம் முதலியன இருந்துவந்தது.

X–ரே படம் எடுத்துப்பார்த்ததில் க்ஷயரோகம் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் கோழை பரிசோதித்துப்பார்த்ததில் டி. பி. கிருமிகள் சரிவர தென்படவில்லை.

ஆதலின் கீழ்க்கண்ட சிகிச்சை கொடுக்கப்பட்டது.

தினம் 3 வேளை காலோட்ராபிஸ் லாக்டம் 6x வீரியத்தில் 5 சொட்டு விகிதம்.



வாரம் ஒரு முறை பாசில்லினம் 1000 வீரியத்தில் ஒரு வேளையும்.

இரண்டு நாளைக்கு ஒரு தடவை நம்மால் தயாரிக்கப்படும் 'டி. பி.' என்ற இன்ஜெக்ஷனும் கொடுக்கப்பட்டது.

நடுவே பல்ஸாடில்லா 10 M வீரியத்தில் இரண்டு டோசும் கொடுக்கப்பட்டது.

இரண்டு மாதம் பூர்ண சிகிச்சைக்குப்பிந்தி இன்று வரை பூர்ண குணம்.

ஆகார வகைகளும் புஷ்டியாகவும், ஜீரணிக்கக்கூடியதாகவும் கொடுக்கப்பட்டுவந்தது. இரண்டு மாதம் கழித்து X–ரே படம் பார்த்ததில் நன்றாக குணம் தெரிந்தது.

........

## 31. HYDROCOTYLE ASIATICA.

### (ஹைட்ரோகாடைல் ஏசியாடிகா)

தமிழ் பெயர் :— [வல்லாரைச்செடி]

இது சிறிய படரும் செடி. ஈரமைப்புள்ள தரைகளில் இந்தியா, தென் ஆப்பிரிக்காவிலும் காணப்படுகிறது.

### அலோபதிக் உபயோகங்கள்.

வெல்லாரின் என்ற எண்ணெய் சத்தும், உப்புக்கள், டானின் முதலியவைகளும் காணப்படுகின்றன.

இது டானிக், உஷ்ண சமனி, சிறுநீர் பிரியச்செய்யும். சிறுநீர் குழாயில் முக்கியமாக வேலை செய்யும். சிறுநீர்க் குழாயிலும், கருப்பையிலும் வீக்கத்தை உண்டாக்கி தோலிலும் அரிப்பை உண்டாக்குகிறது. நாள்பட்ட தோல் வியாதிகளிலும், கரப்பான், கிரந்தி அரிப்பு, சோரியாசிஸ், கிரந்திப் புண்கள், யானைக்கால் வீக்கம், கிளாண்டு வீக்கம், குஷ்டம் முதலியவைகளிலும் பிரயோசனப்படுகிறது.

தாருதி தைமாக் எழுதுவதாவது:— குஷ்டரோகிகளுக்கு இம்மருந்தை கொடுத்ததும் முதன் முதலில் தோலில் ஒரு உஷ்ணமும், சுணை ஏற்படுகிறதுமாதிரி ஒரு தோற்றமும் ஏற்படுகிறது. பெரும்பாலும் அது கால் கைகளில்தான் ஏற்படும். சில நாட்களுக்குப்பிறகு உடல் முழுவதும் கதகதப்பும் ஏற்படும். சிறு இரத்தக் குழாய்களில் இரத்தம் அதிகமாகப் பரவும். ஒருவார டயத்திற்குள் பசி அதிகரிக்கும். படிப்படியாக தோல் மிருதுவாகி தடிமனாக தோல் உதிர்ந்து தோலின் இயற்கைத்தன்மையை அடைகிறது.

டாக்டர் நட்கர்ணியின் அபிப்பிராயப்படி நரம்புத் தளர்ச்சிக்கான டானிக்காகவும், உன்மத்தத்திற்கும் கொடுத்து உபயோகப்படுத்திவருகிறார்கள்.

ஆயுர்வேதிக் உபயோகங்கள்:— சரகர் அழுகும் புண்களுக்கும், வயிற்று ரோகங்களுக்கும் நல்லது என்று சொல்லுகிறார். சுசுருதர் ஞாபகசக்தி அதிகரிக்கவும், தீர்க்காயுசுக்கும் நல்லது என்று சொல்லுகிறார். மற்ற ஹிந்து வைத்தியர்கள் மஞ்சட்காமாலை, குஷ்டம், தோல் வியாதிகள், கரப்பான், சிபிலிஸ், வெட்டை, வெள்ளை,



ஜுரம், யானைக்கால், நீர்பிரிக்கும் மருந்தாகவும், டானிக்காகவும், நரம்புத்தளர்ச்சி, இந்திரியஸ்கலிதம் இவைகளுக்கு சிறந்ததாகவும், வயிற்று கோளாறுகளுக்கும் இதன் இலையையும், சாறையும், உபயோகப்படுத்திவந்தார்கள்.

## ஹோமியோபதிக் உபயோகங்கள்:—

டாக்டர் பாயுலு என்பவர் முதன்முதலாக இதைக் கண்டுபிடித்து உபயோகப்படுத்திவந்தார் அவர் முதன் முதலில் குஷ்டத்துக்கு உபயோகப்படுத்திவந்தார்.

மெட்டீரியா மெடிகா:—

மனது:— மனக்கவலை, தனியாக இருக்கப் பிரியம், பற்றில்லாமை, இதற்கு பரிணாமமாக, சந்தோஷகரமும், அதிக பேச்சும் ஏற்படலாம்.

தலை:— கிறுகிறுப்பு, பலஹீனம், தலைப்பாரம், தலையில் இருக்கும் நரம்பு முழுவதும் இழுத்தாற்போல் வலி, முன்பக்கம், நெற்றிப்புறம், நரம்புவலி, மண்டையின் பின்புறத்தில் நரம்பு முழுவதும், வலி, மண்டை பூராவும் வலி, பின் மண்டைப்புறம் இறுக்கினாற்போல் வலி.

கண்:— கண்கள் நிலையில்லாமை, கண்கள் குத்து வலி, கண்கள் உட்புற இரத்தம்போல் சிவப்பு ஆகுதல். பார்வை மந்தம். கண் பார்வை மங்கல், கூச்சல்.

காது:— இடதுகாது உட்காதில் வலி, வலதுகாதில் பிடிப்பு, இடது காதில் 'ஒய்' என்று சப்தம், அடைப்பு.

மூக்கு :— மூக்கு வீக்கம், மூக்கில் குறுகுறுப்பு. இடது நாசிகளில் அதிகம், மூக்கு அடைப்பு, ஜலதோஷம், மூக்கு வரட்சை, இரத்தம் வருதல்.

முகம் :— முகம் போதையில் இருப்பவன்போல் தோற்றம், இடது கன்னத்தில் வலி.

வாய் :— நாக்கு அடிப்புறங்களிலும், இடது மேல் புறங்களிலும் வெள்ளைப் புள்ளிகள். பேசும்போது பேச்சில் தடங்கல். அடி தொண்டையின் உட்புறம் சிவப்பு; விழுங்குவது சிரமம், ஆகாரம் சாப்பிட்டால் அதிகரிக்கும். தொண்டை ப்யூகஸ் சதைகள் எல்லாம் சிவந்து இருத்தல், கொஞ்சம் அதிகரித்தல். ருசி கசப்பாகவும், கொழகொழ வென்றும் இருக்கும். காலையில் அருசி.

தொண்டை :— டான்சில்ஸ் சிவந்து அன்னக்குழாயில் சுருக் சுருக் என்று குத்து வலி, அன்னக்குழாய் வறண்டு உருத்தும்.

வயிறு :— ஆகாரத்தில் வெறுப்பு, பசியின்மை, பிறகு கடுமையான பசி, புகை பிடிப்பதில் வெறுப்பு, அடிக்கடி புளிச்ச ஏப்பம், குமட்டல், வயிறு வீக்கம், வயிற்றில் இறுக்கிறாற்போல் வலி. வயிற்றில் காற்றெல்லாம் உருண்டையாகி பந்துபோல் ஆகிவிட்டதாக தோற்றம். வயிற்றில் சங்கடம், வயிற்றில் உஷ்ணம், குச்சிபோல் நீளுவது போன்ற தோற்றம், அடி வயிறு பல இடங்களில் காற்று ஒப்புஸம், குடலில் கடுமையாக இறுக்கும் வலி, ஒவ்வொரு ஐந்து நிமிஷத்திற்கும் வலி. பெருங்குடலில் நடுமேல் பாகத்தில் வலி அதிகம். இறுக்கிப்பிடித்தாற்போல் அதிகவலி. எல்லா அவயவங்களும் ஓடுவதுபோன்ற தோற்றம். ஈரலில் மேல்பாகத்தில் வலி, ஈரலில் தடைஇருப்பது போன்ற வலி.



மலம் :— ஆஸனவாயில் கனம், ஆஸனவாய் எரிச்சல், அரிப்பு, மலம் கருப்பாகவும், வறண்டும், மலம் தாராளமாகவும், பிரியும். மலம் பிரிவதற்கு ப்ரயோஜனமில்லாத பிரயாசை.

சிறுநீர் :— மூத்திரக்காயில் குறுகுறுப்பு மூத்திரப்பையில் இறுக்கம், அடிக்கடி சிறு நீர் பிரிய இச்சை சிறுநீர் குழாயில் உறுத்தல், சிறுநீர் அதிகரித்தல், சிறுநீர் குளிரவைத்தால், (Brown) பழுப்பாக மாறும். கலங்கலாகவும், கசண்டுடனும் இருக்கும.

ஆண்குறி :— விதை காய்களில் இழுக்கும் வலி. நபும்ஸகத்துவம், சம்போகம் பிடிக்காது, சம்போகத்தில் இச்சையின்மை, பிராஸ்டேட் கோளங்களில், கனம்.

பெண் ஜனனேந்திரியம், யோனிக்குழாய், யோனி கருப்பையின் மேல்புறம் எல்லாம் சிவப்பு, யோனிக்குழாயின் அடிப்புறத்தில் உஷ்ணம். யோனிக்குழாய் வாய்ப்புறம் அரிப்பு, அதிக வெள்ளை படுதல், சினைப் பாகங்களில் வலி. கருப்பை முழுவதும் வலி. கருப்பையில் கனம். கருப்பையினுடைய முழுப்பாகங்களில் பிரஸவமாதிரி கடுமையான வலி.

சுவாசங்கள் :— அடித்தொண்டையில் குத்தும் வலி, தொண்டை காற்றுக் குழாயில் வரட்சை, சப்தப் பையின் கபாடங்களில் வரட்சை, சப்தம் பலஹீனம், பேசுவதுகூட அசதி உண்டாக்கும்.

காற்றுக்குழாயில் தொண்டைச்சளி ஏற்பட்டு சிரமப் படுதல், மூச்சு விடுதல் சிரமம். மார்பில் அழுத்தும் வலி, திடீரென்று மறைந்து திடீரென்று வரும்.

இருதயம் :— ஹிருதய வலி; இருதயத்தில் இறுக்கும் வலி, நாடி மிருதுவாகவும், சரியாகவுமிருக்கும், முகத்தின் பல பாகங்களிலும் உஷ்ணம் வீசுதல். இருதயத் துடிப்பு நிதானமில்லாமல் அடிக்கும், நாடி பலமாகவும், பூர்ணமாகவுமிருக்கும்.

கழுத்தும் முதுகும் :— இடது பக்கத்து தோள்பட்டியில் நாள்பட்ட வாயுவலி திரும்ப உண்டாகும். அழுத்தினால் அதிகரிக்கும், இடுப்புப் புறங்களில் சிராய்த்த வலி, மூத்திரக்காய் பாகங்களில் தடைபெற்ற உணர்ச்சி.

காலும் கைகளும்:- முன்கையிலும் கால்களிலும் சுருங்கும் வலி. கைகால்கள் நீட்டிக்க அடங்காத ஆவல் எல்லா மூட்டுக்களிலும் வலி. இடதுபக்கம் வலி அதிகம். எல்லாத் தசைகளிலும் வலி. எலும்பின் உள் வென்னீர் ஓடுவது போன்ற உணர்ச்சி.

கைகள் :— தோள்பட்டையின் தசைகளில் ஓச்சல். வலதுமுன்கைகளில் சுருட்டுவதுபோன்ற மரமரப்பு. விரல் மூட்டுகளில் வலி.

கால்கள் :— நடை நிதானமில்லாமல் இருத்தல். நிற்க முடியாது. இடுப்புகளில் குத்தும் வலி. தொடை தசைகளில் அசதி. கீழ்கால் ஆடும் சதையில் இழுக்கும் உணர்ச்சி.



பொது :— விழித்தவுடன் தசை முழுவதும் சிராய்த்த வலி, கால்கள் மார்பு தசைகளில் ஓடும் வலி. அநேக தசைகளில் இழுக்கும் வலி. அசதி, கனதி, சோம்பல், அலுப்பு இவைகளுடன் கூடிய அசதி. உடம்பிலேயே அலுப்பு அதிகம். ஒரு காரியத்துக்கும் உதவாமை.

தோல் :— செதில்மாதிரி எழும்பின வரப்புகள்கூடிய தோல் புள்ளிகள். கால்களில் மஞ்சள் புள்ளிகள். எரிசிபிலிஸ் சிவப்பு. இடதுகழுத்து, இருகைகள், கண் இமைகளில் சிவப்பு புள்ளிகள். உள்ளங்காலில் காதுமாதிரி உருவமுள்ள சிவந்த புள்ளி. அந்த இடத்தில் குழிந்து இருக்கும். நடப்பது வலிக்கும். தொடை, கைகால், முதுகு, மார்பு. கழுத்து முகம் இவைகளில் சிவந்த புள்ளிகள் அரிப்பு, ஏராளமான வியர்வை. வேர்க்குரு மாதிரி சினைப்புகள். அடிவயிற்றில் செபபுள்ளிகள், மார்பில் கொப்புளங்கள்; முகத்தில் பருக்கள். பல இடங்களில் சுருக்கென்று குத்துதல். அரிப்பு, மூக்கு நுனியில் அரிப்பு

தூக்கம் :— கொட்டாவியும், ஆயாஸமாக படுக்கையும், பகலில்கூட தூக்கம், ஆழ்ந்த சொப்பனமில்லாத தூக்கம். தூங்கும்போது ஓயாமல் சொப்பனம். காலையில் அருசி.

ஜுரம் :— பிற்பகலில் நடுக்கல் கைகால்களில் சில்லிப்பு, நாடித்துடிப்பு மாறுமல் ஜுரம் வருப்போல் உடல் நிலை. இடது கால், கை, பாதம் முன்னங்கை இவைகளில் ஜில்லிப்பு, தேய்த்துவிட்டால் தேய்க்கும்போது சமனம், உஷ்ணம தோல், கால் எலும்புகள், இடது (அடிக்கால் எலும்பு) டிபியா முகத்தின் பாகங்களில் உஷ்ணம் வீசுதல், ஏராள வியர்வை.

அனுபவ குறிப்புகள் :—

அனேகஹோமியோபதியர்கள் கீழ்கண்டவியாதிகளில் ஹைட்ரோகோடைல் சிறந்தது என்று கண்டிருக்கிறார்கள். இரத்த சீதபேதி, மஞ்சட்காமாலை, வெட்டை, நீர் சுரப்பு, ஜுரங்கள், குஷ்டம், இரண்டாவது கிரந்தி நிலை, யானைக் கால் வீக்கம், அவயவத்தை வெட்டிய பிறகு ஏற்படும் அழுகல் புண், முகப்பருக்கள், கவுட், ஸ்திரீகளின் வெள்ளை ஒழுக்கு, எல்லா தோல் வியாதிகள், கருப்பையின் வீக்கம், யோனிக்குழாய் அரிப்பு.

தோலும், பெண் ஜனனேந்திரியமும் இம் மருந்தினால் அதிகமாக தாக்கப்படுகிறது. நரம்புகள் நால், ம்யூகஸ் சவ்வுகள் இவைகளும் கடுமையாக பாதிக்கப்படுகின்றன.

தோல்சதை அதிகமாக தடித்திருக்கும் வியாதிகளிலும் செதில்களாக உரியும் தோல் வியாதிகளிலும் வரம்பு கட்டிக் கொண்டு இருக்கும், வட்டவடிவமான புள்ளிகள் உள்ள தோல் வியாதிகளிலும் இம் மருந்து அதிகமாக வேலை செய்கிறது. தாங்காத அரிப்பு. உள்ளங்கால்களில் அதிகம். யானைக்கால் வீக்கம், கிரந்தி வியாதிகள் இவைகளில் ஏராளமான வியர்வை.

சாதாரணம் அல்லது கிரந்தி சம்பந்தமான வாய் புண்களில் நிகரற்ற மருந்து. இது ஒரு பெரிய டானிக்காக ஞாபகசக்தியை அதிகப்படுத்தவும், உடல்சக்தியை அதிகப்படுத்தவும், உபயோகப்படுகிறது. ஆண் தன்மைக்குறைவிற்கும், விரை வீக்கத்திற்கும் சிறந்த மருந்து.

முக்கியவீரியங்கள்:- 3x, 6x, 12x. இதிலிருந்துஏற்படும் சத்தை இன்ஜெக்ஷனாக கொடுக்க மிகவும நன்றாக வேலை செய்யும்.

---



இது அநேகவியாதிகளை குணப்படுத்துவதாலும், நமது அனுபவத்தில் அநேக வியாதிகளை சௌகரியம் செய்து விட்டதாலும் இங்கு எல்லா விபரங்களை விவரிக்க இடம் போதாததால் விவரிக்காமல் விடுகிறோம்.

---

## 32. CASSIA SOPHORA.

### காஸியா ஸோபோரா.

### (தீக்கொன்றை)

இது இந்தியாவின் சகல பாகத்திலும் வளரும் மரம்.

இதன் பூக்கொத்து செந்தழல்மாதிரி தென்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது.

இதில் கிரிஸோபானிக் ஆசிட் என்ற சத்துப்பொருள் அடங்கியிருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அலோபதியில் இதை பாம்புக்கடிக்கும், வெட்டைச் சூட்டிற்கும் உபயோகப்படுத்துகிறார்கள். ஸரபு வீக்கத்திற்கும கஷாயத்தை உபயோகிக்கிறார்கள்.

இந்து வைத்தியர்கள் இதை மலக் கிருமிகளுக்கும், மதுமேகத்திற்கும், குடல் நோயுக்கும் சிறந்ததென்று கருதுகிறார்கள். சகலமேகமும் போமென்று சொல்லுகிறார்கள்.

### ஹோமியோபதி உபயோகம்.

ஹோமியோபதி முறையில் இதை அனுபவ பூர்வமாக பலர் உபயோகித்து குணம் கண்டிருக்கிறார்கள். ஆசிரியரின் சுமார் 20 வருட அனுபவத்தில் கீழ்க்கண்ட வியாதிகளில் மிகச் சிறந்தவை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சீழ்வடிந்துகொண்டு பொருக்குதட்டிக்கொண்டு வெடிப்புடன் கூடிய தோல் வியாதிகள் :—

அழுக்குத் தேமல் :— அரிப்புடன் கூடியிருக்கும். சொரியச் சொரிய வெண்மையான செதில்கள் உதிரும். சொறி சிரங்குகள் அதிகத் திணையுடன் கூடிய தோல் வியாதிகள்.

பேதி, துர்நாற்றத்துடன் கூடிய இலகிய மலம்.

காலையில் எழுந்தவுடன் பித்த மயக்கம், வாயில் சிறு கசப்பு.

அடிக்கடி சிறுநீர் பிரிதல். எரிச்சல் முக்கிய வீரியம் 1x, 3x.

---

## 33. ARGEMONE MEXICANA.
### அர்ஜிமோன் மெக்ஸிகானா.
### (பிரும்மதண்டி)

இது ஒரு அமெரிக்கன்செடி யாயினும் இந்தியாவில் வந்து குடியேறிவிட்டது.

இது எங்ஙனும் மானாவாரியாக வளருகிறது. ரோட் ஓரங்களிலும் உபயோகமில்லாத தரிசு இடங்களிலும் இலைகள் முள்ளுடன் கூடி இருக்கும், பூக்கள் ரம்மிய மஞ்சள் நிறம்.

இதனுடைய மஞ்சள் நிறமான பால் இந்தியாவில் மஞ்சட்காமாலை, நீர்சுரப்பு, தோல்வியாதிகளில் உபயோகப்



படுத்தப்பட்டு வந்தன. இச்செடியின் கஷாயம் வெட்டைச் சூட்டைத் தணித்து சிறுநீர் பிரியவைப்பதற்காக உபயோ யோகப்படுத்தப்பட்டு வந்தது. அக்கி மாதிரியான தோல் வியாதிகளுக்கும், ஆறாத ரணங்களுக்கும் மேல் தடவி வந்தார்கள். இதனுடைய விதைகளில் லேசான மஞ்சள் கலர் எண்ணெய் கிடைக்கிறது. இந்த எண்ணெயை பழம் காலத்திய ஐரோப்பிய வைத்தியர்கள் இரத்தசீத பேதிக்கும் குடல் வியாதிக்கும் உபயோகப்படுத்தினார்கள். 30 முதல் 60 சொட்டு வரையில் இந்த எண்ணெயை கொடுத்தால் நன்றாக பேதிஆகிறது என்று தெரிவித்தார்கள்.

இதில் பெர்பெரின், புரோடோபின் என்ற சத்துக்கள் இருக்கின்றன இதில் மார்பின் சத்து கிடையாது.

இம் மருந்து ஆசிரியர் அவர்களால் ப்ரூவ் செய்யப்பட்டு அனுபோகத்தில் கொண்டுவரப்பட்டது.

ஹோமியோபதி மெட்டீரிகா மெடிகா :

மனது :— எந்த காரணமும் செய்ய பற்றில்லை.

தலை :— பொட்டுகளில் லேசான தலைவலி. ஒற்றைத் தலைவலி, மாதவிடாய்க்கு முந்தி வரும் தலைவலி, கடும் பித்தமான வாந்தியுடன் வலி. சற்று அசைத்தாலும் வலி அதிகரிக்கும். அதிகப் படிப்பினால் மூளைக்கு வேலை கொடுத்தாலும் அதிகரிக்கும். தலை மயக்கம், கிறுகிறுப்பு, அசதி ஆத்திரம் கண்களில் சினைப்புகள் திரைபோன்ற மறைப்பு வெண்கடுப்பு, மஞ்சள் நிறம் கண்ணிலிருந்து நீர் சுரத்தல், காலையில் தூங்கி எழுந்திருக்கும்போது பீளை சாய்தல், பித்த காடராக்ட்.

நாசி :— கடுமையான ஜலதோஷம், நாசியிலிருந்து சளி மஞ்சள் நிறமாக வருதல், நாசித் துவாரங்கள் ரணமாயிருத்தல்.

வாய் :— துர்நாற்றம், கசப்பு, நாக்கு வெண்மை படிந்திருத்தல், சதா எச்சில்ஊறல் அல்லது வறட்சி, நாக்கு மஞ்சளாய் இருத்தல்.

வாந்தி :— ஆகாரத்தில் வெறுப்பு, வாந்தி பித்தமான வாந்தி, குமட்டலுடன் கூடிய வாந்தி.

வயிறு :— தினம் சாப்பிட்டு இரண்டுமணி நேரத்திற்கு பிறகு வரும் வயிற்று வலி. வயிற்றில் காலையில் சங்கடம், வயிற்றில் கல்போட்டதுபோல் உணர்ச்சி, பித்தப்பை பாகத்தில் வலி.

சிறுநீர், மலம் :— நீரில் குத்தல், எரிச்சல், நீர் பிரியும்போது மெதுவாகப் பிரியும். வேகமாக வராது. சில சமயங்களில் இரட்டைதாரையாகப் பிரியும். ஆரம்பத்தில் வெள்ளைபடும். சிறுநீர் பிரியும்போதும் புணைந்து முடியும்போதும் எரிச்சல். நீடித்த கிளீட்.

மலம் தீய்ந்து காய்ந்து நிற்கும். பேதி வயிற்றுவலி இல்லாமல் மஞ்சளாக கரைத்த தண்ணீர் மாதிரி பேதி ஏராளமாகப் போகும். சீதபேதி மலம் பிரியும்போதும் முடியும்போது ஆஸனவாய் கடுப்பு.

மூலம் :— உள்மூலம் இரத்தமூலம் எரிச்சலும் கடுப்பும், மலம் பிரியும்போதும் முடியும்போதும் ஆஸனவாய் கடுப்பு.



ஜனனேந்திரியங்கள் :– மாதவிடாயின்போது தலைவலி, கடுமையான வயிற்றுவலி.

விதை வீக்கம், ஹைட்ரோசில் (நீரண்டம்) சிறுநீர் பிரியும்போது விதைகளில் வலி, இந்திரியம் பலவீனம், நீர்த்துப்போகுதல்.

கைகால்கள் :— ஓயாமல் கடுப்புவலி, இரவு நேரங்களில் குதிகால்புறம் வலி. கால் முழுவதும் அடித்துப் போட்டாற்போல் கால்கை முழுவதும் வலி.

ஜுரம் :— தினம் சாயங்காலம் குளிருடன் கூடவரும் ஜுரம், பித்தமான கடுமையான தலைவலியுடன் கூடவரும் ஜுரம், ஜுரத்தில் பித்தமான வாந்தி.

தோல் :– சீக்கிரமான ஆருதரணங்கள், முகப்பருக்கள் அக்கிமாதிரி சீழ்பிடிக்கும் சொறி சிறங்குகள். இதிலிருந்து தயாரிக்கப்படும் அர்ஜிமோன் என்ற இன்ஜெக்ஷன் மிக சிறந்த முறையில் மேற்சொன்ன வியாதிகளுக்கு உபயோகப்படும்.

காடரூக்ட், கார்னியா என்ற கருவிழியில் ஏற்படும் வெள்ளை பூக்களுக்கும் (Corneal Opacity) இவைகளுக்கு கண்ணில் போட்டுவர மிகச்சிறந்த மருந்து. இதற்காக எங்கள் லாபரட்டரில் கண்ணுக்குப் போடுவதற்கு ஆசிரியரால் தயாரிக்கப்படுகிறது. இது சினனேரியா மாரிடிமா என்ற அமெரிக்கன் மருந்தைவிட சிறந்தது.

முக்கிய வீரியங்கள் :— 3x, 6x, 30x.

## 34. BLATTA ORIENTALIS.

### ப்ளாட்டா ஓரியண்டாலிஸ்.

தமிழ் பெயர் :— (கரப்பான்)

இது இருட்டில்வாசம்செய்யும் ஒரு தொந்திரவுபிடித்த பூச்சி. இது ஒரு முக்கியமான குறிக்குத்தான் உபயோகப்படுகிறது.

ஆஸ்த்மா :— கனத்த சரீரங்களுக்கு வரும் ஆஸ்துமா. இதில் இழுப்பு, காசம். அடிக்கடி ஜலதோஷம், இருமல். நீர்குறைவாக பிரிந்து உடல் முழுவதும் ஒப்புஸம்.

முக்கிய வீரியம் :- 1x, 3x.

---

## 35. LEUCAS ASPERA.

### லூகஸ் ஆஸ்பெரா.

தமிழ் பெயர் :— (தும்பை)

இது ஒரு சிறிய செடி இந்துக்களால் மிகவும் போற்றப்படுவது. இந்தியா முழுவதும் வளருவது. இதன் வெள்ளைப் பூக்கள் இந்துக்களால் பூஜைக்கு பிரயோசனப் படுத்துவது. இதனுடைய வாசனை சாறுப்பிழிந்தால் தனிப் பட்ட ரகமானதாகவும் (Strong) தீர்க்கமாகவும் இருக்கும்.

அலபதிக் உபயோகங்கள் :— சோப்ரா அவர்களின் அபிப்பிராயப்படி பூச்சி கொல்லும் மருந்தாகவும், ஜலதோஷத்திற்கும் சொரி சிரங்குக்கும், பாம்புக் கடிக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.



கபத்தை வெளிப்படுத்துவதற்கும், சிலசமயம் மஞ்சட் காமாலைக்கும் உபயோகப்படுகிறது.

ஆயுர்வேத உபயோகங்கள் :— இந்து வைத்தியர்களும் இரத்தசீதபேதி, இருமல், மிரூகண்சதையில்கோளாறுகள், மஞ்சட்காமாலை, வயிற்றுக் கிருமிகள், தோல் வியாதிகள், மாதவிடாய் தங்கி இருத்தல், ஈரல் ஸ்ப்ளீன் வீக்கத்துடன் கூடிய விட்டு விட்டு அடிக்கும் ஜுரம், பசியின்மை, பித்தக் கோளாறுகள், தொண்டைச் சளி, ஜலதோஷம், பூச்சிக்கடி, பாம்புக்கடி இந்த வியாதிகளுக்கெல்லாம்.

ஹோமியோபதி உபயோகங்கள் :— அநேக ஹோமியோபதியர்கள் இம் மருந்தை மேற்சொன்ன ஆயுர்வேதிக் உபயோகங்களிலேயே மிகச் சிறந்தது என்று கருதுகிறார்கள். பாம்புக்கடியில் கடிவாயில் இதைவைத்துக் கட்டிவிட்டு உள்ளுக்கு பதினைந்துசொட்டுவீதம் ஒவ்வொரு பதினைந்து நிமிஷத்திற்கு ஒருதரம் கொடுக்கவேண்டும்.

தேள்கடியில் இந்த மருந்தை மேலுக்கும் உள்ளுக்கும் கொடுத்தால் நன்றாக உபயோகப்படுகிறது. இதை இன்ஜெக்ஷன் மூலமாக தேள் கொட்டிய இடத்தில் கொடுத்தால் சீக்கிரம் அனுகூலம் ஆகுமென்பது அனுபவ பூர்வமான உண்மை.

ஆஸ்துமா, மூக்குச்சளி, பித்தக் கோளாறு, முறைக் காய்ச்சல் இவைகள் சௌகரியமாகும்.

இது மஞ்சட்காமாலையை சௌகரியம் பண்ணுவதில் நிகரற்ற மருந்து.

இரத்த சீதபேதிக்கும் இது மிகவும் சிறந்த மருந்து. ஸ்ப்ளீன் வியாதிகளில் ஜுரக்கட்டிக்கு இது நிச்சயமான மருந்து. முக்கிய வீரியங்கள் :— 1x, 3x, 6x.

# 36. TINOSPORA CORDIFOLIA.

## டினஸ்போரா கார்டிபோலியா.

*தமிழ் பெயர் :—* (சீந்தில்கொடி)

......

அலபதிக் உபயோகங்கள் :— வேரிலும் அடித்தண்டு களிலும் கசப்பு பதார்த்தமும், ஒரு மாவு பதார்த்தமும் கிடைக்கின்றன.

பச்சைச்செடி காய்ந்தசெடியைவிட மிகவும் உபயோக கரமானது. இதை டானிக்காகவும், உஷ்ணத்தை தணிப் பதற்காகவும் முறைக்காய்ச்சலை தடுப்பதற்காவும் அஜீர்ணத் திற்கும், அடிக்கடி ஜுரம் ஏற்படுவதால் வரும் பலஹீனத் திற்கும், வீரியக் குறைவிற்கும் நல்ல மருந்து.

ஜுரக் கட்டியுடன் கூடிய ஜுரத்திற்கு சிறந்தது. நாள்பட்ட கிரந்தி வாய்வு, குஷ்டம், சில தோல் வியாதிகள் மஞ்சட்காமாலை இவைகளுக்கு உபயோகப்படும். இதன் தண்டிலிருந்து எடுக்கப்படும் சீந்தில் உப்பு ஆண் வீரிய குறைவிற்கும் ஜலதோஷ ஜுரத்திற்கும், சிறுநீர் குழாயின் வியாதிகளுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

டாக்டர் நட்கர்னியின் அபிப்பிராயப்படி கொயினாவை விட மலேரியாவுக்கு சிறந்தது என்று கருதப்படுகிறது.

சோப்ரா இதன் வேர் அடித்தண்டிலிருந்து எடுக்கும் கஷாயம் பலஹீனப்படுத்தும் வியாதிகளிலும், முறைக் காய்ச்சலிலும், அஜீர்ணத்திலும் டானிக் மாதிரி உபயோகப்படுகிறது என்று சொல்லுகிறார்.



ஆயுர்வேதிக் உபயோகங்கள் :— சரகர் நாட்பட்ட ஜுரத்திற்கும், மஞ்சட்காமாலை, பித்தவாந்தி மற்றும் சில வியாதிகளுக்கும் உபயோகப்படுத்தலாமென்று சொல்கிறார் பிரஸவத்திற்குப் பிறகு தாய்ப்பாலை சுத்தப்படுத்துகிறது என்று சொல்லுகிறார். வாக்பட்டர் வெட்டைக்குச் சிறந்த மருந்து என்கிறார். பவப்பிரகாசர் மஞ்சட்காமாலைக்கும் நாள்பட்ட ஜுரத்திற்கும் நல்ல டானிக் என்கிறார். சக்கர தத்தர் தோலில் ஏற்படும் தடிப்பிற்கும் (அர்டிகேரியா) குஷ்டம் யானைக்கால், ஜுரங்கள் இவைகளுக்கு தேவலாம் என்கிறார்.

பங்கசேனர் வயிற்றில் காற்று ஓப்புஸத்தோடு கூடிய வாந்திக்கும், ஹிருதய படபடப்புக்கும் சிறந்தது என்று சொல்லுகிறார்.

பொதுவாக இந்துக்கள் இதை இந்தியன் கொய்னா என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மேலும் இதை சரீர பலம் கொடுக்கக்கூடிய டானிக்காகவும் தாகவறட்சைக் கும், வெட்டைச்சூட்டிற்கும், இருமல் வாய்வு, மஞ்சட்கா மாலை, ஈரல் வேலை செய்யாமை, ஸ்பிளீன் வியாதி, வாந்தி, மூலம், மூத்திரக்கடுப்பு, இருதயப்படபடப்பு இவைகளுக் கெல்லாம் இது உபயோகமானது என்று சொல்லுகிறார்.

ஹோமியோபதிக் உபயோகங்கள் :— இதுவும் முறைப்படி ப்ருவ் செய்யப்படவில்லை. ஆனால் பல ஹோமியோபதியர்கள் கீழ்கண்டவியாதிகளுக்கு சிறந்தது என்று அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள்.

நாள்பட்ட லேசான ஜுரங்களில் ஏற்கனவே வெட் டையும், இந்திரியஸ்கலிதமும் இருந்திருந்தால் அதற்கு

## ஹோமியோபதிக் உபயோகங்கள்.

பெங்கால் டாக்டர் B. P. பிஸ்வாஸ் அவர்கள் இதன் இலையை ப்ருவ் செய்தார். அவருடைய ப்ரூவிங்கைக் கொண்டு கீழ்கண்ட வியாதிகளுக்கு உபயோகிக்கலாம் என்று தெரியவருகிறது.

ஜலதோஷம் சளியுடன் கூடிய ஜுரங்களுக்கு இது ஒரு சிறந்த மருந்து. உடம்பில் நீர் சுரப்பு, இரத்த மூலத்திற்கும் நல்லது.

மலச்சிக்கலும், மலப்போக்கும் மாறி மாறி உண்டாவதற்கு இது ஒரு சிறந்த மருந்து.

## குறிகள்.

உச்சரிப்பில் நோயாளிக்கு தப்பிதம் ஏற்படுகிறது. சாயங்காலம் 4 மணி முதல் 8 மணி வரையில் தலைவலி, சாயங்காலங்களில் உச்சந் தலையில் எரிச்சல், ஏதாவது சாப்பிட்டால் சமனம். சாயங்காலத்தில், கண்களிலிருந்தும், உஷ்ணம் ஆவிபோல் பறக்கும். சாப்பிட்ட பிறகு எல்லாம் சமனம்.

வாயிலிலிருந்து அதிகம் எச்சல் ஊறல், வயிற்றில் சில வரைக்கோளாறுகள். அடிவயிறு உப்புஸம். அபான வாயு பெரும் சப்தத்துடன் வெளிப் போகுதல். பிற்பகல் அதிகம் அடிவயிற்றில் காற்று உண்டாகிறதுபோல் தோற்றம்.

நாடி :— மிருதுவாகவும், பூரித்தும் இருக்கும். முதுகிலும், பின் இடுப்பிலும் சிறிது நேரங்களில் இடுப்புவலி இருக்கும். இவைகள் சாயங்காலம் 4 மணிக்கு அதிகரிக்கும். பூரித்த உறுதியான ஒழுங்கான நாடி இம்மருந்தின் முக்கிய அறிகுறி.



எல்லாவித நீர் சுரப்புகளிலும் இதுஒரு சிறந்தமருந்து. நீர் சுரப்புடன் நாள்பட்ட ஜுரத்திற்கும் அதுவும் குழந்தைகளுக்கு முக்கியமாக இது சிறந்த முறையில் உபயோகப்படும். நீர் சுரப்புடன் உடலில் எல்லா பாகங்களிலும் அல்லது சிற்சில பாகங்களிலும் மட்டும் இருக்கலாம்.

கண்களின்மேல் ரப்பைகள் :— நீர் சுரந்து பருத்து இருக்கும். ஜுரம் விடாமல் அடிக்கும். சிறுநீர் மிகவும் குறைந்திருக்கும்.

ஜுரத்துடன்கூட கால்கைகள் முகம் இவைகள் வீங்கி இருக்கலாம். குழந்தைகளுக்கு ஜலதோஷம், ஜுரங்களில் இம்மாதிரி இருந்தால் இது உபயோகப்படும். ஜுரங்களில் மலம் போக்குடன்கூட மலச்சிக்கலுமிருந்தால் இது ஒரு மிகவும் சிறந்த மருந்து.

ஹிருதயவியாதிகளால் ஏற்படும் நீர் சுரப்பிற்கும் இது நல்ல மருந்து.

பெர்ரி பெர்ரி என்னும் வியாதியில் இது ரொம்பவும் சிறந்தமருந்து. (வைடமின் $B_1$ குறைவினால் பெர்ரி பெர்ரி வருகிறது. ஆகையால் பெர்ரி பெர்ரி வைடமின் பி சாப்பிட்டால்தான் குறைகிறது என்று அலபதிக் அறிவிலிகள், பிதற்றுகிறார்கள். அந்தோ மடமை!)

கண்கள், முகம், கால், கைகள் சிலசமயம் முழு உடலும் வீங்கி இருக்கும். சில சமயம் கால் மாத்திரம் வீங்கி இருக்கும்.

சிறுநீர் மிகவும் குறைந்து ஹிருதயம் தாக்கப்படும் இந்த சமயத்தில் டிஜிடாலிஸ் என்ற மருந்தைப்போல்

வேலை செய்யும் ஆனால் டிஜிடாலிஸ்ஸின் நாடி ஒழுங்காக இருக்காது. ஆனால் ஈகிலின் நாடி ஒழுங்காக இருக்கும். இதுதான் வித்தியாசம்.

இன்புளுயன்சா ஜுரத்தில் ஜுரம் விடாமலும், முகம், கண் இவைகளெல்லாம் வீங்கி இருந்தாலும் இது குணப்படுத்தும்.

உடம்பில் ஏதாவது வீக்கம் இருந்ததானால் ஜலதோஷ, ஜுரம், தொண்டைச்சளி, நிமோனியா ஜுரங்களில் சௌகரியம் ஏற்படும். ஈரல் ஸ்ப்ளீன் வியாதி இவைகளுடன் கூட நாள்பட்ட ஜுரங்களில் உடம்பில் கால்கள் வீக்கத்துடன் கூட முகம் கைகள் இவைகளில்கூட எரிச்சல் இருந்தால் இது உபயோகப்படும்.

வயிற்றில் காற்றுடன் கூடிய மலச்சிக்கலில் லைகோபோடியம்மாதிரி வேலை செய்யும்.

வயிற்றுவலி, அஜீர்ணம் மூலம் மலச்சிக்கல்களில் நக்ஸ்வாமிகா மாதிரி இது வேலை செய்யும்.

இந்திரிய பலஹீனத்திற்கும் நபும்ஸகத்திற்கும் இது ஒரு சிறந்த மருந்து.

இது ஸோரா தேகவகை குணப்படுத்தக்கூடியது. தோல் வியாதி, கடி, சொரி சிரங்கு இவைகளை சௌகரியப்படுத்தும் இதை தினம் சாப்பிட்டுவந்தால் ஆண் தன்மையை இழக்கச்செய்வதால் பழங்காலத்தில் சந்நியாசிகள் இதை சாப்பிட்டுவந்தார்கள்.



நாள்பட்ட மலப்போக்கு வயிற்றில் காற்று ஒப்புளத்துடன் வலி, சீதகம்கலந்த மலம் இவைகளுக்கு உபயோகப்படும்.

ஈகில்போலியா என்பது வில்வ இலை. இலைக்கும் பழத்திற்கும் ஒரே குணமானதால் இரண்டையும் உபயோகப்படுத்தலாம்.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x, 6x, 30x. 200.

## அனுபவ கேஸ்.

ஆண் : 45 — 1957. அ. மு.

நமது ஆசிரியரின் பார்வைக்கு இக் கேஸ் பிப்ரவரி 10-ம் தேதிவந்தது. கீழ்க்கண்ட குறிகள் காணப்பட்டன.

கால்கள் இரண்டும் முழங்கால்களுக்கு கீழே நன்றாக வீங்கியிருந்தன. அத்துடன் கடுப்பும் வலியுமிருந்தன.

சுரம் 103 F. மாலையிலும் காலையிலும் சற்றுக்குறைவாகவும் இருந்துவந்தது. பசியின்மை, சிறுநீர் குறைந்து மஞ்சள் நிறமாகவும் இருந்தது.

ஹிருதயத்துடிப்பு துரிதமாகவும், நிமிஷத்திற்கு 128-ம் இருந்தது.

தாகவரட்சை லேசான தலைவலி.

இவருக்கு வழக்கம்போல பிரியோனியா 200 வீரியத்திலும், கேட்ரம்ஸல்ப் 200வீரியத்திலும் கொடுக்கப்பட்டது. சற்றும் ஜுரம் குறையவில்லை.

3-வது நாள் ஜுரம் குறையாததுடன்கூட இருதய பாகத்தில் லேசான வலி தென்பட்டது. ஆகவே இருதயத்தை மறுபடியும் பரிசோதனை செய்துபார்த்ததில் இருதயக்கோளாறு ஒன்றுமில்லாவிட்டாலும்கூட படபடப்பு அதிகமாயிருந்தது. நாடியின் வேகம் ஜுரம் 101-க்கு வந்த பிறகும் 125-யிலேயே இருந்தது.

ஆதலின் இருதயத்திற்கு உகந்த மருந்தென ஈகில் மார்மலஸ் டிஞ்சர் 1x வீரியத்தில் 10 சொட்டு தண்ணீரில் கலந்து தினம் 6 வேளை கொடுக்கப்பட்டது.

இரண்டு நாளுக்குப் பிறகு சாப்பும் வடிந்து சுரமும் படிந்தவிட்டது. பிறகு பூர்ண குணம்.

---

## 38. CAESALPINEA BONDUCELLA.

### சீசல்பினியா பாண்டுசெல்லா.

தமிழ் :— (கழற்சிக்காய்)

......

சமுத்திரக்கரை ஓரமாக அதி உஷ்ணப் பிரதேசங்களில் முழுவதும் இது ஏராளமாக விளைகிறது. இதில் முள்ளுகள் போன்ற குத்தும் முனைகள் உண்டு.

அலபதிக் உபயோகங்கள் :—

விதையின் ஓட்டில் ஒரு கசப்புசத்து இருக்கிறது. விதையின் பருப்பில் கால்பாகம் எண்ணெயும் டானின் சர்க்கரை, அல்பினாய்ட் போன்ற சத்துக்கள் இருக்கின்றன.



இலையின் கஷாயம் நாள்பட்ட ஜுரத்துக்கு உபயோகப்பட்டுவருகிறது. விதைகள் அம்மாதிரியே நாள்பட்ட முறைக்காய்ச்சலுக்கும், பலஹீனத்திற்கும் உபயோகப் படுத்தப்படுகிறது. விதையிலிருந்து எடுக்கும் எண்ணெ முகத்திலிருந்து தேமலை மாற்றவும், காதிலிருந்து சீழ் வருவதை தடுக்கவும் உபயோகப்படுத்துகிறார்கள் மிகவும் பரிசோதனை செய்ததின் பேரில் பலஹீனத்திற்குத்தான் உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

### ஆயுர்வேத உபயோகங்கள்.

சொரி சிரங்கு, வயிற்றுவலி வாந்தி குடற்பூச்சிகள், குஷ்டம், நாள்பட்ட ஜுரம், பித்த வாய்வு, அம்மை இவைகளுக்கு உபயோகப்படுத்தினார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள்.

அஸாம் ராஜ்யத்தில் கௌரீபுரத்தில் இருந்த டாக்டர் குமாரி பட்டாசாரியர் என்பவர் இம் மருந்தை ப்ரூவ் செய்தார்.

நாள்பட்ட முறைக்காய்ச்சலுக்கு நல்லது என்று பல ஹோமியோபதியர்களின் அனுபவம்

### மெட்டீரியா மெடிகா

மனது :— மனத்தளர்ச்சி, உத்ஸாகமின்மை.

தலை :— ஜுரத்தின்போது இரண்டு பொட்டுகளிலும் கடுமையான வலி. அழுத்திப்பிடித்துக்கொண்டால், தலையை துணியால் இறுக்கிக்கட்டிக்கொண்டால் சாதகம்.

கண்கள் :— ஜுரம் ஆரம்பிக்கும்போது கண் சுடுவது போல் வலி. பச்சைத்தண்ணீரால் சற்று சாதகம். கண்கள் உள் குழிந்து இரத்தமில்லாமல் இருக்கும்.

நாசி :— மூச்சு உஷ்ணம். ஜுரத்தின்போது துரித மான சுவாசம்.

வாய் :— ஜுரத்தின்போது தாகவறட்சை. குளிர்ந்த தண்ணீருக்கு தாகம். முகம் சிவந்து இருக்கும்.

நாக்கு :— லேசான வெள்ளை மாசு படரும். இரத்த மின்மையால் வெளுத்த நாக்கு, நாக்கில் ஈரமையப்பு ஆனால் தாகவறட்சை.

வயிறு :— அடி வயிற்றில் களகளவென்று சப்தம். சில சமயம் சீதகத்துடன் கூடின தண்ணீரான மலம்.

ஈரல் :— ஈரலின் அடிப்புறம் வீக்கம். ஜுரத்திற்கு முந்தி சிலசமயம் லேசான வலி.

மலம் :— கெட்டியாக சிவப்பு நிறமாக இருக்கும். சில சமயம் மஞ்சளாக சீதகத்துடனும் இருக்கும்.

மண்ணீரல் :— மண்ணீரல் வீக்கம், தொட்டால் வலி.

ஜுரம் :— ஜுரம் வருவது ஒழுங்காக இராது. எப்போதுவேண்டுமானாலும் வரும். ஒரு சமயம் அதிகக் குளிராகவும் சிலசமயம் குளிர் குறைவாகவுமிருக்கும். பொதுவாக சிறிது குளிர், நடுக்கல் வியர்வை கொஞ்சநேரத்திற்குத்தான் இருக்கும். வியர்வை முகம் கழுத்து தோள்பட்டை, மார்பு இவைகளில் உண்டாகும் ஜுரம் 6 மணி நேரத்திற்குமேல் நீடிக்காது.



ஜுரம் காலையில் 8 மணி முதல் 10 மணி வரை அல்லது மாலை 2 மணி முதல் 4 மணிக்குள் ஆரம்பிக்கும்.

மாலையில் வரும் ஜுரத்திற்கு தாகம் இராது. காலையில் வரும் ஜுரத்தில் தாகம் இருக்கும்.

: ஜுரம் விட்ட பிறகு நோயாளிக்கு ரொம்பவும் பலஹீனம் இருக்கும். ஒருவேலையும் செய்யமுடியாது. பேசகூட பிடிக்காது. பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கொள்வார்.

வெந்த அரிசியும் கடினமான ஆகாரமும் மாமிசமும் சாப்பிட இச்சை. நீர்க்க ஆகாரம் சாப்பிட பிடிக்காது. குளிக்கவும் பிரியம் இராது.

தோல் :— தோல் வறண்டு அழுக்கு படிந்து கருப்பாகவும் இருக்கும். கொசுகடிமாதிரி சிறு சிறு கொப்புளங்கள் மாதிரி பிறகு மறைந்துவிடும்.

குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் பின் இடுப்புப்புறம் இழுத்தாற்போல் வலி.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x.

## 39. MORINDA TINCTORIA.

### மொரிண்டா டிங்டோரியா.

தமிழ் பெயர் :— நுணா

இது இந்தியா முழுவதும் வளரும் சிறிய மரம்.

### அலப்பதிக் உபயோகங்கள் :—

இதன் பட்டையை சாயத்திற்கு உபயோகப்படுத்தி வந்தார்கள்.

இதில் மொரின்டின் என்ற ஒரு சத்து இருக்கிறது. இதை டானிக்காகவும், நாள்பட்ட ஜுரத்திற்கும், போக்கு, இரத்தசீதபேதிக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள். இப்போது இது மருந்தாக உபயோகப்படுத்துவதில்லை.

தமிழ் வைத்தியர்கள் இதன் பட்டை கஷாயத்தை கரப்பான், கிரந்தி, வாய்வுமந்தம், மேகநீர் இவைகளுக்கு உபயோகப்படுத்திவந்தார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள் :—

ஆசிரியர் அவர்களால் இது கீழ்கண்ட முக்கியமான குறிகளுக்கு உபயோகப்படுத்தி வருகிறது.

பல ஹோமியோபதி டாக்டர்களும் தங்கள் அனுபவத்தில் இதுசரி என கண்டிருக்கிறார்கள்.

பித்தமான வாந்தி, ஒற்றைத்தலைவலி, தலைவலி காலையில் ஆரம்பித்து மத்தியானம் அதிகரித்து மாலையில் குறையும்.

கைகால்களில் மாலையில் குடைச்சல் சாயங்காலங்களில் தலை கிறுகிறுப்பு, நாக்கில் அதிக எச்சல் ஊறல், சாப்பிட்ட பிற்பாடு வயிற்றில் கல்விழுந்ததுபோல் கனம்.

நெஞ்சு எரிச்சல் :— சாப்பிட்ட 2 மணி கழித்து வயிற்றில் லேசான வலி.

தோல் :— தோல் வறண்டு அழுக்கு அடைந்து இருக்கும். சிறு சிறு ரணங்கள். சீழ் கோத்துக்கொள்ளும். சொரி சிரங்குகள். வெட்டையினால் மூட்டுக்கு மூட்டு வலி.

முக்கியமான வீரியங்கள் :— 3x, 30x.

---



## 40 VITEX NEGUNDO.

## விடெக்ஸ் நிகெண்டோ.

தமிழ் பெயர் :— கருநொச்சி.

இது ஒரு சிறிய செடி, இந்தியா முழுவதும் பரவி இருக்கிறது. முக்கியமாக அநேக உலோகங்களை சுத்தி செய்ய இதன் சாறை உபயோகித்து வருகிறார்கள். இதில் இரண்டு நிறங்கள் உண்டு. ஒன்று கருமை நிறமும், இன்னொன்று வெண்மைநிறமும் உண்டு. ஆனால் இரண்டிற்கும் மருந்து உபயோகம் ஒன்றுதான்.

அலபதிக் உபயோகத்தில் ஜுரத்தை சௌகரியம் பண்ணக்கூடியதாகவும், தேள் கடிக்கு கபத்தை இளக்குவதற்காகவும் உபயோகப்படுத்திவந்தார்கள்.

ஆயுர்வேத வைத்தியத்தில் வலி உள்ள வாயு வீக்கங்களுக்கு இலையை கசக்கிவைத்துக்கட்டுவார்கள். தலைவலிக்கு இலையை அரைத்து வைத்துக்கட்டுவார்கள்.

### ஹோமியோபதிக் உபயோகங்கள் :—

ஆசிரியரால் இது ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது.

கீழ்க்கண்ட குறிகளுக்கு இது முக்கியமாக உபயோகப்படுகிறது.

(1) வலதுபுறம் லேசான சிறு தலைவலி. இது மாலைகளில் அதிகரிக்கும்.

வயிறு :— பசியின்மை காற்று ஒப்புஸம், களகளவென்று சத்தத்துடன் வயிற்றுப்போக்கு பச்சை நிறமாக இருக்கும்.

இது காலையில் அதிகரிக்கும், ரொம்பவும் பலஹீனம் மலம் பசுமைகலந்த மஞ்சளாகவும் இருக்கும்.

கைகால்களில் அடித்தாற்போல் வலி. மரமரப்பு. கால்கள் ஒரே இடத்தில் கொஞ்சநேரம் இருந்தால் மரமரத்துப்போகுதல். வலதுபக்கங்களில் ஒரே வலி.

ஒவ்வொரு மூட்டுகளிலும் வாய்வு வீக்கம், லேசான ஜுரம், அசைந்து அசைந்து படுத்துக்கொண்டால் அல்லது நடமாடிக்கொண்டிருந்தால் வலி சற்று சாதகம்.

லேசான ஜுரம், உடம்பெல்லாம் வலி குளிர், பித்தமான வாந்தி. கடுமையான தலைவலி. கடும்வியர்வை.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x, 6x.

---

## 41. TRAGIA INVOLUCRATA.

### டிராகியா இன்வல்யூக்ரேடா.

தமிழ் பெயர் :— காஞ்சொரி வேர்.

இது எங்கும் விளையக்கூடிய ஒரு சிறிய செடி. இதன் இலைகளிலும் காம்புகளிலும் சிறு சிறு மயிர்மாதிரி அடர்ந்திருக்கும். இந்தச்செடி நுனியில் வளர வளர உள்பக்கமாக சுருண்டு இருப்பதால் இன்வல்யூக்ரேடா என்ற பெயர் ஏற்பட்டது.

அலபதியில் ஜுரத்தில் சமனம் பண்ணக்கூடியதாகவும் சிறுநீரை பிரிக்கக்கூடியதாகவும், பித்தத்தைசமனம்செய்யக் கூடியதாகவும், தேள் கடிக்கு உபயோகமுள்ளதாகவும் கருதுகிறார்கள். ஆனால் முக்கிய மருந்தாக எண்ணவில்லை.



ஆயுர்வேத சித்தவைத்தியர்கள் இதை காசம் ஆஸ்துமா ஜலதோஷ ஜுரங்கள், சிறு சிரங்குகள், வறட்சையான இருமல், வாயு வலிகள் இவைகளுக்கு உபயோகம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த செடியின் மயிர்கள்பட்ட மாத்திரத்தில் தினவுடன்கூடிய தடிப்புகளும் எரிச்சலும் உண்டாகிவிடும். அதிகமாகபட்டுவிட்டால் உடல் முழுவதும் சுரந்துவிடும். ஐரோப்பா தேசத்து ஐவி செடியைப்போல் அவ்வளவு விஷமுள்ளதல்லவானாலும் அதற்குச் சமமாக இதைச் சொல்லலாம்,

ஆசிரியர் இதை ஹோமியோபதி முறையில் ப்ரூவ் செய்து அநேக கேஸ்களில் குணம் கண்டிருக்கிறார்.

கீழ்க்கண்ட குறிகள் முக்கியமானவை :—

இம் மருந்தை ரஸ்டாக்ஸுக்கு சமமாகவே உபயோகப்படுத்தலாம்.

மனது :— அசதி, பலவீனம், ஆத்திரம், உத்ஸாகமின்மை, அரைகுறை பிரக்ஞை.

தலை :— தலை சுற்றல், சற்று அசைத்துக்கொண்டிருந்தால் சாதகம், பின்புறத்தில் கடுமையான வலி. வலது பொட்டில் அதிகமான வலி,

கண் :— கண்சிவந்து எரிச்சலுடன் கூடி இருக்கும். கண்களிலிருந்து அதிகமாக ஜலம் வடிதல்,

மூக்கு:— ஜலதோஷம் அடிக்கடி பிடித்தல் தண்ணீர்மாதிரி நாசியிலிருந்துவடிதல். அடிக்கடி தும்மல், நாசித்துவாரங்களில் எரிச்சல்.

வாய்:— வாய் பூரவும் வெந்து குழிப்புண்களுடன் கூடியிருக்கும். வாயில் துர்நாற்றம் நாக்கு ருசியின்மை. நாக்கில் லேசாக வெண்மை படர்ந்திருக்கும்.

தொண்டை:— தொண்டையில் கரகரப்பு சளி, வறட்டு இருமல், இருமும்போது நாய்குலைக்கிறது மாதிரி சப்தம் கேட்கும். குத்திருமல் குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டால் கொஞ்சம் சாதகம், ஆனால் உடனே அதிகரிக்கும். அசைந்துகொண்டே இருந்தால் குறையும்.

சளி:— சளி வெண்மை நிறமாகவும் கம்பிபோன்றும் இருக்கும். மூச்சு விடுவது ரொம்பவும் சிரமம்.

ஆஸ்துமா பனிக்காலங்களில் அதிகம்.

வயிறு:— பசி மந்தம், வயிற்றில் ஒப்புஸம், அடிக்கடி ஏப்பம்.

மலம்:— சிறுநீர் தானறியாமல் பிரிதல், இழுப்பு அல்லது கடுமையான இருமலின்போது சிறுநீர் தானாகவே தெரித்தல்.

வயிற்று ஒப்புஸத்துடன் தண்ணீர் போன்ற மஞ்சளான மலப்போக்கு. ஜுரங்களில் தானறியாமலே மலப்போக்கு. மலம் துர்நாற்றம் வீசும். அடிவயிற்றில் வலி.



கைகால்கள்:— கால்களிலும், கைகளிலும் குடைச்சல் இரவில் அதிகம். மூட்டுகளில் வாய்வு வலி, வாய்வு வீக்கம், லேசான ஜுரம். தாகவறட்சை, வலி அசைக்கும்போது சற்று அதிகம் ஆனால் நடக்க வலி குறையும்.

ஜுரம்:— டைபாயிட், டைபஸ்மாதிரி லேசான ஜுரம். சில சமயம் கடுமையான ஜுரம். ஜுரத்தின் போது நினைவின்மை. ஜுரத்தில் சளியுடன் இருமல். கடும் தலைவலி, தாகவறட்சை.

தோல்:— அலர்ஜி என்னும் நிணைவுடன் கூடிய தடிப்புகள். சொரி சிரங்கு, தோலில் வியர்வைக்குரு சிறு சிறு சினைப்புகள் அரிப்பு தாங்கமுடியாமல் இருக்கும். சொப்பனங்களில் தண்ணீர் போன்ற திரவம் இருக்கும். மணல்வாரி அம்மை.

காதில் சீழ்வடிதலாலும், வேறு இடங்களில் சீழ்வடிதலாலும் ஏற்படும் ஜுரம்.

---

## .42. SYZYGIUM GAMBOLANUM.

### சைஜிஜியம் ஜம்போலேனம்.

தமிழ் பெயர்:— நாவல்பழம்.

இது ஒரு பெரியமரம் இந்தியா முழுவதும் வளருவது. இதன் பழங்கள் இனிப்பாகவும், உஷ்ணத்தை தணிப்பதாகவும் பசி தீவனம் உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

### அலபதிக் உபயோகங்கள்:—

விரையில் ஜம்புலின் என்ற சத்தும், டானின் சத்தும் ஒரு எண்ணெயும் முக்கியமாய் காணப்படுகின்றன.

பட்டையின் கஷாயம் டானின் சத்து அதிகமாக இருப்பதால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு, நாள்பட்ட இரத்தசீதபேதி, நாக்கு வெடித்து புண்ணாக இருப்பதற்கும், ஈறுகள் வீங்கி இருப்பதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

காய்ந்த விரையிலிருந்து எடுக்கும் சத்து மதுமேகத்திற்கு ஓர் சிறந்த மருந்தாக உபயோகப்படுத்தி வருகிறது. பல பரிசோதனைகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் செய்து மதுமேகத்திற்கு இது உபயோககரமானதல்ல என்று நிர்ணயம் செய்துவிட்டார்கள்.

### ஆயுர்வேதிக் உபயோகங்கள்:—

சிரங்குகளுக்கும், உஷ்ணபட்டிகளுக்கும் இரத்த சீதபேதிக்கும், மதுமேகத்திற்கும் ரொம்பவும் சிறந்தது என்று ஆயுர்வேத வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள்:—

டாக்டர் டட்ஜன் முதலியவர்கள் நீடித்துக்கொடுத்து மதுமேகத்தில் குணம் கண்டிருக்கிறார்கள்.

போரிக் தன்னுடைய மெட்டீரியா மெடிகா புஸ்தகத்தில் எழுதுகிறார். மதுமேகத்திற்கு இது ஒரு சிறந்த மருந்து வேறு எந்த மருந்தைக் காட்டிலும் இது துரிதமாக சர்க்கரை சத்தைக் குறைக்கிறது. மேல்பாதி உடம்பில் உஷ்ணத்துடன்கூடிய உஷ்ணத்தினால் ஏற்படும் வேர்குருக்களை சொஸ்தம் செய்கிறது. சிறு வேர்குருகள் ரொம்பவும் தினவு எடுக்கும். பெருந்தாகம், பலஹீனம், இளைப்பு சிறுநீர் ஏராளமாகப் பிரியும். மதுமேகத்தினால் ஏற்படும்



தோலில் நாள்பட்ட புண்கள். அநேக தேசத்தில் அநேக டாக்டர்கள் நாள்பட்ட ரணங்களுக்கும், மதுமேகத்திற்கும் இம்மருந்து சிறந்தது என்று அனுபவித்திருக்கிறார்கள். சில டாக்டருடைய அபிப்பிராயப்படி இதை அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டு வரவேண்டியிருக்கிறது.

இதை டையாபடீஸுக்கு உபயோகப்படுத்தும்போது மேல் உடம்பு முழுவதும் அரிப்புடன்கூடிய வியர்வைகளுடன் சிறிய சினைப்புமாதிரி இருக்கவேண்டும். பித்த வாய்வு உபத்திரவம் இருக்கவேண்டும்.

முக்கியமான வீரியம்:— 1x.

---

## 43. SANTALUM ALBUM.

### ஸான்டாலம் ஆல்பம்.

தமிழ் பெயர்:— சந்தனம்.

இந்த மரம் மைசூர் ராஜ்யங்களிலும், சைனாவிலும், வடக்கே ஆந்திர தேசத்து குப்பம் முதலிய பிரதேசங்களிலும் அதிகமாக வளருகிறது. இந்த மரத்தின் கட்டை வேர்குரு, சொறி சிரங்கு சிலசமயம் தலைவலி இவைகளுக்கு பிரயோசனப்படுகிறது. இதன் தைலம் வெட்டைச்சூட்டிற்கும், உள்ளுக்கு கபத்தை போக்குவதற்கும் உபயோகப்படுகிறது.

சந்தனக் கட்டையையும், அதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயையும் உஷ்ண ஜுரத்தை சமனம் செய்வதற்காக இந்திய வைத்தியர்கள் வெகுகாலமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

## ஹோமியோபதி உபயோகங்கள்.

இது அதிகமாக மருந்திற்கு உபயோகப்படுவதில்லை. இருந்தாலும் கீழ்க்கண்ட சில முக்கியமான குறிகளுக்கு உபயோகப்பட்டுவருகிறது.

நாள்பட்ட வெட்டை, சுறுநீர் பிரியும்பொழுது லேசான எரிச்சல், சிறுநீர் அடிக்கடி பிரிதல், லேசான ஜுரம் கடுமையான தலைவலி, ஜலதோஷம், தாகவறட்சை, உடம்பெல்லாம் கடுப்புவலி.

வெய்யில் காலத்தில் தோன்றும் வேர்குரு, அதிக நினைவு, சாதாரணமாக உஷ்ணத்தினால் ஏற்படும் சிறுநீர் கெடுப்பு, எரிச்சல்.

முக்கியமான வீரியம் :— 1x.

---

## 44. LAWSONIA ALBA.

### லாசோனியா ஆல்பா.

தமிழ் பெயர் :— மருதோன்றி.

இந்த சின்னச்செடி இந்தியாமுழுவதும் வளருகிறது. இதில் இரண்டு விதம் உண்டு. ஒன்று வெள்ளைப்பூ பூக்கும், மற்றொன்று சிகப்புப்பூ பூக்கும். இரண்டிற்கும் மருந்து குணங்கள் ஒன்றுதான். இது ஆயுர்வேத வைத்தியர்களாலும், அலபதிக் வைத்தியர்களாலும் ஸ்ப்ளீன் வீக்கத்திற்கும், மஞ்சட்காமாலை, குஷ்டம், முதலியவற்றிற்கு உபயோகப்படுத்திவந்தார்கள்.



ஹோமியோபதி முறையில் ஆசிரியர் அவர்களால் இது ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. கீழ்கண்ட சில முக்கியமான குறிகளுக்கு அனுபோக பூர்வமாக சிறந்தது என்று பலருடைய அனுபோகத்தின்பேரிலும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

இம்மருந்து முக்கியமாக கருப்பையில் வேலை செய்கிறது. உதிரப் பெரும்பாடு மாதவிடாய் காலத்தில் வயிற்று வலி, வலியுடன் கடுமையான வாந்தி, முதல்நாள் மட்டும் இருக்கும். மாதவிடாய் தங்கித்தங்கி வருதல்.

இரத்த சோகை, பசியின்மை விட்டு விட்டு அடிக்கும் நாள்பட்ட ஜுரங்கள் பித்தவாந்தியுடன் தலைவலி, ஸ்ப்ளீன் (மண்ணீரல்) வீக்கம், அத்துடன் உடம்பு இளைப்பு.

ஈரல் சரியாக வேலை செய்யாததால் பசி மந்தம், மஞ்சட்காமாலை.

கைகால்கள் அசதி, வலி, வாய்வு வீக்கங்கள்.

வெட்டை வெள்ளை ஒழுக்கு, ரத்தம் கலந்த வெள்ளை ஒழுக்கு, மாதவிடாய்காலத்தில் குறைவாக இருக்கும், இரண்டு மாதவிடாய் காலத்துக்கு நடுவில் அதிகமாக இருக்கும். வெட்டையினால் இடுப்புவலி, சதுரங்களில் வலி.

கைகால்களின் விரல்களின் இடுக்குகளில் பித்த வெடிப்பு, சீழ் கோத்துக்கொண்டு ஜலத்தில் பழகிவந்தால் அதிகரிக்கும்.

முறைக் காய்ச்சல், லேசான தலைவலி, அதிகமான உடம்பு வலி, ரொம்ப பலஹீனம் இவைகளுடன் கூடிய

முறைக்காய்ச்சல் பித்தமான வாந்தி. அடிக்கடி ஜுரம் வருவதால் ஏற்படக்கூடிய ஸ்ப்ளின் வீக்கம்.

முக்கிய வீரியங்கள் :— 3x, 6x, 30.

## 45. THESPESIA POPULNEA.

## தெஸ்பெசியா பாபுல்னியா.

தமிழ் பெயர் :— பூவரசு.

இது இந்தியாவின் எல்லா சமுத்திரக்கரை ஓரமும் அதிகம் வளரும் மரம். அலபதியில் இதற்கு மருந்து உபயோகம் ஒன்றும் கிடையாது. ஆயுர்வேத சித்தவைத்தியர்கள் இதை சொறி சிரங்குகளுக்கும், வாயுவினால் ஏற்படும் வீக்கங்களுக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள்.

இது ஒரு பெரிய மருந்து என்று ஆசிரியரால் ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. ஹோமியோபதியில் கீழ்கண்ட வியாதிகளுக்கு இது முக்கியமாக உபயோகப்படுகிறது.

காதில் சீழ்வடிதல், காதுவலி, காதுகுத்தல், தலைவலி;

வாந்தி, கசப்புடன் தண்ணீர்போல் வாந்தி, அஜீர்ணம் வயிற்றில் கல் போட்டாற்போல் கனம், பசியின்மை, நாக்கில் அதிகமாக எச்சில் ஊரல், வயிற்றில் சாப்பிட்டவுடன் கனம், வயிற்றில் லேசான சுருக், சுருக்கென்று வலி.

கைகால்களில் தசைகளில் வலி, தசைகளில் வீக்கம், மூட்டுக்கு மூட்டு வலி, நாள்பட்ட வயிற்றுவலி, இரவில் அதிகம் நடந்தாலும், அசைந்தாலும் மூட்டுகளில் வலி. ஜுரம் அதிகம் இருக்காது.



வாயுகட்டிகள் தசைகளின் ஆழத்தில் சீழுடன் கட்டி உண்டாகுதல் தோலில் வறட்சை, தோல் வறண்டு இருத்தல், சீழ் கோத்துக்கொள்ளும் சினைப்புகள். இரவில் அதிக நினைவுடன் கூடி இருக்கும்.

பொதுவாக இது நாள்பட்ட வாய்வு, வெட்டையினால் ஏற்படும் வாய்வு, கிரந்தியினால்ஏற்படும் வாய்வு முதலியவைகளுக்குச் சிறந்தது.

முக்கியமான வீரியம் :— 3x. 30x.

## 46. ARISTOCHIA BRAC.

## அரிஸ்டலோகியா.

தமிழ் பெயர் :— ஆடுதீண்டாப்பாளை.

இது, இந்தியா முழுவதும் ஈரம் உள்ள இடங்களில் படரும் ஓர் செடி. இதன் பெயருக்கு ஏற்றதுபோல் இதை ஆடுகூட தீண்டாது.

இந்தச் செடியில் ஓர் முக்கிய எண்ணை சத்தும் அரிஸ்டோலோசின் என்ற ஆல்கலாய்ட் சத்தும் இருக்கிறதாக கண்டுபிடித்திருக்கிறார்கள்.

### அலபதிக் உபயோகங்கள் :—

இது வயிற்றில் ஜாடராக்னியை அதிகப்படுத்துவதால் பசி மந்தத்திற்கு ஜாடராக்னி குறைவினால் ஏற்படும் அஜீர்ணத்திற்கும் இதை உபயோகப்படுத்துகிறார்கள். அதிக அளவில் கொடுத்தால் இது வாந்தியும், அடிவயிற்றில் வலியும் உண்டாக்குகிறது அரிஸ்டலோசின் என்ற சத்தை

அதிக அளவில் கொடுத்தால் இது சில சமயம் மூச்சுவிட முடியாமல் திணற அடித்து, பிரக்ஞையற்று சாவையும் உண்டாக்கிறது. இதன் சாரை அபார்ஷன் உண்டாக்குவதற்கு சாப்பிடுவார்கள். இதனுடைய வேர் நரம்புக்கு உத்ஸாகம் அளிக்கக்கூடியதாகவும் மாதவிடாய் உடைத்து வெளிப்படுத்தக்கூடியதாகவும், டானிக்காகவும், குழந்தைகளின் வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கிருமி இவைகளுக்காகவும் வயிற்றுப்போக்கு உண்டாக்குவதற்காகவும் கொடுப்பார்கள்.

## ஆயுர்வேத உபயோகங்கள்:—

ஆயுர்வேத சித்த வைத்தியர்கள் வயிற்றின் கிருமிகளை போக்குவதற்காகவும், கரப்பான் சிலந்தி நீரைப்போக்குவதற்காகவும், 80விதமான வாய்வுகளை போக்குவதற்காகவும் தாது புஷ்டி உண்டாக்குவதற்காகவும் உபயோகப்படுத்துகின்றார்கள்.

ஆசிரியர் அவர்களால் ஹோமியோபதி முறைப்படி இது ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக இது வாய்வு உபத்திரவங்களுக்கு சிறந்த மருந்து.

வாய்வு வலி, மூட்டுக்கு மூட்டு இரவில் அதிகரிக்கும் வலிகள், படுக்கையில் படுத்துக்கொண்டால் கைகால்களில் வலிகள். வலது புறத்தில் அதிகமாக இருக்கும் வலிகள்.

சுளுக்கு, பளுவான சாமான்களை தூக்குவதால் ஏற்படும் வலி, எலும்புக்குள்ளெல்லாம் அடித்துப்போட்டது போல் வலி. நாள்பட்ட வாய் வலிகள் இரவில் உள்ளங்கால்களில் மட்டும் வலி. நடந்துகொண்டேயிருந்தால் சற்று சாதகம்.



இதன் வாய்வு வலிகளில் வீக்கங்களும், ஜுரமும் இருக்காது.

வயிற்றில் சாப்பிட்ட இரண்டுமணி நேரத்திற்கெல்லாம் வலி, சாப்பிட்டவுடன் வயிற்றில் கல்போட்டாற்போல் கனதி, எது சாப்பிட்டாலும் ஏப்பம். சாப்பிட்டவுடன் அடி வயிற்றில் சங்கடம், சாயங்கால வேளையில் வயிற்று ஒப்புஸம், ஜீர்ணம ஆகாமை, ஏப்பம் பரிந்தால் சற்று சாதகம்.

வயிற்றுவலியுடன் வயிற்றுப் போக்கு இரவில் ஆசன வாய் எரிச்சல், கடுப்பு.

தண்ணீர் போல் வயிற்றுப்போக்கு. மலத்தில் சிறு சிறு கிருமிகள்.

இரத்தசீதபேதி கடுமையான இரத்தம் அதிகம் சீதகத்துடன் கூடிய மலம்.

மூலம் தள்ளுதல், மலம் பிரிவதற்கு முந்தியும், பிரிவதற்கு பிந்தியும் கடுப்பு.

வாந்தி; புளிச்ச ஏப்பம் சாப்பிட்டவுடன் நெஞ்சு எரிச்சல், வயிற்றில் ஓர் சங்கடம். ஹிருதய ஸ்தானத்தில் வலி.

நாக்கு :— அருசி, நாக்கில் வெண்மை படிந்திருத்தல், ஆகாரத்தைக் கண்டால் வெறுப்பு, நாக்கில் அதிகமாக எச்சில் ஊறல் ஆனால் தாகம், வறட்சை. பித்த வாந்தியுடன் தலைவலி, காலையில் எழுந்தால் அதிகரிக்கும். சாயங்கால வேளையில் அதிகரிக்கும். வெளியில் காற்றுட இருந்தால் வலி சற்று சமனம்.

ஜுரம் :— வாய்வு ஜுரம் உடம்புகளில் அசதி, வலி, ஜுரம் விட்டும் விடாமலும் அடிக்கும்; ஜுரத்தின்போது சிறு நீர் குறைந்து நாற்றமடிக்கும்.

சுவாசாசயம் :— இருமல், வறட்டு இருமல், இருமலுடன் இழுப்பு, மூச்சு திணறல் சளி அதிகமாக இருப்பதால் மூச்சுவிட முடியாமல் முகம் நீலம் பூத்து வியர்வை அதிகமாகி முன்புறம் சாய்ந்துகொண்டு இருக்கவேண்டியிருக்கும். ஆகவே இம்மருந்து ஆஸ்துமாவுக்கு அதுவும் மழை காலங்களிலும், பனிகாலங்களிலும் அதிகமாக சளி இல்லாமல் மூச்சுடன் கூடிய சுவாசகாசத்திற்கு நல்லது.

கோழை, மஞ்சளாகவும், வெண்மைநிறமாகவும், சிரமத்துடனும் வெளிப்படும்.

தோல் :- கருஞ்சிவப்பாக உடல் முழுவதும் ரொம்ப தினவுடன் கூடிஇருக்கும் அரி சிரங்குகள், தோல் முழுவதும் கருமேகம் சிரந்தி நீரினாலும், வெட்டைச்சூடினாலும் ஏற்படும் சொறி சிரங்குகள், சிரங்குகளிலிருந்து தண்ணீர் போன்ற கசிவு. சிரங்குகளுடன் கூட ஏற்படும் ஜுரம். நாள்பட்ட கரப்பான் அலைமாதிரி பொருக்கு தட்டிக் கொண்டு நமச்சலுடன் கூடி இருக்கும்.

இந்திரியப்பலஹீனம் :— இரவில் இந்திரியஸ்கலிதம் சிற்றின்பத்தில் நாட்டமின்மை, ஸ்திரீகளை கண்டாலே வெறுப்பு.

மாதவிடாய் காலத்தில் வெள்ளை ஒழுக்கு. யோனிக் குழாயில் அரிப்பு, கருப்பை வாயில் அரிப்பு, மாதவிடாய் காலத்தில் கடுமையான வயிற்றுவலி இச்சைக்குறைவு.

முக்கியமான வீரயங்கள் :— 3x, 6x.



அனுபவ கேஸ் :- சா. ஆண் வயது 56.

1957-ஆம் இவருக்கு இரண்டு முழங்காலுக்கு கீழும் ஆறுமாதகாலமாக கடுப்புவலி, நடந்தால் சற்று சமனமாக இருக்கும். இரவு நேரங்களில் மாத்திரம் தூக்கம்வரவிடாமல் வலிக்கும். இவருக்கு சுமார் 6 மாதகாலமாக இருந்து வந்தது. அநேக அலபதிக் வைத்தியர்கள் பார்த்து குணமடையாமல் இருந்தார்.

இரண்டொரு ஹோமியோபதி வைத்தியர்களும் இவருக்கு மர்குரிசால், லாசசிஸ், காலி பாஸ், மாக்பாஸ், ஆர்சனிக், ஆர்னிகா முதலியன கொடுத்துவிட்டுவிட்டார்கள். நம்மிடம் வந்தபொழுது இவர் சிறுநீரை பரிசோதித்ததில் பாஸ்பேட் சத்தும் அமில சத்தும், துர்கந்தத்துடனும் இருந்தது.

இவருக்கு சிறுநீர் பிரிவதற்கு முந்தி சிறிது வெள்ளை பட்டுக்கொண்டு இருந்தது.

மலச்சிக்கல் இருந்தது. மலத்துடன்கூடிய சிறுசிறு கிருமிகள் நெடுநாளாக வெளிப்பட்டுக்கொண்டு இருந்தது.

கால் வலி வருவதற்கு முந்தி இரண்டுவருட காலம் வயிற்றில் குன்மவலியால் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். இவருடைய சிறு வயதில் இவருக்கு வெட்டை நோய் இருந்தது.

சிகிச்சை :— இவருக்கு முதல்நாள் காலேஜில் என்ற ஊசியும். உள்ளுக்கு தூஜா 1000 வீர்யத்திலும்

இரண்டு நாளுக்கு கொடுக்கப்பட்டது. நான்கு நாட்கள் வரையில் ஒருவிதமான குணமும் தெரியவில்லை. ஐந்தாவது நாள் சிபிலினம் 200 நான்கு டோஸ் கொடுக்கப்பட்டது.

கானேகில் ஊசி, ஏழாவது நாள் சற்று சாதகம் இரவில் தூக்கம் வந்தது. ஒன்பதாவது நாள் மறுபடியும் வலி அதிகப்பட்டது.

இவரது சிறுநீர் துர்நாற்றம், வெட்டை இருந்ததினாலும் மலத்தில் பூச்சிகள் விழுந்துகொண்டிருந்ததினாலும், ஏற்கனவே வயிற்றுவலி இருந்ததினாலும் அரிஸ்டலோகியா 3x வீரியத்தில் தினம் 4 வேளை கொடுக்கப்பட்டது. வேளைக்கு 5 சொட்டு தண்ணீரில் கலந்து ஆகாரத்துக்கு முந்தி சாப்பிட்டுவரவேண்டியது.

இவருக்கு ஆகாரத்தில் ஒருவித மாறுதலும் செய்யவில்லை. இரண்டுநாள் அரிஸ்டலோகியா சாப்பிட்டபிறகு வலி நன்றாக குறைந்து இருந்தது. ஒரே வாரத்தில் முழுவதும் குணமடைந்துவிட்டார்.

---

## 47. OCIMUM SANCTUM.

### ஓசிமம் ஸாங்க்டம்.

தமிழ் பெயர் :— கருந்துளசி.

இது ஒரு சிறு செடி. இந்தியா முழுவதும் இந்துக்களால் பூசை செய்யப்படுவது. இது மிகவும் இனிய வாசனை பொருந்திய செடி. இதில் சுமார் 6-க்குமேற்பட்ட விதங்கள் இருக்கின்றன.



அலோபதி உபயோகத்தில் இதை இருமல், சளியுடைய வியாதிகளிலும், உஷ்ணத்தை தணிக்கவும், கையாளுகிறார்கள். விட்டுவிட்டு வரும் ஜுரத்திலும் இது உபயோகப்படுகிறது.

காது சீழிலும், மூக்கில் சளி நாற்றத்துடனிருக்கும். வியாதிகளிலும் இதை உபயோகிக்கலாம். இதன் விதைகளை நீர் பிரிக்கவும், இருமலிலும் உபயோகிக்கிறார்கள்.

ஆயுர்வேத டாக்டர்கள் இதை ஜலதோஷம், சளி, நாசி வியாதிகள், தேள்கடி, முறைக்காய்ச்சல், மலச்சிக்கல் இவைகளுக்கு உபயோகப்படுத்திவந்தார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள்.

மனது :— மறதி; எந்த விஷயத்திலும் மனதை ஈடுபடுத்தமுடியாது. எந்த விஷயத்தைப்பற்றியும் சிந்திக்க முடியாமை, குழந்தை அழுதுகொண்டேயிருக்கும், படுக்கையில் படுத்துக்கொண்டிருக்க விரும்பாது, உடலசதி, பதில் சொல்லும் போதே தூக்கம் வந்துவிடும்.

தலை :— தலைவலி, தலையில் 1000 ஆணிகள் அறைந்தார் போல் வலி, அழுக்குப்பிடித்துக்கொண்டால் சாதகம்; நடந்தால் அதிகரிக்கும், அமைதியாக இருந்தால் நலம். தலையை இறுக்கி பிணித்தால் சாதகம், உச்சந்தலையில் உஷ்ணம், தலையில் குளிர்ந்த தண்ணீர்விட்டால் அல்லது விசிறினால் சுத்தமாயிருக்கும்.

கண்கள் :— கண்கள் சிவந்து, தண்ணீர் வடியும், மூக்கில் சளியினால் கண் வியாதிகள், கண் கடுப்பு, ஏதாவது ஒரு வஸ்துவை உற்றுப்பார்த்தால் கண் மங்கல்.

காது:— காதுகளில் சப்தம், பலத்த சப்தம் கேட்டால் காது வலிக்கும், காதிலிருந்து நாற்றமடிக்கும் தண்ணீர் மாதிரி சீழ் வடியும், காது மந்தம், காதிலிருந்து உஷ்ணம் வெளிப்படும், சளியினால் காதுகளில் வலி.

நாசி:— அடிக்கடி தும்மல்களுடன் சளி, மஞ்சள் அல்லது வெள்ளை சளி.

முகம், வாய்:— வாயிலிருந்து தண்ணீர்மாதிரியான எச்சல் துப்பல், வாயில் அழுகல் நாற்றமடிக்கும்; வாயில் புண்கள்; குழந்தைகளுக்கு வாயிலும் நாக்கிலும் புண். நாக்கு முழுவதும் நல்ல சிவப்பு; அல்லது பக்கவாட்டிலும் மட்டில் சிவப்பு, மத்திய பாகம் கனமான மாசு படர்ந்திருத்தல். உதடுகள் வரண்டு, கருத்திருக்கும்.

தொண்டை:— தொண்டையில் வலி, விழுங்குவதற்கும் வலி, நடக்கும்போதும், இருமும்போதும் தொண்டையில்வலி, தொண்டையினுள் சிவப்பு, தொண்டைப்புண்கள் சளி கம்பிபோலிருக்கும், டான்சில் வீக்கம், தொண்டைக் கம்மல்.

வயிறு:— வயிறு ஒப்புசம், ஏப்பம், பசியின்மை, விக்கல், வயிற்றில் களகளவென்ற சப்தம், வயிற்றில் கனம், அடிக்கடி மலம் பிரிவதினாலும்கூட வயிற்றின்கனம் குறையாது; வயிற்றில் திருகும்வலி; ஈரல் ஸ்பிளீன் இருக்கும் இடங்களில் வலி; அழுத்தினால் வயிற்றில் களகளவென்ற சப்தம்.

மலம்:— மலம்தண்ணியாகவும், ஏராளமாகவும் துர்நாற்றத்துடனும், மஞ்சளாகவும், பச்சையாகவும், சில சமயம்



ரத்தம் கலந்தும், சீதமாகவும், கடும் ஜுரத்தில் தானறியாமலே மலம் பிரிதல்; மலம் பிரிந்ததும் வயிற்றில் உப்புசம் குறைந்தாற்போலிருந்து மறுபடியும் அதிகமாகிவிடும். மழைகாலத்திலும், வசந்தகாலத்திலும் ஏற்படும் பேதி.

சிறுநீர்:— குழந்தைகள் தானறியாமலே சிறுநீர் பிரிதல். சிறுநீர் பிரியும்போது எரிச்சல். சிறுநீருடன் சளிமாதிரி வெளிப்படுதல்;

பெண் ஜனனேந்திரியம்:— பிரஸவத்திற்குப்பிறகு நீடித்த ரத்தம்கலந்த உதிரப்பாடு. வெள்ளை ஒழுக்கு துர்நாற்றம் வீசும்.

மார்பு:— மார்பின் இருபுறங்களிலும் வலி; இருமும்போதும், தும்மும்போதும் அதிகரிக்கும்; படுக்கையில் நிம்மதியாக படுக்கமுடியாது; ஆஸ்த்மா; மார்பில் இழுக்கும் சளி; (குழந்தைகளுக்கு ஏற்படும் கணை இழுப்பிற்குச் சிறந்தது); நடு மார்பு எலும்பில் வலி.

தோல் வியாதிகளுக்கும் உபயோகமானது.

பொதுவாக குழந்தைகள் சிணுங்கிக்கொண்டும், சிடுமூஞ்சியாகவும், சதா அழுதுகொண்டும் "காமோமில்லா' மாதிரி இருப்பார்கள். இதன் குறிகள் 'சீனா ஆர்செனிகா'வுடன் ஒத்திருக்கும்.

பொதுவாக 'ஞாபகமறதி' இந்த மருந்திற்கு அதிகம்.

டைபாயிட், நிமோனியா, குழந்தையின் கணை இழுப்பு, சளியுடன்கூடிய ஜுரங்கள்; இன்புளுயின்சா, வயிற்றுக் கிருமிகள்; ஜலதோஷத்துடன் கூடிய ஜுரம், தலைவலி;

கண்நோய்கள், கண்களில் சிவப்பு, சினைப்புகள், வலி, நீர்வடிதல், காதில் சீழ் வடிதல்; காதுமந்தம் முதலியவை களுக்கும் சிறந்தது.

ஆஸ்த்மாவிற்கு மிகவும் சிறந்தது. அதுவும் குழந்தை களுக்கு மிக்க நல்லது. அரேலியா, லோபீலியா, பரைட்டா முதலான மருந்துகள் குணம் தராவிடினும் இது இழுப்பை குணப்படுத்தும்.

வாய்ப்புண், துர்நாற்றம் வீசும் எச்சில், பல்வலி. ஜுரத்தில் மிகவும் சிறந்த மருந்து. உடம்பு முழுவதும்வலி, கைகால்கள் சில்லிப்பு, இருமல் முதலியவற்றுடன்கூடி இருக்கும்,

இது ஒரு சிறந்த கிருமி நாசினி. ஒரு கதை கூட உண்டு. துளசிசெடியின் மத்தியில் ஒரு பல்லியை அடித்து ஒருவர் 5, 6 நாட்கள் தற்செயலாகப் போட்டிருந்தார். பிறகு பார்த்தபொழுது பல்லியின் தேகம் கெடாமல் இருக்கக்கண்டார். இதிலிருந்து 'துளசி' சிறந்த கிருமி நாசினி மருந்து கண்டறிந்தார்.

அம்மை முதலான தொத்து நோய்களால் பாதிக்கப் பட்ட வீடுகளில் துளசிச்சாறை தெளித்துவைத்தால் கிருமி கள் நாசமடையும்.

அனேகம் கேசுகள் பல ஹோமியோபதி டாக்டர் களால் சௌகரியம் பண்ணப்பட்டு இருப்பதால் ஆசிரிய ரின் சொந்த அனுபவங்களை எழுதி இடத்தை நிரப்ப வில்லை.



இந்த வருடம் (1957) ஜூன் மாதம் உலகம் முழு வதும் பரவியிருந்த பெருவாரியான இன்ப்ளுயன்சா ஜுரம் எல்லோருக்கும் தெரியும். இச் ஜுரத்தில் சுமார் 80 கேசு கள் வரை ஆசிரியர் 'ஓசிமம் சாங்டம்' 1x, 3x வீரியங் களைக்கொண்டே குணப்படுத்தியிருக்கிறார்.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x, 6x, 200.

---

## 48. CEPHALANDRA INDICA.

### சிபலாண்டிரா இண்டிகா.

தமிழ் பெயர் :— கோவை.

இது ஒரு படரும் செடி. வெள்ளரி ஜாதியைச் சேர்ந்தது. இந்தியா முழுவதும் வளருகிறது. கோவைப் பழத்தின் சிகப்பு சரித்திரப் பிரசித்தமானது. பழங்களை சில சமயம் காய்கறியாக உபயோகிப்பார்கள்.

மருந்திற்கு கசப்புக்கோவைதான் சிறந்தது. தித்திப்பு விதம் பிரயோசனப்படாது.

அலபதிக் டாக்டர்கள் இதில் ஒரு ஜீர்ணம் செய்யும் சத்தும், ஒரு ஹார்மோன்சத்தும், ஆல்கலாய்டு சத்தும் இருக்கிறதாகக் கண்டிருக்கிறார்கள்,

கர்னல் சோப்ரா அவர்கள் இந்த செடி சிறு நீரின் சர்க்கரைச் சத்தை குறைக்கக்கூடியதல்ல என்று அபிப்பி ராயப்படுகிறார்.

ஆயுர்வேத உபயோகங்கள் :—

ஜுரம், நீர்ச்சுரப்பு, வயிற்றிலிருந்துவரும் ரத்தமான வாந்தி, மஞ்சட்காமாலை, வயிற்றுப்பிசம், விஷசம்பந்தமான பிளவைகள், கட்டிகள் எரிச்சலுடன் கூடியிருந்தால் சமனப்படுத்தும்; மதுமேகத்திற்கும் நல்லது.

## ஹோமியோபதி குணங்கள்.

இது ரீரியமுறைப்படி ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது.

மெட்டீரியா மெடிகா: டயபிடிஸ் என்ற மதுமேகம் (நீரிழிவு), பித்த வியாதிகள்; பிளவை; கட்டிகள்; ராசப் பிளவை, உடம்பு முழுவதும் எரிச்சல், ஏராளமான சிறுநீர், மயக்கம்; ரத்தசீதபேதி, சூரியவெப்பத்தில் அதிகநேரம் இருப்பதால் தலைவலி, முகம், உடல் எரிச்சலுடன் கூடிய நாட்பட்ட ஜுரம்; மஞ்சட்காமாலை வயிற்றில் காற்றுப் பிசம்; வயிற்றிலிருந்து ஏற்படும் ரத்தவாந்தி, ரத்தத்தில் விஷத்தன்மை.

மனது:— ஆத்திரப்படுதல், எந்தக்காரியம் செய்வதற்கும் உற்சாகமின்மை.

தலை:– கிறுகிறுப்பு, சிறுநீர் பிரிந்தபிறகு அதிகரிக்கும்

முகம்:– முகம் முழுவதும் சிவப்புடன் எரிச்சல்.

கண்:– எரிச்சல்.

வாய்:– அதிக தாகவரட்சை; வாய் வரண்டிருத்தல்; சிறுநீர் பிரிந்தபிறகு அதிகரித்தல்.

தொண்டையில் வரட்சி.



பசி:— பசிமந்தம் வயிறு காற்றினால் ஒப்புசம்.

சிறுநீர்:— ஒவ்வொரு தடவையிலும் ஏராளமான சிறுநீர் பிரியும்; சிறுநீர் பிரிந்த பிறகு பலவீனமும் அசதியும், சிறுநீரில் சர்க்கரை சத்தும் இருக்கும்.

மலம்:— பச்சையான சீதம் கலந்த சீதபேதி; மலம் பிரியுமுன்னரும், பின்னரும் வலி.

உணர்ச்சிகள்:— உடல் முழுவதும் எரிச்சல், சில்லென்ற தண்ணீர்பட்டால் சமனம். சத்தம் முதலானவைகள் அதிர்ச்சி உண்டாக்கும்.

## அனுபவ கேஸ்.

நாராயணய்யர் வயது 54—1954.

இரண்டுவருட காலமாக இவருக்கு நீரிழிவு வியாதி இருந்துவந்தது.

அவருக்கு கீழ்க்கண்ட குறிகள் இருந்தன.

ஆத்திரம்; அசதி, அத்துடன் உடல் பலவீனம். ஏராளமான சிறுநீர் கழியும். சிறுநீர் பிரிந்ததும் ரொம்ப பலவீனம். 4 சதவிகிதம் சர்க்கரை சத்து காணப்பட்டது. கடுமையான தாகம். உடம்பு முழுவதும் எரிச்சல்.

இவருக்கு மேற்கண்ட குறிகளைக்கொண்டு 'சிபலாண்டிரா' 3x வீரியத்தில் 5 சொட்டு வேளைக்கு, தினம் 3 வேளை கொடுக்கப்பட்டது.

15 நாள் கழித்து இவர் உடம்பைப் பரிசோதித்ததில் ரொம்பத்தேறியிருந்தார். பலவீனம் குறைந்து, சிறுநீர் சர்க்கரை சத்தும் 2சத விகிதமாக குறைந்திருந்தது.

இரண்டுமாதகாலம் தொடர்ச்சியாக சாப்பிட்டுவந்ததில் இவருக்கு சர்க்கரை சத்து பூர்ணமாக குறைந்துவிட்டது.

இவ்விரண்டுமாத காலமும் அரிசி, மாவுப்பண்டம், சர்க்கரை முதலியன ஆகாரவிலக்கு ஏற்படுத்தப்பட்டது.

மறுபடியும் ஒருமாதகாலம் சிபலாண்ட்ரா 3X கொடுக்கப்பட்டது இந்த மாதத்தில் ஆகாரத்தில் பத்தியம் ஒன்றும் இல்லை.

பிறகு ரத்தப்பரி சோதனையும் செய்துபார்க்கப்பட்டது. கொஞ்சம்கூட சர்க்கரைசத்து தென்படவில்லை.

பிறகு 5 வருடகாலம் தொடர்ந்து அவரைக்கவனித்து வந்ததில் சர்க்கரை சத்தே இல்லை.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x, 6x.

---

## 49. GYMNEMA SYLVESTRE.

### ஜிம்னெமா சில்வெஸ்ட்ரே.

தமிழ் :— சிறு குறிஞ்சா.

தென்னிந்தியா, மத்தியப்பிரதேசம், ஆபிரிக்கா முதலிய தேசங்களில் பெருவாரியாக சிறுகொடி வளருகிறது.



### அலபதிக் உபயோகங்கள் :—

இதன் இலைகளிலிருந்து ஜிம்னெமிக் அமிலமும், ஒரு கசப்பு சத்தும், சில க்ளுகோஸைடும் பிரிக்கப்பட்டன. கால்சியம் ஆக்சலேட், டார்டாரிக் ஆசிட் முதலியனவும் இருக்கிறது. இன்னும்பல சத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவைகள் மிகவும் விரிவாக பரிசோதிக்கப்பட்டன. ஒன்றுவது சர்க்கரையைக்குறைக்கும் சக்தியை பெற்றிருக்கவில்லை.

ஆகவே இதை இன்னும் நன்குகப்பரிசோதிக்க வேண்டுமென்று சொல்கிறுர் டாக்டர் சோப்ரா 'இது ஒரு டானிக், உஷ்ணசமனி, சுரத்திலும், இருமலிலும் குணமளிக்கிறது. விளக்கெண்ணெயுடன் கலந்து இதன் வேரின் பவுடரை தேள்கடிக்கும், பூச்சிக்கடிக்கும் கொடுக்கலாம். சுரல்குலைக்கட்டிகளுக்கும் இதன் இலையைஉபயோகிக்கலாம் நாக்கில் கசப்பு, தித்திப்பு ருசியை மறைக்க இதன் இலைகளைமென்று தின்னலாம்.' என்று டாக்டர் கோரி எழுதுகிறுர்.

### ஆயுர்வேத உபயோகங்கள்:—

ஆயுர்வேத புத்தகத்திலும் ஜிம்னெமா ஜலதோஷத்தினுல் ஏற்படும் தலைவலிக்கும், சிறுநீர் சர்க்கரைக்கும், மூலத்திற்கும் தேவலாம் என்று கூறப்பட்டிருக்கிறது,

### ஹோமியோபதி உபயோகங்கள்.

அனேக ஆங்கிலேய டாக்டர்களாலும், புகழப்பட்ட இந்த 'ஜிம்னெமா' 'டயபிடிஸ்' வியாதிக்கு ஒரு சிறந்த மருந்து. எந்தவிதமான மதுமேகங்களாயிருந்தாலும்

இதைக் கண்ணை மூடிக்கொண்டு எந்த போடன்சியிலும் கொடுக்கலாம், 15 நாட்களிலேயே சிறுநீரின் சர்க்கரை சத்து குறைந்தும், தாதுபுஷ்டியும் உண்டாகும்.

கீழ்க்கண்ட முக்கியமான குறிகள் டாக்டர் சர்மா அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மனது தளர்வுற்றிருத்தல்.

உடல் தசைகள் தளர்ந்திருத்தல்; சாகும் நிலைமை வரையிலும் நாம் தேறிவிடுவோமென்ற எண்ணம்.

தாகவரட்சை:– ஏராளமாக அடிக்கடி குடிப்பர்.

சிறுநீர் :– சர்க்கரை சத்து அதிகரித்துக்காணும்; அதிகமாக சிறுநீர் பிரிவதால் பலவீனம் ஏற்பட்டுவிட்டதென்று நோயாளி சொல்லுவார்.

சிறுநீரின்கலர் வெள்ளையாகவும், அடிக்கடியும், அமிதமாகவும் பிரியும்.

தோல் :— உடல் முழுவதும் எரிச்சல்; சிரங்குகளும், கட்டிகளும், எரியும், டயபிடிக் பிளவை உடலில் எங்கும் கிளம்பும்.

பலவீனம் அதிகரித்துவரும்.

ஆண் பெண் சேர்க்கையினால் சர்க்கரை சத்தும், சிறுநீரும் அதிகரிக்கும்.

புணரும் சக்தி குறைந்துபோய் விட்டிருக்கும்.

முக்கியமான வீரியம் :— 1x, 3x. 6, 30.

---



## 50. ASWAGANDHA.

### அசுவகந்தா.

### (Withania Radix. அமுக்கிராக் கிழங்கு)

இந்தியா, சிலோன், ஆப்கனிஸ்தானம், பலுசிஸ்தானம் முதலான இடங்களில் பெரும் அளவில் கிடைக்கிறது.

அலோபதியில் இதை டானிக்காகவும், இந்திரிய வீர்யத்திற்கும், வாயு ரோகங்களுக்கும், அதிக வயதினால் ஏற்படும் தளர்விற்கும், க்ஷயரோகத்திற்கும்கூட உபயோகப்படுத்துகிறார்கள். இது சிறுநீரையும் பிரிக்கும், தூக்கமும் உண்டுபண்ணும். வேரை அரைத்து பிளவைகள், புண்கள், வலியுள்ள வீக்கங்களுக்குக்கட்டலாம்.

### ஆயுர்வேத உபயோகங்கள் :—

கபம், சூலை, கரப்பான், பாண்டு, வெப்பு, ஆயாசம் தாது நஷ்டம், முதலியவைகளுக்கு சிறந்தது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். பெரும்பாலும் இதை மற்றும் பல சரக்குகளுடன் சேர்த்து லேகியமாக தயாரித்து டானிக்காக உபயோகப்படுத்துகிறார்கள்.

### ஹோமியோபதிக் உபயோகங்கள் :—

இதை இன்னும் சரிவர ப்ரூவ் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் கீழ்கண்ட வியாதிகளுக்கு ஆசிரியர் அவர்களாலும் மற்றும் பல ஹோமியோபதியர்களாலும் மிகச் சிறந்தது என்று அனுபவத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. இது ஒரு சிறந்த டானிக் என்பதில் சந்தேகமில்லை.

நரம்புத் தளர்ச்சி, சோம்பல், அசதி, தாது நஷ்டம், பசியின்மை, உடல் இளைப்பு, இவைகளுக்கு சிறந்தது. ஆகவே க்ஷயரோகத்தில்கூட இளைப்பிற்கு டானிக்காக உபயோகப்படுத்தவேண்டும் ஞாபகமறதி, உடல் உஷ்ணம் வாயுவீக்கங்கள், உடல் முழுவதும் அடித்துப்போட்டாற் போல் வலி, உடல் வலியினால் இரவில் தூக்கக்குறைவு உஷ்ணத்தினால் சரீரத்தில் காணும் கோடைக் கொப்பளங்கள், ரத்தக்கட்டிகள், விடாதவியாதிகளினால் ஏற்படும் பலவீனம் முதலியவை குணமாகும்.

*முக்கிய வீரியங்கள் :—* 1x, 3x.

---

## 51. BLUMEA ODORATA.

### ப்ளூமியா ஒடராடா.

இது இந்தியாவில் புகையிலைச் செடிமாதிரி வரண்ட பாலைப் பிரதேசங்களில் வளரும்.

### ஆயுர்வேத உபயோகங்கள்:-

இது ரத்தப்பெருக்கை தடுக்கும் ஒரு பெரிய மருந்து. ஆகவே இதை ரத்தமூலம், ரத்தசீதபேதி, ரத்தவெள்ளை ஒழுக்கு; கருப்பச்சிதைவில் ரத்தப்பெருக்கு, மற்றைய ரத்தப்பெருக்குகளுக்கும், சிறந்தது என்று உபயோகப் படுத்தினார்கள்.

இலைகள் பேதிக்கும், பாண்டுவீக்கத்தை குறைக்கவும் உபயோகப்படுத்தினார்கள். வயிற்றுக் கிருமிகளை நாசம் செய்யவும் வல்லது.



உடல் எரிச்சலை தணிக்கவல்லது; வாயு வலிகள், பாண்டு வீக்கங்கள், சிரங்குகள், மலச்சிக்கல், சிபிலிஸ், சொரி சிரங்குகள், வெட்டை, மாதவிடாய் வலி, முறைக் காய்ச்சல் இவைகளுக்கும் உபயோகப்படும்.

### ஹோமியோ உபயோகம்.

சரியானபடி ப்ரூவிங் ஆகவில்லை. ஆனாலும் பலரால் கீழ்க்கண்ட குறிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

ரத்தமூலம், ரத்தசீதபேதி, கருப்பையிலிருந்து ரத்த ஒழுக்கு; ரத்தப்பெருக்கு, ரத்தவெள்ளை, ரத்தவெட்டை, உதிரப்பெருக்கு, இரண்டு நாளைக்கு ஒருதரம்வரும் முறைக் காய்ச்சல்,

நாய் குரைப்பது போன்ற, அல்லது தட்டு ஓசைப் படுவது போன்ற சத்தத்துடன் இருமல், இருமலுடன் தொண்டைக் கம்மல்.

*முக்கிய வீரியம் :—* 1x, 3x.

---

## 52. EMBELIA RIBES.

### எம்பெலியா ரிபிஸ்.

*தமிழ் :-* வாயுவிடங்கம்.

இது சிலோன், இந்தியாமுழுவதும் காணப்படுகிறது இதில் 2½-சதவிகிதம் எம்பெலிக் அமிலமும், இன்னும் சில எண்ணை முதலிய வஸ்துக்களும் கிடைக்கின்றன.

நாடாப்பூச்சிக்கு சிறந்த மருந்தென்று கருதப்படுகிறது. தோல் வியாதிக்கும், வயிற்றுப்பொருமலுக்கும், வாயுவிற்கும் கொடுக்கப்படுகிறது.

ஆயுர்வேத டாக்டர்களும், பூச்சிகளைக்கொள்வதற்கும் பூச்சிகளுடன்கூட இருக்கும் மூலத்திற்கும் நல்லது என்று கூறியிருக்கிறார்கள்.

### ஹோமியோபதி உபயோகம்.

இது டாக்டர் S. G. கோஷ் அவர்களால் ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது.

இது பூச்சிகளினால் ஏற்படும் வாயுப்பொருமல், அஜீர்ணம், பேதி முதலியவற்றிற்கு பெரும்பாலும் குழந்தைகளுக்குச் சிறந்தது.

இம்மருந்தின் சிறுநீர் துர்நாற்றமடித்துக்கொண்டும், ரத்தச் சிவப்பாகவும் இருக்கும். இது முக்கிய குறி.

சிணுங்குதல், சதா ஆத்திரம், பல் நெற நெறவென்று கடித்தல்; சதா மூக்கை நோண்டிக்கொண்டிருத்தல்; நாக்கு வறண்டு, குமட்டலும், வயிறு பெருத்து, மலம் ஜீர்ணமாகாமல், சிறுநீர் சிவந்தும், நாற்றமடித்துக்கொண்டுமிருக்கும். தூக்கத்தில் வீறிடுதல், ஆசனவாய் அரிப்பு, மலத்துடன் கிருமிகள்.

ஆசிரியரின் சொந்த அனுபவத்தில் சினு, சாண்டோனின், முதலிய மருந்துகளைக்காட்டிலும், எம்பிலியா கிருமிகளை நாசம்செய்வதில் சிறந்தமருந்து. அனேக குழந்தைகளுக்கு இதிலிருந்து சர்பத்தாகத் தயார்செய்து கிருமிகளைக் கொல்வதற்காக வெற்றிகரமாக கையாண்டிருக்கிறார்.

முக்கியமான வீரியம் :— 1x.

---



## 53. GOSSYPIUM HERBACEUM.

### காசிபியம் ஹெர்பேசியம்.

தமிழ்:— பருத்தி

இதன்வேர் பட்டையில் சாலிசிலிக் ஆசிட், டைஹைட்ராக்சி பென்சாயிக் ஆசிட், மற்றும்பல அமிலங்களும், கிடைக்கின்றன.

அலோபதியர்கள் இதை கருச்சிதைவு உண்டாக்குவதற்கும், மாதவிடாய் வெளிப்படுத்துவதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள் :—

இதன் டிஞ்சர் தாது புஷ்டியை உண்டுபண்ணுவதற்கும், ஸ்திரீகளுக்கு தங்கியிருக்கும் மாதவிடாயை வெளிப்படுத்துவதற்கும், கருச்சிதைவு ஏற்படுத்துவதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

கருச்சிதைவிற்கு இதன் டிஞ்சர், சாபினு, எபியால், சிகேல், அஸ்டிலேகோ முதலியன கலந்தும் உபயோகப்படுத்துவதுண்டு.

முக்கிய வீரியம், டோசும் தாய்த்திராவகத்தில் 10-20 சொட்டு விகிதத்தில் கொடுக்கலாம்.

## 54. MOMORDICA OFFICINALIS

### மொமார்டிகா அபிசிஞலிஸ்.

தமிழ் :— கசப்புப் பாகற்காய்.

அலோபதியர்கள் இதை மூலத்திற்கும், தேள்கடிக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள்.

ஹோமியோபதி முறையில் இது ஆசிரியரால் உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் இலை, காய், தண்டு முதலியவற்றிலிருந்து டிஞ்சர் தயார் செய்து தாய்த்திராவகமாக 10–15 சொட்டு வீதம் தினம் 3 வேளை சாப்பிட்டு வந்தால் எந்தவிதமான நாள்பட்ட மதுமேகமானலும் 3மாத காலத்தில் பூர்ண குணமாகிறது.

இத்துடன் 'ஜிம்னெமா' யூரேனியம், சிபலாண்ட்ரா, அப்ரோமா முதலியவற்றைக் கவனிக்கவும்.

முக்கியமாக தாய்த் திராவகம்.

---

## 55 PLUMBAGO ZEYLONICA.

### ப்ளம்பாகோ.

தமிழ்:— கொடிவேலி.

இது எங்கனும் வளரும ஒரு சிறியசெடி.

### அலோபதி உபயோகங்கள் :—

இதன்வேரிலிருந்து பம்பளாஜின் என்ற சத்துப்பொருளைப்பிரித்து எடுத்தார்கள். இது மத்திய நரம்புகளில் தாக்குகிறது. அதிகஅளவில் கொடுத்தால் வாதம் ஏற்படுத்தி மரணமும் சம்பவிக்கிறது. ரொம்ப குறைந்த அளவில்



கொடுத்தால் தசைகளுக்கு ஊக்கம் அளிக்கிறது. அதிக அளவு வாதத்தை உண்டாக்குகிறது. சுவாசக்குழாயின் தசைகள்கூட தாக்கப்பட்டு வாதத்தால் பிடிக்கப்பட்டு மரணம் ஏற்படுகிறது. இது தோலைத் தாக்குவதால் வெண் குஷ்டத்திற்கும் சில தோல் வியாதிக்கும் உபயோகப் படுகிறது. இது தலைமயிர் வழுக்கைக்கும் உபயோகப் படுகிறது.

### ஆயுர்வேதிக் உபயோகங்கள் :—

சரகசுச்ருதர் முதலியவர்கள் அஜீர்ணத்திற்கும், பாண்டு வீக்கத்திற்கும், தோல் வியாதிகளுக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள்.

### ஹோமியோபதி உபயோகங்கள் :—

இது நம் ஆசிரியரால் கீழ்க்கண்ட முக்கிய குறிகளில் ப்ரூவ் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது.

கை கால்கள் :— கை கால்களில் குடைச்சல், வாயு வலிகள் இரவில் அதிகம் இடுப்புவலி, கை கால்கள் ரொம்ப அசதி.

பக்ஷவாதம்:- கால்கள் வாதத்தினல் சக்தியற்றுபோகும். வலதுபுறம் அல்லது இடதுபுறம், வலதுகால், இடதுகை அல்லது வலதுகை இடதுகால் இம்மாதிரி மாறி மாறி வாதத்தால் பிடிக்கப்படும். தோள்பட்டைவலி, கை பின்புறம் நீட்டமுடியாத வலி.

கைகால்களில் மரமரப்பு.— ஒரே நிலையில் அதிக நேரம் இருந்தால் கைகால்கள் மறத்துப்போகுதல்.

வெட்டையினால் ஏற்படும் வாத சூலை:— மூட்டுத் தசைகளில் வலி.

நாள்பட்ட கரப்பான் கிரந்தி நீர்;–நீர் கசியும் தோல் வியாதிகள்.

ஆஸ்துமா, ஈளை இழுப்பு:– பனிக்காலங்களில் அதிகரிக்கும். மூச்சு திணறல்; வெண்குஷ்டத்திற்கும் இதை மேலில் தடவிவரலாம்.

முக்கிய வீரியங்கள் :— 1x, 3x,

## 56. PSORALEA CORYLIFOLIA.

### ஸொரேலியா காரிலிபோலியா.

தமிழ் :— கார்போக அரிசி.

ஹிந்திப் பெயர் :— பௌசி

ஆயுர்வேதத்தில் இதை குஷ்டத்திற்கு உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள். தோல் வியாதிகளுக்கும், வெண்குஷ்டம், ஸோரியாஸிஸ் முதலிய வியாதிகளுக்கும் உபயோகப்படுத்திவந்தார்கள். இதை நரம்புத் தளர்ச்சிக்காகவும் கொடுத்துவந்தார்கள்.

### அலோபதி உபயோகங்கள்.

இதிலிருந்து ஏற்படும் எண்ணெய் தோலில் வேலை செய்வதால் வெண்குஷ்டத்திற்கு மேலில் பூச்சாக உபயோகப்படுத்துகிறார்கள்

வேறு எந்த வியாதிக்கும் இது உபயோகப்படாது. ஹோமியோபதியில் ஆசிரியரும், பலரும் வெண்குஷ்டத்திற்கும் நாள்பட்ட கிரந்தி நீரினால் ஏற்படும் தோல் வியாதிக்கும் உபயோகப்படுத்துகிறார்கள் அதிகமாகத்தடவினால் கொப்பளங்கள் உண்டாகிவிடும்.

முக்கிய வீரியம்;– தாய் திராவகம்.

தாய் திராவகத்துடன் சம பங்கு நீரடி முத்து எண்ணெயுடன் கலந்து உபயோகிக்கலாம்.

— முற்றும். —

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 10 | ப்ரான்சியல் | ப்ரான்கியல் |
| 11 | 13 | சண்ணும்பு | சுண்ணும்பு |
| 17 | 5 | கடுக்காவில் | கடுக்காயில் |
| 17 | 22 | சுக்ருதர் | சுச்ருதர் |
| 17 | 24 | இவைகளை | இவைகள் |
| 18 | 3 | களவிட்டால் | கள் குடியால் |
| 29 | 20 | வயிற்றுப் பொருவல் | வயிற்றுப்பொருமல் |
| 30 | 19 | குழந்தகளின் | குழந்தைகளின் |
| 32 | 1 | பில | பில் |
| 32 | 13 | சீதபோதி | சீதபேதி |
| 33 | 16 | முனையில் | முறையில் |
| 35 | 7 | அடங்காக | அடங்காத |
| 42 | 9 | உபயோகப்படுத்துகிறது | உபயோகப்படுகிறது |
| 46 | 22 | டிக்சர் | டிஞ்சர் |
| 62 | 12 | ட்ரைகோசாந்தில் | ட்ரைகோசாந்திஸ் |
| 75 | 4 | கர்பவதி | புஷ்பவதி |
| 75 | 10 | சமம் | சிரமம் |
| 77 | 6 | ½ நேரம் | ½ மணி நேரம் |
| 87 | 7 | ஜீரத்தோடு | ஜுரத்தோடு |
| 86 | 17 | Baccillary | Bacillary |
| 88 | 18 | கண்டஎரிவு | கண்டை ஏறுதல் |
| 89 | 15 | ரிஸினேஸ் | ரிஸினஸ் |
| 91 | 17 | அப்போஸைனஸி | அப்போசைனஸி |
| 97 | 12 | ஒழுங்கிற்கும் | ஒழுக்கிற்கும் |
| 99 | 25 | பிரயோசப்படுவதில்லை | பிரயோசனப் படுவதில்லை |
| 106 | 15 | உள்ளன்கையில் | உள்ளங்கையில் |
| 112 | 10 | ம்யூநஸ் | ம்யூகஸ் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 112 | 11 | கொஞ்சம் | கொஞ்சம் வலி |
| 112 | 22 | பேரன்ற | போன்ற |
| 120 | 16 | புணைந்து | பிரிந்து |
| 127 | 12 | சீக்கிரமான | சீக்கிரமாக |
| 127 | 21 | சின்னேரியா | சினரேரியா |
| 128 | 17 | படுத்துவது | படுவது |
| 136 | 1 | ஒழுஙநாக | ஒழுங்காக |
| 147 | 9 | திணைவுடன் | தினைவுடன் |
| 147 | 12 | சொப்பனங்களில் | கொப்பளங்களில் |
| 147 | 16 | Gambolanum | Jambolanum |
| 148 | 4 | ஈருகள் | ஈறுகள் |
| 149 | 1 | அரேக் | அநேக |
| 150 | 4 | சுறுநீர் | சிறுநீர் |
| 150 | 9 | நினைவு | தினைவு |
| 150 | 10 | கெடுப்பு | கடுப்பு |
| 153 | 9 | Aristochia | Aristolochia |
| 154 | 2 | சாஸயும் | சாவையும் |
| 154 | 3 | உண்டாக்கிறது | உண்டாக்குகிறது |
| 154 | 12 | சிலந்தி | கிரந்தி |
| 154 | 22 | சுலுக்கு | சுளுக்கு |
| 154 | 24 | வாய் | வாயு |
| 155 | 5 | சனதி | கனதி |
| 156 | கடைசி | வீரயங்கள் | வீரியங்கள் |
| 162 | 5 | பளை[illegible] | ப்ளாட்டா |
| 172 | 8 | S. G. | S. C. |
| 174 | 20 | பம்பளாஜின் | [illegible]ம்பாஜின் |

121 முதல் 126 என்ற பக்கங்கள் தவறுதலாக விடுபட்டுவிட்டன.

No. 101769

LL
N57